# உதயன்

28 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 073 வள்ளுவர் ஆண்டு 2044 தை 25 வியாழக்கிழமை (07/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily




சுப்பர் - 6 சுற்றுக்குள் இலங்கை 23



12ஆயிரம் ஆண்டுக்கு முந்திய ஓவியங்கள் 08



அணு சோதனை குறித்து எச்சரிக்கை 09



துமிந்த விடுவிக்கப் படுவார் 15

# நவிப்பிள்ளையின் அறிக்கை அரசுக்கு

## ஐ.நாவின் உதவிகளும், ஆலோசனைகளும் அதில் அடக்கம்



"இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மீதான விசாரணை குறித்தும் இந்த அறிக்கை சமர்ப்பிப்பின் போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள் ளப்படும்."

கொழும்பு, பெப்ரவரி 7

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் (நவிப்பிள்ளை) சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையின் வரைவு, இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் சபையின் 22 ஆவது அமர்வில் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் மேற்படி அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

இலங்கையில் நல்லிணக்கப்பாட்டையும், பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை அரசுக்கான ஆலோசனைகளும், தொழில்நுட்ப உதவித் திட்டங்களும் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பின் செயற்

பார்க்க பக்கம் 04

## இலங்கையில் நீதித்துறைக்கு அச்சுறுத்தல்

### அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கம் கண்டிக்கிறது

கொழும்பு,பெப் 7

இலங்கையில் முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணையும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அவரது பதவிநீக்கமும் சர்வதேச சட்டங்களின் சுயாதீனத்துக்கும் நீதித்துறைக்கும் விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தல் என அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் லோரல் ஜீ.பெலோஸ் எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசால் பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணை

பார்க்க பக்கம் 04

## போர் தவிர்ப்பு வலயம்

### சனல் - 4 இன் புதிய வெளியீடு

CHANNEL FOUR TELEVISION

லண்டன்,பெப் 7

இலங்கை அரசபடைகளால் வன்னியில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் இனப்படுகொலைகளை வெளிப்படுத்தும் 'போர் தவிர்ப்பு வலயம்' என்ற மூன்றாவது காணொலியைப் பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சி விரைவில் வெளியிடவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், அமெரிக்கா கொண்டுவரவுள்ள இலங்கை

பார்க்க பக்கம் 04

## நாவற்குழியில் சிங்களவர்களை குடியேற்றுவது நல்லிணக்கமா?

### அரசிடம் கேட்கிறார் மனோ கணேசன்



யாழ்ப்பாணம், பெப், 7

நாவற்குழியில் அடாவடித்தனமாகச் சிங்கள மக்களைக் குடியேற்றுவதுதான் அரசின் நல்லிணக்கமா? இந்த நடவடிக்கை அரசின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது- என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் சாடியுள்ளார்.

நாவற்குழியில் படுவேகமாக இடம்பெற்றுவரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறு அடாவடித்தனமாகத் தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பது ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்துக்கு வழிகாட்டாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நல்லிணக்கம்தான் சர்வதேசத்துக்கான பதில் எனத் தெரிவித்திருக்கின்ற அதேவேளையில் நாவற்

பார்க்க பக்கம் 24

## ஹிஜாப் உடையில் இராணுவ அதிகாரி வங்கியில் கைது

கொழும்பு,பெப் 7

கண்டியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் கொள்ளையடிப்பதற்கு முற்பட்டதாகக் கூறப்படும் இராணுவ உயர் அதிகாரி ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹிஜாப் உடை அணிந்திருந்த இந்த இராணுவ உயர் அதிகாரி விளையாட்டுத் துப்பாக்கி மற்றும் கத்தியுடன் நேற்றுப் புதன்கிழமை காலை கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பார்க்க பக்கம் 04

# சிங்கள - முஸ்லிம் கலவரம் மீண்டும் ஏற்பட வித்திடாதீர்

## அரசை எச்சரிக்கிறார் ரணில்

கொழும்பு, பெப்.7

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிடுத்து, மீண்டுமொரு சிங்கள - முஸ்லிம் கலவரம் ஏற்படுவதற்கு அரசு வழிவகுக்கக்கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அமைதியாகவும் ஊமைகளாகவும் இருக்கின்றனர். எக்காரணம் கொண்டும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கமுடியாது என்றும் அவர் கூறினார்.

பார்க்க பக்கம் 24

## திரைப்படமாகத் தயாராகின்றது தலைவர் பிரபாவின் வரலாறு



சென்னை, பெப் 7

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகத் தயாரிக்கப்படவுள்ளது. தென்னிந்திய சினிமா இயக்குனர் ஏ.எம்.ஆர்.ரமேஷ் இந்

பார்க்க பக்கம் 04

## காணாமல் போனோர் குறித்து சுயாதீன விசாரணை

### கூட்டமைப்புக் கோருகிறது

கொழும்பு, பெப்.7

"சரணடைந்தோர், காணாமல்போனோர் தொடர்பில் வடக்கில் இடம்பெற்ற உள்ளக விசாரணைகளில் உண்மைத்தன்மையோ, நம்பகத்தன்மையோ இல்லை. இது அரசின் முரண்பாட்டு கருத்துகளினூடாகத் தெளிவாகிறது. எனவே, இந்த விடயம் தொடர்பில் சர்வதேச பொறிமுறையினூடனான சுயாதீன விசாரணையொன்று நடத்தப்படவேண்டும்"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வலியுறுத்தியது.

அதிகாரப் பகிர்வுக்குத் தாம் ஒருபோதும் தயாரில்லை

பார்க்க பக்கம் 04

# உரிய அனுமதி இல்லாமல் சிங்களவரின் கட்டடங்கள்

## நாவற்குழியில் அமைக்கப்படுவதை பிரதேச சபை கண்டுகொள்ளாதமை ஏன்?

யாழ்ப்பாணம், பெப்.7

நாவற்குழியில் பிரதேச சபையின் அனுமதியின்றி சிங்கள மக்களால் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்ற போதும் அதனைச் சட்ட ரீதியாகத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சாவகச்சேரிப் பிரதேச சபை இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்காமை குறித்துக் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மக்கள் சிறு மதில் கட்டுவதாக இருந்தாலும் பிரதேச சபையின் அனுமதியின்றி அந்தப் பணியை மேற்கொள்ள முடியாது. ஆனால் சிங்கள மக்கள் வீடுகள், பொதுநோக்கு மண்டபம், தண்ணீர்த்தாங்கி என்பவற்றைப் பிரதேச சபையின் அனுமதியின்றி அமைத்துள்ள போதும் இதுவரை எந்தவித

பார்க்க பக்கம் 04

## வலி.வடக்கு உண்ணாவிரதத்தில் அரசியல் கட்சிகளும் பங்கேற்கும்

யாழ்ப்பாணம், பெப். 7

வலி. வடக்கு மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியும், படையினரால் வீடுகள் இடித்தழிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகளும்

பார்க்க பக்கம் 04

## வலி.வடக்கில் டெங்கு ஒழிப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.7

அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை வலி.வடக்குப் பிரதேச சபையில் இடம்பெறவுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, டெங்கு, மலேரியா போன்வற்றை ஒழிப்பதற்காக பொதுமக்களுடன் இணைந்து வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நுளம்பு ஒழிப்புத் தொடர்பான கலந்துரையாடல் வலி.வடக்குப் பிரதேச சபையில் முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் சனசமூக நிலையங்கள், மயான அபிவிருத்திச் சபை, கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகளை நாளை பி.ப. 2 மணிக்கு மல்லாகத்தில் அமைந்துள்ள வலி.வடக்குப் பிரதேச சபைக்கு சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

(த-5)

# பிரதம நீதியரசருக்கு எதிரான வழக்கு நீதியரசர் குழுவை நியமிக்க முடிவு

கொழும்பு,பெப் 7

அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி பிரதம நீதியரசருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் வழக்கை விசாரிப்பதற்காக முழுமையான நீதியரசர் குழு நியமிக்கப்படவுள்ளது.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்குவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே முழுமையான நீதியரசர் குழுவை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்குவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர்நீதிமன்றத்தில் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்த வழக்கில் தாம் சம்பந்தப்பட்டிருப்பதால், தாம் அதனை விசாரணை செய்ய முடியாது என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் விசாரணைக் குழுவிலிருந்து விலகிக்கொண்டார். அத்துடன் அந்தக் குழுவைச்சேர்ந்த மற்றுமொரு நீதியரசரான ஸ்ரீபவனும் விலகிக்கொண்டார்.

**முழுமையான நீதியரசர் குழுவை அரசியல மைப்பின் 132(3) பிரிவுக்கு அமையவே புதிய நீதியர சர்கள் குழு நியமிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.**

இந்நிலையில் தனது மனுவை புதிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு ஏற்கவேண்டும் என்று சட்டத்தரணி கேட்டுக்கொண்டார்.

அதனடிப்படையில்வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, முழுமையான நீதியரசர் குழுவை அரசியலமைப்பின் 132(3) பிரிவுக்கு அமையவே புதிய நீதியரசர்கள் குழு நியமிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுங்க வரி ஏய்ப்பு தொடர்பாக ஒரு தனியார் நிறுவனத்துக்கு எதிரான வழக்கை, தற்போதைய பிரதம நீதியரசரான மொஹான் பீரிஸ், தான் சட்ட மா அதிபராக இருந்தபோது தவறான முறையில் வாபஸ் பெற்றதாகவும் இந்த மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் தற்போதைய தலைமை நீதியரசர் இலங்கை அரசியலமைப்பை மீறியுள்ளதாகவும் அதில் அந்த மனுவில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபரான தற்போதைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், ஒரு நிறுவனத்திடமிருந்து 619 மில்லியன் ரூபாவை சுங்கக் கட்டணமாகக் பெறுவதை தடுத்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அவருக்கு எதி ராக இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

## நாடாளுமன்றம் சென்ற மஹிந்த

கொழும்பு,பெப்.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

சபாநாயகரின் அறிவிப்பையடுத்து, மனுக்கள் ஏற்கப்பட்ட பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விகள் கேட்கப்பட்டன.

அதன்பின்னர், நிலையியற் கட்டளையின் 23/2ஆம் பிரிவின்கீழ் முஸ்லிம் சமூகம் தற்போது சந்தித்துள்ள நெருக்கடிகள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க விசேட உரை நிகழ்த்தினார்.

ரணிலின் உரையையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்தபோது அதாவது பிற்பகல் 2.25 மணியவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்கு வருகைதந்தார். பின்னர் 2.35 மணியளவில் ஜனாதிபதி சபையை விட்டுச் சென்றார்.

ஜனாதிபதியின் வருகையால் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.(த-2)

# கடலுணவுகளின் வருகை குடாக்கடலில் குறைந்தது

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். குடாக்கடலில் மீன்களின் வரத்து இந்த வாரத்தில் மிகவும் குறைந்து காணப்படுகின்றது என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது காலநிலை மாற்றத்தால் கடலில் கடலுணவுகளின் பிடிபாடு மிகவும் அருகிச் செல்கிறது.

இந்தக் கடலுணவுகளின் பிடிபாடு குறைந்ததால் கடற்றொழிலாளர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

ஜனவரி மாதத்தில் கடலுணவுகள் அதிகம் வலைகளில் சிக்குவது வழமை. இந்தக் காலத்தில் மீன்களின் வரத்தை அதிகரித்து அவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்தே காணப்படும். ஆனால் தற்போதைய காலநிலை மாற்றத்தால் கடலுணவுகள் மிகவும் குறைவாகவே சிக்குகின்றன.

இதனால் தொழிலாளர்கள் வருமானம் இன்றிப் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் நகரை அண்டிய பிரதான மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதால் நுகர்வோரும் பாதிப்படைந்துள்ளனர்-என்றார்.

கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை போன்ற மீன் சமந்தைகளில் மீன்களின் நேற்றைய விலை விவரம் வருமாறு:-

பெரிய மீன்-கிலோ ரூபா 500, சிறிய மீன்-கிலோ ரூபா 300, நண்டு-கிலோ ரூபா 600, இறால்-கிலோ ரூபா 650, கணவாய்-கிலோ ரூபா 650 , சுறா மீன்-கிலோ ரூபா 900, திருக்கை-கிலோ ரூபா 400. (ம-17)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, திறனாய்வுப் போட்டி ஆகியன நாளை, நாளை மறுதினம் இரண்டு நாட்களும் பாடசாலை அதிபர் கு.வேல் சிவானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளன. முதல் நாள் நிகழ்வு பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில்இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந் தினராக இலங்கை உதைபந் தாட்ட அணியின் முன்னாள் வீரர் நாகமணி வடிவேஸ் வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

பாடசாலை மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பையா சண்முககுலகுமாரன் கலந்து கொள்ளவுள்ளனர்.

# உயிர்களைக் காப்பாற்ற இரத்த தானம் செய்யுங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.7

வைத்தியசாலைகளில் இரத்தம் ஏற்றப்பட வேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் செல்கிறது. எனவே இரத்ததானம் செய்யத் தகுதியுடைய அனைவரும் அதனை வழங்க வேண்டும் என்று யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இரத்தம் ஏற்றப்பட வேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதையே காணமுடிகிறது.

இதற்கேற்ப இரத்தத்தைச் சேகரிக்க வேண்டிய பொறுப்பு இரத்த வங்கிப் பிரிவுக்கு உண்டு. யாழ்.குடாநாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு மட்டுமன்றி தனியார் வைத்தியசாலைகளுக்கும் இரத்தம் வழங்க வேண்டியுள்ளது.

நோயாளர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் சமம். அவர்களுக்கு இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை ஏற்படும்போது தேவைப்படும் இரத்தத்தைக் கொடுத்து நோயாளர்களின் உயிர்களைக் காக்க வேண்டிய தேவையும் கடமையும்.

2010 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 91 நோயாளர்களுக்கும், 2011 ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 41 நோயாளர்களுக்கும், 2012 ஆம் ஆண்டு 10 ஆயிரத்து 618 நோயாளர்களுக்கும் இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

எனவே வழங்கத் தகுதியான அனைவரும் செய்பவர்கள் தாமாக முன் வந்து இரத்ததானம் செய்ய வேண்டும். இதன் மூலமாக நோயாளர்களின் உயிர்களைக் காக்க முன்வர வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)




அதிகரித்து வாழ்க்கைச் செலவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தில் நேற்று கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.
இந்த போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

# கிளிநொச்சி வர்த்தகர்களுக்கு தொழிற்சங்க விளக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.7

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களுக்கு தொழிற்சங்க நடைமுறை தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்றை வட மாகாண தொழில்திணைக்களம் இன்று நடத்தவுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இந்த விளக்கமளிக்கும் கூட்டம்நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கப்படவேண்டும். சிறுவர்களை வேலைக் கமர்த்துவதைத் தவிர்த்தல், தொழிற்சங்க சட்ட விதிமுறைகள், ஊழியர் சேமலாபநிதி வைப்பிலிடுதல் உட்பட பல்வேறு விடயங்கள் கூட்டத்தில் வர்த்தகர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், தொழில் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் இதில் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைக்க வுள்ளனர்.

எனவே வர்த்தகர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு வட மாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-4)

## தொழிலின்மையை குறைக்க நடவடிக்கை

வடமாகாணத்தில் ஐந்து சதவீதமாகவுள்ள தொழிலின்மை வீதத்தை 2016 ஆம் ஆண்டளவில் 3 சதவீதமாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று) நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, பிரதிநிதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

2011ஆம் ஆண்டின் விவரங்களுக்கமைய வடக்கில் தொழிலின்மை வீதம் ஐந்து சதவீதமாகக் காணப்படுகின்றது.

குறித்த மாகாணத்தில் தொழிலின்மையைக் குறைப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது -என்றார்.

## தும்பளை லூர்த்துமாதா வருடாந்தத் திருவிழா

வடமராட்சி,பெப்.7

கத்தோலிக்க யாத்திரைத் தலமான பருத்தித்துறை தும்பளை லூர்துமாதா கோவில் வருடாந்த திருவிழா கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும், பங்குத் தந்தையுமான அருட் திரு ஜோன் மவுலிஸ் அடிகளார் தலைமையில் தினமும் மாலை 4.30 மணிக்கு நவநாள் வழிபாடுகள் திருச்செபமாலையுடன் நடைபெற்று வருவதுடன் அருட்பணி ராஜ்கிளேஸ்ரினின் திருமறையுரையும் இடம்பெற்று வருகின்றது.

இறுதி நவநாளாகிய எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலி, திருமறையுரை, திவ்விய நற்கருணை ஆராதனைப் பவனி என்பனவும் நடைபெறும்.

11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலி இடம்பெறும். 7.30 மணிக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தர நாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து லூர்து மாதாவின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

லூர்துமாதா திருநாள் திருவிழாவுக்கு வருகை தரும் யாத்திரிகர்கள் தங்குவதற்கு சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-8)



கடந்த திங்கட்கிழமை இரவு பெய்த கனமழை காரணமாக வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கியது. சூடடிப்பதற்காக வயல்களில் வெட்டி வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. வெட்டப்படாத நெற்கதிர்கள் சரிந்து விழுந்து விட்டன.வெள்ளத்தில் தேங்கிய கதிர்களை வரப்புகளில் விவசாயிகள் உலரவிட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. (ம-4)

### புலோப்பளை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியஸ் ஆலய புனித டொன் பொஸ்கோ இளையோர் முன்னணியால் புலோப்பளை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவியாக ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நத்தார் கால ஆடம்பரச் செலவை மட்டுப்படுத்தி சேகரித்த இந்த நிதி கொழும்பு பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு அலன்யூஸ்ரன் அடிகள் ஊடாக புலோப்பளை பங்குத் தந்தை அருட்திரு ஜேம்ஸ் நாதனிடம் வழங்கப்பட்டது.

இந்த நிதியைக் கொண்டு புலோப்பளையில் வாழும் வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

# நாவற்குழி வீடமைப்புக் காணியில் குடியமர்வதற்குப் பதிவு செய்க

## காணி இல்லாதவர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.7

*தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காணியற்றவர்கள் என்று பதிவு செய்துள்ளவர்களும், யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் காணியற்றவர்கள் எனப் பதிவு செய்துள்ளவர்களும் நாவற்குளியில் உள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் வசிப்பதற்குப் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

நாவற்குளியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான 60 ஏக்கர் காணி உள்ளது. இதில் நாவற்குளி வீட்டுத் திட்டத்தில் 300 குடும்பங்களுக்குக் காணி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய காணிகளை, காணியற்றவர்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கொழும்பு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று பரப்பு அல்லது இரண்டு பரப்பு வீதம் காணி வழங்க நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் இந்த அதிகாரி மேலும் கூறினார்.

இதனால் யாழ். குடாநாட்டில் காணியற்றவர்கள் எனப் பதிவு செய்த 11 ஆயிரத்து 500 குடும்பங்களும், மேற்குறித்த காணியைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

நாவற்குளியைச் சூழவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே 150 குடும்பங்கள் காணிகள் இல்லையெனப் பதிவு செய்துள்ளன. அத்துடன் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 650 குடும்பங்கள் காணிகள் இல்லையெனப் பதிவு செய்துள்ளன.

இவர்கள் பங்கிட்டு வழங்கப்படவுள்ள நாவற்குளியில் உள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபை காணிகளைக் கேட்டு சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் ஊடாகத் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் நாவற்குளியில் ஏற்கனவே குடியேறியுள்ள தமிழ்க் குடும்பங்கள் அந்தப் பகுதியில் கொட்டில் அமைத்து நிரந்தரமாக தங்கியுள்ளதால் இவர்களுக்கும் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இதேபோன்று மேற்படி காணியில் காணியற்றவர்கள் எனப் பதிவு செய்தவர்கள் நிரந்தரமாகத் தங்கினால் அவர்களுக்கும் காணிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## கோண்டாவில் பகுதியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.7

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள், தொண்டர்கள் இணைந்து கோண்டாவில் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கோண்டாவில் கிராம அலுவலர் பிரிவு ஜே/115, ஜே/116, ஜே/117, ஜே/118 ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்தப் பகுதியில் காணப்பட்ட, மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய பெருமளவு பொருள்கள் அகற்றப்பட்டன.

வெளிநாடுகளில் வதியும் இலங்கைக்குச் சொந்தமான இரண்டு காணிகளைப் பிரதேச சபை தனது பொறுப்பில் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

பிரதேச சபை இந்தக் காணியைத் துப்புரவு செய்து தனது பொறுப்பில் வைத்திருக்கும். காணிச் சொந்தக்காரர் அல்லது குறிப்பிட்ட காணியை தற்போது தமது பொறுப்பில் வைத்திருப்பவர்கள் பிரதேச சபைக்கு துப்புரவு செய்தமைக்கான கட்டணத்தை வழங்கும் பட்சத்தில் பிரதேச சபை உரியவரிடம் அதனை ஒப்படைக்கும் என்றும் கூறப்பட்டது. (ம-7)

## உரும்பிராயில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், பெப்.7

கோப்பாய் பிரதேச செயலகத்தால் பிறப்பு, இறப்பு பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கான நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை உரும்பிராய் பகுதியில் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் காளி கோயில் மண்டபத்தில் காலை 9 மணிக்கு இந்தச் சேவை ஆரம்பமாகி இடம்பெறும் என்று பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

உரும்பிராய், ஊரெழு பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த சேவை முகாமில் கலந்து பயன்பெறமுடியும். (ம-17)

### நிகழ்வுகள் இன்று

**அங்குரார்ப்பணம்**

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் பழைய மாணவர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். (ம-7)

**பொதுக் கூட்டம்**

பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வும் பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கடந்த கால போர் அனர்த்தங்களால் முற்றாக சேதமடைந்து தரை மட்டமாக காணப்படும் பாடசாலையை புனரமைப்பது அவசிய தேவையாக உள்ளதால் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்தியில் அக்கறை உடைய பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் கூறியுள்ளார். (ம-9)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இளைஞர் சேவைகள் மன்றத்தால் இளைஞர் சேவை கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அங்குரார்ப்பண நிகழ்வை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உறுப்பினர் ஒருவர் கல்லூரி அதிபரிடம் விளையாட்டு உபகரணங்களைக் கையளிக்கிறார். (ம)

### சுற்றுலாத் துறையூடான வருவாயை

## உள்ளூர் தொழில் முயற்சியாளர் பெறும் வகையிலான வழிகாட்டல்

யாழ்ப்பாணம்,பெப்.07

சுற்றுலாத்துறை ஊடாகக் கிடைக்கக் கூடிய வருமானத்தை உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல்களை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது.

வடமாகாணத்தைச் சேர்ந்த உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள் தாம் மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளுக்கு முதலீடுகளை பயன்படுத்திவிட்டு இலாபம் அற்றவர்களாக தொழில் முயற்சிகளில் இருந்து பின் தங்கியுள்ளார்கள்.

இதன் காரணமாக அதிகளவான முதலீடுகள் விரயமாக்கப்படுவதுடன் தொழில் வாய்ப்புக்களை இழந்து வருமானம் அற்றவர்களாக உள்ளனர்.

இத்தகைய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து வருமானத்தைப் பெறக் கூடிய வழிவகைகளை மேற்கொள்ள ஏதுவாக வழிகாட்டல் ஆலோசனைகளை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகளைப் பயன்படுத்தி சுற்றுலாத்துறையூடாக தொழில் முயற்சியாளர்கள் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் தொழில் முயற்சியாளர்கள் இலகுவாகச் சந்தைப்படுத்தத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

வடமாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்து சுற்றுலாத்துறையினரின் ஆர்வத்துக்கு ஏற்ப உற்பத்திப் பொருள்களை வழங்கக் கூடியதாக நேரடிக் கண்காணிப்பில் இந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் நேரடியாக தொழில் முயற்சியாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அதனூடாக வெளிநாடுகளிலும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத்துடன் தொடர்புடைய தொழில் முயற்சியாளர்களுக்கு இத்தகைய சந்தை வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது. (ம-14)

## போர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அரசுக்கு எதிரான தீர்மானம் விவாதத்துக்கு வர முன்னர் இந்தக் காணொலி வெளியிடப்படும் என்று நம்பப்படுகிறது.

ஏற்கனவே 'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' என்ற பெயரில் முதலாவது காணொலியையும், 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என்ற பெயரில் இரண்டாவது காணொலியையும் சனல்-4 தொலைக்காட்சி தயாரித்து வெளியிட்டிருந்தது.

இலங்கை அரசபடைகளின் போர்க் குற்றங்களை வெளிப்படுத்தி, அனைத்துலக அளவில் பெரும் பரபரப்பை எற்படுத்திய சனல்-4 தொலைக்காட்சி, தற்போது மூன்றாவது போர்க்குற்ற காணொலிப் பதிவு ஒன்றையும் வெளியிடப் போவதாக அறிவித்துள்ளது.

'போர் தவிர்ப்பு வலயம்' No Fire Zone & The Killing Fields Of Srilanka என்ற பெயரில் வெளியிடப்படவுள்ள இந்தக் காணொலியின் முன்னோட்டம் ஏற்கனவே இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (த)

## நவிப்பிள்ளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் குறைபாடுகள் ஆகிய விடயங்களையும் இந்த அறிக்கை கையாளும் என நம்பத்தகுந்த இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மீதான விசாரணை குறித்தும் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இந்த அறிக்கையின் தகவல்கள் பத்து நாள்களுக்குள் பகிரங்கப்படுத்தப்பட்டுவிடும் என்றும் இந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, இந்த வரைவைத் தற்போது இலங்கை அரசு ஆய்வுக்குட்படுத்தியுள்ளது என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

மனித உரிமைகள் சபையின் 22ஆவது அமர்வில் கலந்துகொள்ள மனித உரிமைகளுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான இலங்கைத் தூதுக்குழு அங்கு செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் சபையின் நிகழ்ச்சி நிரலில், இலங்கை மூன்று இடங்களில் இடம் பெறுகின்றது. ஐ.நா. ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கை சமர்ப்பிப்பு, இலங்கை அரசின் பூகோள மீளாய்வுக் கூட்டத்தொடர் அறிக்கை சமர்ப்பிப்பு, இலங்கை மீதான அமெரிக்காவின் காரியக்கிரம பிரேரணைத் தாக்கல் ஆகிய மூன்று நிலைப்பாடுகளில் இலங்கை சம்பந்தப்படுகிறது.

2012ஆம் ஆண்டு மார்ச்சில் ஐ.நாவின் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து, சில முனைகளில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது என அமெரிக்க அரசு திருப்தியடைகிறது. அதேவேளை, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பொறுப்புக் கூறலுக்கான கடப்பாடுகள் தொடர்பான விவகாரங்களில் இலங்கையின் முயற்சி 'பூச்சியம்' என்பதையும் அமெரிக்கா கண்டுள்ளது'' என அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

சமீபத்தில் இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணை இலங்கை மீதான நம்பிக்கையைக் குலைத்துள்ளது. அதேவேளை, தனது 'நிகழ்ச்சி நிரலில் நழுவாது' இலங்கையை நிலைநிறுத்த இரண்டாவது பிரேரணை அவசியமாகிறது என்று இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த நாட்டின் போருக்குப் பின்னரான விவகாரங்கள், உலக சமூகத்தின் முன் னிலையில் 'ராடர்' கருவியில் நிழலாடும் விவ காரங்களைப் போன்றே உள்ளன என்றும் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

இரண்டாவது பிரேரணையைக் கொண்டு வருவதன் மூலம் இலங்கையைத் தாக்கவேண்டும் என்பது அமெரிக்காவின் நோக்கமல்ல. நல்லிணக்கப்பாட்டையும், பொறுப்புக் கூறலுக்கான முன்னெடுப்புகளையும் கொழும்பிலுள்ள அரசு துரிதமாக மேற்கொள்வதற்கு ஊக்கமளிப்பதற்காகவே இந்தப் பிரேரணையை அமெரிக்கா கொண்டுவருகிறது- என்றும் அவை மேலும் காரணம் கூறுகின்றன.(த)

## திரைப்படமாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தப் படத்தை இயக்குகிறார்.

இதுகுறித்து இயக்குநர் ரமேஷ் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுக்க முடிவு செய்துள்ளேன். விடுதலைப்புலிகள் தரப்பிலான ஈழமக்களிடம் இருந்து இந்தப் படத்தை எடுப்பதற்காக ஆட்சேபனை இருக்காது என்று கருதுகிறேன்.

இதற்கான தகவல்களை தமிழ் மக்கள் எனக்கு நிறையவே வழங்கியுள்ளனர். ஈழத் தமிழ் மக்களுக்கும் என்னை ரொம்பப் பிடிக்கும். புலிகள் குறித்த பல தகவல்களை அவர்கள் எனக்கு கொடுத்திருக்கிறார்கள்-என்றார்.

இந்திய அரசிடம் இருந்து தடை வருமே என்று செய்தியாளர்கள் அவரிடம் கேட்டதற்கு, 'பார்ப்போம், படம் எடுப்பது தான் என்னுடைய வேலை, அதனால் பிரச்சினை வந்தால் அதைச் சமாளிப்போம்.'- என்றார் ரமேஷ்.

வீரப்பன் கதையை வனயுத்தம் என்ற பெயரில் படமாக எடுத்துள்ளேன்.பதினொரு வருடங்கள் வீரப்பன் வாழ்ந்த பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்து வீரப்பனிடம் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர்களிடம் விசாரித்து இந்த படத்தை எடுத்துள்ளேன். உண்மையான பாத்திரங்களே இதில் உள்ளன. யாரையும் புண்படுத்தும் பகுதிகள் படத்தில் இல்லை.

இப்படத்துக்கு எதிராக வீரப்பன் மனைவி முத்துலட்சுமி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்று உத்தரவுப்படி சில பகுதிகள் நீக்கப்பட்டு உள்ளன.எதிர்வரும் 14-ஆம் திகதி படம் வெளிவருகின்றது.அதே போன்று தலைவர் பிரபாவின் படத்தையும் எடுக்கவுள்ளேன்- என்றார் இயக்குநர் ரமேஷ்.

(த)

## வலி.வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

ஏற்கனவே இந்தப் போராட்டத்தில் பொது அமைப்புகள் தமது ஆதரவை வழங்கியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

கடந்த 23 வருடங்களுக்கு மேலாக வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வலி. வடக்கில் 24 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகள் இதுவரை விடுவிக்கப்படாமல் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தப் பகுதிகளை உள்ளடக்கி நிரந்தரப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு சிலவற்றை முற்றாக விடுவிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிரந்தரப் பாதுகாப்பு வேலியோடு அமைந்த எல்லைப் பகுதியில் உள்ள வீடுகளையும் இடித்துத் தரைமட்டமாக்கும் நடவடிக்கைகளையும் படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதனைக் கண்டித்து வலி. வடக்கு மக்கள் மீள்குடியமர்வுக் குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்று, அந்தக் கட்சியின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மக்கள் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் முழுமையான ஆதரவை வழங்கும். வலி.வடக்குப் பிரதேசம் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தோம். சர்வதேசம் வரை இதனைத் தெரியப்படுத்தியும் இருந்தோம்.

மீண்டும் மக்கள் தமது வாழ்விடங்களை விடுவிக்குமாறு கோரி நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் இதில் பங்கு கொள்வர் - என்றார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவிக்கையில், நானும் எனது கட்சி ஆதரவாளர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுப்போம் என்றார்.

(த-5)

## காணாமல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
என்பதை சுதந்திரதின உரையின்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனத் தெரிவித்த தமிழ்க்கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன்,

இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கிய அரசின் பயணத்தால் தமிழ் மக்கள் மட்டுமல்ல, முழு நாட்டு மக்களும் அபாயத்தில் தள்ளப்படுவர் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் ''அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்'' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### இராணுவ அறிக்கையில் முழுப்பொய்

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் இடம்பெறுவதற்கு முன்னர், போர் இடம்பெற்றபோது, அதற்குப் பின்னர் முதலான காலப்பகுதிகளில் காணாமல் போனோர் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இது தொடர்பில் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் காணாமல் போனோர் எவரும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முழுப் பொய்யாகும்.

போர் இடம்பெறுவதற்கு முன்னர், இடம் பெற்றபோது, அதற்குப் பின்னர் முதலான காலப்பகுதிகளில் தமது பெற்றோர்களுக்கு முன்னாலேயே பலர் இராணுவத்திடம் சரணடைந்தனர். ஆனால் இவர்கள் பற்றிய எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

காணாமல் போனோர் தொடர்பாகக் கண்டறிவதற்காக அரசு நடத்திய உள்ளக விசாரணைகளில் உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை இல்லை. அரசின் அறிக்கைகளில் முன்னுக்குப் பின் முரணான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் காணாமல் போனோர் தொடர்பில் முறைப்பாடுகள் உள்ள நிலையில், காணாமல் போனோர் என எவரும் இல்லை என இராணுவ அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

### சர்வதேச விசாரணை மூலமே உண்மை வெளியே வரும்

இது விடயத்தில் அரசை நம்பமுடியாது. அரச குழுவினரின் விசாரணைகளில் உண்மை இல்லை. எனவே, இது தொடர்பில் சர்வதேச பொறிமுறையுடனான சுயாதீன விசாரணை அவசியம்.அவ்வாறு சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தினால்தான் உண்மைகள் கண்டறியப் படும்; நம்பிக்கை ஏற்படும்.

### அதிகாரப் பகிர்வுக்கு ஜனாதிபதி தயாரில்லை

அதிகாரப்பகிர்வினூடாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க ஜனாதிபதி தயாரில்லை என்பது அவரது சுதந்திர தின உரையினூடாகத் தெளிவாகிறது.

நாட்டில் அபிவிருத்தியும், இனங்களுக்கிடையே புரிந்துணர்வும் ஏற்பட்டால் போதும் என்று அவர் கூறுகிறார். ஆனால் அந்தப் புரிந்துணர்வை ஏற்படுத்த அவர் தயாரில்லை. இனங்களுக்கிடையே மேலும் முறுகலையும், இடைவெளிகளையும் ஏற்படுத்தும் விதத்திலேயே அவர் செயற்படுகின்றார்.

அதுமட்டுமல்ல, ஜனாதிபதியின் குடும்பத்தவர்கள் நாட்டில் இராணுவ சர்வாதிகாரத்தை உருவாக்கவே முற்படுகின்றனர். இவ்வாறானதொரு அராஜக சூழல் நாட்டில் உருவாகினால் வடக்கில் மட்டுமல்ல, முழு நாட்டு மக்களுமே பெரும் துன்பத்தை எதிர்நோக்கவேண்டி நேரிடும்

### இராணுவத் தலையீடு நாட்டில் பேரழிவைக் கொண்டுவரும்

அதுமட்டுமல்ல, இராணுவத் தலையீடு அதிகரிப்பானது தமிழ் மக்களின் பிரச்சினை மட்டுமல்ல, நாட்டிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்களினதும் பிரச்சினைதான். இதனால் நாடு பேரழிவைச் சந்திக்கும். இதனைத் தடுத்து நிறுத்த நாம் விரைந்து செயற்படவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

யாழ். வலி வடக்குப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் பெறுமதியான வீடுகள் இராணுவத்தால் இடித்து அழிக்கப்படுகின்றன. வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் குறித்த பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் எனப் பாதுகாப்பு அமைச்சு உறுதியளித்தது.

ஆனால் தமிழ் மக்களின் வீடுகள் இன்று இராணுவத்தால் அழிக்கப்படுகின்றன. இதனை இராணுவம் உடனடியாக நிறுத்தவேண்டும் என அழுத்தங்கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 15ஆம் திகதி வடக்கில் போராட்டமொன்றை நடத்தவுள்ளோம். இதில் மக்கள் அனைவரும் பங்கேற்கவேண்டும் - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (த-சி)

## உரிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறும் நோக்குடன் 54 சிங்களக் குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தன. ஆரம்பத்தில் யாழ். ரயில் நிலையத்தில் தங்கியிருந்த அவர்கள் பின்னர் நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் அத்துமீறிக் குடியமர்ந்தனர்.

ஆரம்பத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் தற்காலிக கொட்டில்கள் அமைத்திருந்த சிங்கள மக்கள் கடந்த வருட இறுதியில் நிரந்தர வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அரச காணியிலும் சரி தனியார் காணிகளிலும் சரி எந்தவொரு கட்டடங்களை அமைப்பதாயினும் அதற்கு அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகளின் அனுமதி பெறப்படுவது கட்டாயமானதாகும்.

ஆனாலும் நாவற்குழியிலுள்ள சிங்கள மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் எந்த விதமான அனுமதியையும் பெறாமல் தமக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடிதண்ணீர்த் தாங்கி, பொதுநோக்கு மண்டபம் என்பன அனுமதி பெறாமல் அங்கு ஏற்கனவே அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 20 வீடுகள் சுவர் எழுப்பப்பட்ட நிலையிலும், 40 வீடுகள் அத்திபாரம் வெட்டப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட மேற்படி கட்டடங்களுக்கு எதிராகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சாவகச்சேரி பிரதேச சபையினால் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக சபையின் தவிசாளர் க.துரைராசாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தான் அதனைக் கவனிப்பதாக அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது-, அவர்கள் அனுமதி பெறவில்லைதான். நாம் வீடமைப்பு அதி கார சபைக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

நீங்கள் இதுவரை வீடமைப்பு அதிகார சபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லையா என்று கேட்டபோது, நீங்கள் அதனைத் தலைவரிடம் கேளுங்கள் என்று கூறி தொலைபேசி அழைப்பைத் துண்டித்தார்.

சாதாரண மக்கள் தமது வீட்டில் சிறிய சுவர் எழுப்பினாலும், அதற்கு அனுமதி பெறாவிட்டால் நடவடிக்கை எடுக்கும் பிரதேச சபையினர் சிங்கள மக்களுக்கு மட்டும் சலுகை காட்டுவதாக சாவகச்சேரிப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-5)

## இலங்கையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
சட்டத்துக்கு முற்றிலும் முரணானது எனவும் அவர் பதவிநீக்கப்பட்டு அந்த இடத்துக்கு நிறைவேற்றுப் பகுதி அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டமை நியாயமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கம் முற்றிலும் சுயாதீனமான - அரச சார்பற்ற ஓர் அமைப்பாகும். உலகெங்கிலும் 4 இலட்சத்து 13 ஆயிரத்திற்கும் அதிகமான அங்கத்தவர்களைக் கொண்ட இந்த அமைப்பு சுயாதீனமான, சுதந்திரமான சமூகத்தை உருவாக்குவதற்கு நியாயபூர்வமான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை தனது ஆணித்தரமான இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது. அமெரிக்காவிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் நீதியும் சட்டமும் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்த அமைப்பு பெரிதும் கரிசனை கொண்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச அமைப்பு, சட்டத்துறையில் சுயாதீனத்துக்கான அடிப்படைக் கொள்கைகளுக்கான அமைப்பு உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகள் உலகெங்கும் நீதித்துறையின் சுயாதீனமும், ஜனநாயகக் கோட்பாடுகளும், மனித உரிமைகளும் காப்பாற்றப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன - இவ்வாறு லோரல் ஜீ. பெலோஸ் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (த-சி)

## ஹிஜாப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் பெண் போன்று பாசாங்கு பண்ணிய இவரை வங்கியின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மடக்கிப் பிடித்தனர். கொத்மலையில் பணியாற்றும் இராணுவ அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.(த)

### முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு

# 3,794 வள்ளங்களுக்கு எரிபொருள் மானியம்

யாழ்ப்பாணம்,பெப்.7

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் 3 ஆயிரத்து 794 மீன்பிடி வள்ளங்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறையினர் தெரிவித்தனர்.**

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்தவருடம் மார்ச் மாதம் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டது. இதனால் மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் அரசினால் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பிளாஸ்ரிக்கிலான வள்ளங்களையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

வள்ளமொன்றுக்கு 9 ஆயிரத்து 375 ரூபா பெறுமதியான எரிபொருள் முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு 3 ஆயிரத்து 794 வள்ளங்களுக்கு எரிபொருள் முத்திரைகள் வழங்கப்பட்டன.

இந்த எரிபொருள் மானிய முத்திரைகளை வழங்கி முல்லைத்தீவு மாவட்டம் கரைதுரைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-13)

### ஆசிகுளம் கிராமத்தை சேர்ந்த பலருக்கு

## வெள்ள நிவாரணம் கிடைக்காத நிலை

வவுனியா,பெப்.7

வவுனியா ஆசிகுளம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் பலருக்கு இதுவரை வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக இங்கு பெய்த மழையினால் ஆசிகுளம் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் வீட்டு உபகரணங்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் சேதமடைந்தன.

மேலும் இங்குள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட உழுந்து, நெல், மரக்கறி வகைகள் என்பனவும் நாசமடைந்துள்ளன. அன்றாடம் கூலித் தொழில் செய்யும் தொழிலாளர்கள் விவசாயிகள் உட்படப் பலரும் இங்கு பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இங்குள்ள சிலருக்கு மட்டுமே நிவாரணங்கள் வழங்கப்பட்ட போதிலும் பெரும்பாலான மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அண்மையில் இங்கு பெய்த மழையினால் வயல் நிலங்களில் அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் நாசமடைந்துள்ளன.

ஆகவே இனியும் தாமதிக்காது தமக்குரிய வெள்ள நிவாரணத்தை வழங்குமாறு இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## மாத இதழின் அறிமுக விழா

வவுனியா,பெப்.7

வவுனியாவில் மாத இதழ் ஒன்றின் அறிமுக விழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

வவுனியா சிதம்பரஸ்வரம் நடனாலயத்தின் 'கம்பன்' எனும் பெயரிலான கலை இலக்கிய, வரலாற்று மாத இதழின் அறிமுக விழாவே நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.35 மணியளவில் தம்பா விருந்தினர் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொள்ளவுள்ளார். (க-402-400)



*கிளிநொச்சி ஏ-9 வீதியில் உள்ள புனித திரேசாள் தேவாலயம் இப்போது துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-426)*

## மன்னார் பிரதான பாலத்தில் இராணுவத்தினரின் சிரமதானப் பணி



மன்னார், பெப்,7

மன்னார் பிரதான பாலத்தை ஒட்டிய பகுதியில் இராணுவத்தினரின் சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தையொட் டியே இந்தச் சிரமதானப் பணி இடம்பெற்றது.

இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த இந்தப் பெரியளவிலான சிரமதானப் பணியில் நூற்றுக் கணக்கான இராணு வத்தினர் ஈடுபட்டனர்.

மன்னார் பிரதான பாலத்தின் இரு பகுதிகளிலும் காணப்பட்ட கழிவுப் பொருள்கள் இதன்போது இராணுவத்தினரால் அகற்றப்பட்டன.

இதனால் கழிவுகளால் நிறைந்து சுகாதாரச் சீர்கே டுடன் காணப்பட்ட பாலத்தின் இரு புறமும் தற்போது கழிவுகள் இல்லாது தூய்மையுடன் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இந்தச் சிரமதானப் பணிகளில் இராணுவ உயரதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (க-12)

## மன்னார் பிரதான பாலத்தில் இராணுவத்தினரின் சிரமதானப் பணி

### சேவையைப் பெற முடியாத நிலையில் மக்கள்

கிளிநொச்சி,பெப்.7

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள ஒலுமடு உப-அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலை, நூலகம் என்பன அமைந்துள்ள கட்டடங்கள் இராணுவத்தால் விடுவிக்கப்படாததால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டடங்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பாவனையிலேயே உள்ளன.

இது தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினர் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் இராணுவத்தினர் தொடர்ந்தும் இந்தக் கட்டடங்களில் நிலைகொண்டுள்ளனர். ஒலுமடு உப-அலுவலகம் மட்டுமே தற்போது திருமுறிகண்டி ஆலயத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் பல்வேறு சிரமங்களுடன் இயங்கி வருகின்றது.

ஆனால் ஆயுள்வேதவைத்தியசாலை, நூலகம் என்பன இயங்காத நிலையிலேயே உள்ளன. இதனால் இங்கு வசிக்கும் மக்கள் மருத்துவசேவை, நூலகவசதி என்பவற்றைப் பெற முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

## மரண அறிவித்தல்

**திருமதி. காயத்ரி மலரகிதசர்மா**

(ஓய்வுபெற்ற, மேல் நீதிமன்ற பதிவாளர், திருகோணமலை)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காயத்ரி மலரகிதசர்மா 06.02.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மலரகிதசர்மாவின் மனைவியும் காலஞ்சென்ற நயினை பரமேஸ்வரக் குருக்கள் மற்றும் லலிதாம்பாளின் மகளும் காஞ்சென்ற வல்வெட்டித்துறை பிரமேஸ்வரக் குருக்கள் மற்றும் தாட்சாயினி தம்பதியரின் மருமகளும் வசீகரனின் தாயும் அபிரஞ்சனியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 26/5, இரட்ணசிறி பெர்னாண்டோ மாவத்தை,
கவுடானா றோட், தெகிவளை.
தொ.பே: 0772280802

தகவல்
வசீகரன்
மகன்

## அதிகரித்த கட்டணம்

அக்கராயன்,பெப்.7

நெல் அறுவடை இயந்திரங்களுக்கு அதிகளவு கட் டணம் அறவிடப்படுவதால் கிளிநொச்சி விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

கடந்த ஆண்டு காலபோகத் தின் போது ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 7 ஆயிரம் ரூபா வரை காணப்பட்ட அறுவடைக்கான கட்டணம் இம்முறை 8 ஆயிரம் ரூபாவுக்கும் மேலாக உயர்ந்திருப்பதனால் விவசாயிகள் அறுவடை செய்வதில் பாதிப்புக்களை எதிர்கொண் டுள்ளனர். கமக்கார அமைப்புக்கள் அறுவடை இயந்திரங்களின் உரிமையாளர்கள் மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவார்களாயின் அறுவடைக் கட்டணம் குறைவடையும் வாய்ப்புக்கள் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அறுவடை இயந்திரங்களின் பற்றாக்குறையைப் பயன்படுத்திக் கொள்ளும் சில அறுவடை இயந்திர உரிமையாளர்கள் அதிகளவான அறுவடைக் கட்டணத்தை விவசாயிகளிடமிருந்து அறவிட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (க-18)

JAFFNA COLLEGE
UNDER GRADUATE DEPT.

**கல்வி, தொழில் வாய்ப்புகளுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு**

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த, சித்தியடையாத அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான கல்வி, தொழில் வழிகாட்டல்

காலம்: 10.02.2013 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி.
இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No:-021 222 3382

கருத்தரங்கின் பயன்கள்
- தொழில் வங்கியில் பதிவுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகள்.
- வங்கிகள், நிதி நிறுவனங்களில் இலகுவாக தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளும் ஆலோசனைகளும்.
- உயர் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான விளக்கங்களும் ஆலோசனைகளும்.
- தொழில்சார் கற்கை நெறிகள் தொடர்பான விளக்கங்கள்.
- தற்போதைய சூழ்நிலைகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான வழிகாட்டல்கள்.

*மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் பங்குபற்றி பயன்பெற அழைக்கின்றோம்.*

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் ஜனார்த்தனன்



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜனார்த்தனன் நேற்று (06.02.2013) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற துஷ்யந்தி மற்றும் பிரியந்தி, துசியந்தன், திலீபன், சர்மிளன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மிருசுவில் இந்து மாயனத்தில் தகனம்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்,
மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

advt@uthayan.com
0215671111

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 08 |
| 11 | 01 |
| 1923 | 2013 |



## அமரர் சுப்பிரமணியம் மணிமேகலை

**(மணியக்கா)**

கடந்த 08.01.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது ஒளிவிளக்கு சுப்பிரமணியம் மணிமேகலை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை தெனி அம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று அதனை தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எழுவெட்டி,
தம்பசிட்டி றோட்,
பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராமநாதன் தங்கமணி



புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் தங்கமணி நேற்று(06.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வவிநாயகம் இராமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வவிநாயகம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சரஸ்வதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், மற்றும் தங்கராசா,புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சூரியகலா(தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை-மட்டக்களப்பு), ஸ்ரீதரன்(கணினி வள நிலைய முகாமையாளர். வடமராட்சிக் கல்வி வலயம்), மனோகரன்(கனடா), சந்திரகலா(லண்டன்), பத்மகலா(முன்பள்ளி ஆசிரியர், தம்பசிட்டி), விஜேகலா (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், கிறிஸ்டி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை-மட்டக்களப்பு), அமுதா (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி), சிவரஞ்சினி(கனடா), ஆனந்தகுமார் (லண்டன்), நடராசா(பாதுகாப்பு உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்), ரஞ்சித்காந்(ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி-யாழ்ப்பாணம்) ஆகி யோரின் பாசமிகு மாமியும், டென்சியா, ஜொவிற்றா, சஜித், அபிஷா, துவாரகன், அபிநயா, வினுஷ், தணிகா, வாணி, வாகிணி, துவாரகா, மிதுளராஜ், நவீன், காஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை மு.ப. 10.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக மு.ப.11.30 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'பொன்வயல்'
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
021 226 4219

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## நாகன் பொன்னு



கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட நாகன் பொன்னு நேற்று(06.02.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன்-நன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காத்தி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், பன்னீர்ச்செல்வன் (லண்டன்), இரவீந்திரராசா (ரவி-டென்மார்க்), சுவர்ணலதா(சுதா-ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோயினிதேவி (லண் டன்), யோகராணி(டென்மார்க்), தர்மதாஸ்(ரவி-ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், தக்ஷன்(கொழும்பு), பொபிதா(லண்டன்), நிரூபன் (டென்மார்க்), திவ்யா (டென்மார்க்), சத்தியா (டென்மார்க்), அஹானா (ஜேர்மனி), அபிஷாந் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான லஷ்மி, செல்லம்மா, சின்னராசா மற்றும் சின்னத்தங்கச்சி, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான குலமணிதேவி, மயில்வாகனம்(மயிலு) மற்றும் மனோன்மணி, பாக்கியம், சந்திரமதி(ரஞ்சி-டென்மார்க்), சாந்தகுமாரி (சந்திரா-பிரான்ஸ்), இராசலிங்கம், பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

149/1,பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா பஞ்சலிங்கம்

(முன்னாள் ஊழியர், வேலணை பிரதேச செயலகம்)



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் CRETEIL, FRANCE ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பஞ்சலிங்கம் கடந்த 18.01.2013 இல் இந்தியாவில் காலமானார்.

அன்னார் கந்தையா - அன்னபூரணம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் பத்மராணியின் அன்புக் கணவரும் குணசீலன் (பிரான்ஸ்), சுஜிதா (லண்டன்), சஜிதா (பிரான்ஸ்), விஜிதா (பிரான்ஸ்), றஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகலிங்கம் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), இராசேஸ்வரி (சுவிஸ்), ஜெயலிங்கம் (பிரான்ஸ்), யோகலிங்கம் (பிரான்ஸ்), திலகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் கிருபாஜினி (பிரான்ஸ்), ஜீவகுமார் (லண்டன்), பாலேந்திரன் (பிரான்ஸ்), ஜீவதாசன் (பிரான்ஸ்), மோகனதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் வரதலெட்சுமி (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), குருநாதன் (சுவிஸ்), சசிகலா (பிரான்ஸ்), பத்மஞானம் (பிரான்ஸ்), லோகதாசன் (பிரான்ஸ்), பத்மாவதி ( இலங்கை), பத்மலீலா (சுவிஸ்), சந்திரா (கிராம உத்தியோகத்தர், புங்குடுதீவு), மனோகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் சர்வலோகநாதன் (சுவிஸ்), பிறேமகுமாரி (இலங்கை), யோகச்செல்வி (கனடா) ஆகியோரின் சகலனும் நமிஷா, அனேஷ், விதுஷன், ரதிசன், மிதுனா, சனந்தியா, சந்தியா, சபரீஸ், துவாரகா, சத்விகா, ஆகேஷ், அபினயா, அரிஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

# 54, RUE DES PINSONS,
94000 CRETEIL, FRANCE.
T.P.:-0033141786149
0033651127127

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரசின் போலி வாக்குறுதிகள் வெளிப்படும் சமிக்ஞைகள்

நாட்டின் 65 ஆவது சுதந்திர தின வைபவம் வழமையான அணிவகுப்புக்கள், கலை கலாசார கண்கவர் காட்சிகள், வரவேற்புகள் போன்ற அலங்கார ஆரவாரங்களோடும் நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த முக்கிய உரையோடும் பழம்பெரும் நகரான திருகோணமலையில் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

வைபவத்தில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையின் உள்ளார்ந்த கருத்துக்கள் பற்றி பலரும் பலவிதமாக விளக்கமும் வியாக்கியானமும் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

அந்த வகையில் ''நியூயோர்க் ரைம்ஸ்'' பத்திரிகை வெளியிட்டுள்ள கருத்து, தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் பற்றிய அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினரையும் ஆழ்ந்து சிந்திக்க வைப்பதாகவே உள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை உள்ளது. இன மற்றும் மொழி ரீதியான எந்தப் பிரிவினைக்கும் இந்த நாட்டில் இடமில்லை என்று, ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள ''நியூயோர்க் ரைம்ஸ்'', இலங்கை தமிழர்களின் சுயாட்சி உரிமையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றாக நிராகரித்திருக்கிறார் என்பதனை அப்பட்டமாக விளக்கம் தந்துள்ளது; விமர்சித்துள்ளது.

ஜனாதிபதியின் கருத்து அதுவேதான் என்றால், அதனை அவர் ஏன் இன்னும் வெளிப்படையாகச் சொல்லாமல் இருக்கிறார் அல்லது சொல்லத் தயங்குகிறார் என்பது பெரும் மர்மமாகவே இருக்கிறது.

தமிழ் பேசும் மக்களுக்கு தீர்க்கப்படாத பென்னம் பெரிய பிரதான பிரச்சினை ஒன்று இருக்கிறது என்பதனை, இந்த நாட்டில் அரசியலில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. அதனையும் அது சார்ந்த பல முக்கிய கனதியான விவகாரங்களை தீர்த்துக் கொள்ளவும், தீர்த்து வைக்கவும் பல்வேறுபட்ட முறைகளிலும் பல்வேறு நிலைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஏன், ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கூட செய்து கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் வியர்த்தமாகி இனமுரண்பாடு மிக மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையிலே தமிழ் இளைஞர் குழுக்கள் ஆயுதம் ஏந்தவும் அதற்கு இந்தியா அனுசரணை வழங்கவும் என நிலைமை முற்றியது. இறுதியில் இந்தியப் பேரரசு தலையிட நேர்ந்தது. அதன் வாயிலாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் வரலாறு. நிலைமை அத்துடன் முடிந்து விடவில்லை. திருப்தி கொள்ளாத இளைஞர்களில் ஒரு பிரிவினர் தொடர்ந்து போராடலானார்கள். அந்தப் போராட்டம் சுமார் 26 ஆண்டுகள் நீடித்தது.

இறுதியில் உலக நாடுகள் பலவற்றின் குறிப்பாக இந்தியாவின் மற்றும் மேலை நாடுகளின் உதவி, ஒத்தாசைகளுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது

போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும் அதற்குப் பின்னரும் நாட்டின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவும் ஏனைய முக்கிய தலைவர்களும் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அவ்வப்போது வாக்களித்து வந்துள்ளார்கள். ஜனாதிபதி ராஜபக்ஷ, ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையிலும், இந்தியத் தலைவர்களுக்களித்த வாக்குறுதிகளிலும் தமிழர் பிரச்சினையை 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக மட்டுமல்ல அதற்கு மேலாக சென்றும் தீர்த்து வைக்கவுள்ளதாகக் கூறிவந்துள்ளார்.

அதுமட்டுமன்றி, போரின் இறுதிக் கட்டத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்பட்ட போர்க்குற்றங்கள், பொதுமக்கள் கொலைகளுக்கான பொறுப்புக் கூறல் குறித்து கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருந்தது.

இவற்றுக் கிடையே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடந்த இரு தரப்பு பேச்சுக்கள் இணக்கப்பாடு எதுவுமின்றி முடிவடைந்தன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளும்படி அவர்கள் அழைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர் தரப்பைத் தனது வலையில் வீழ்த்தும் அந்த முயற்சியும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இத்தகைய பின்புலத்திலேயே , ஜனாதிபதி ராஜபக்ஷவின் திருகோணமலை சுதந்திரதின சொற்பொழிவும் அதன் மீதான விளக்கங்களும் வெளியாகியுள்ளன.

இதுவரை காலமும் தமிழருக்கும், போரில் உதவிய இந்தியாவுக்கும், ஏன் சர்வதேசத்துக்கே வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எல்லாம் வெறும் போலி வாக்குறுதிகள் என்பதும் காலம் கடத்துவதற்காக, அவர்களை ஏமாற்றுவதற்காக வழங்கப்பட்ட பொய்க் கூற்றுக்கள் என்றும் அனைத்துலகம் உணர்ந்து கொண்டுள்ளது.

'' நியூயோர்க் ரைம்ஸ்'' பத்திரிகையின் வெளிப்படுத்தலும் அதனையே பிரதிபலிக்கிறது எனலாம். ஒருவேளை சிங்கள பாமர மக்கள் ராஜபக்ஷவையும் அவரது அரசையும் மகா ராஜதந்திரிகள் என்று போற்றிப் புகழலாம். ஆனால் உலகம் அவ்விதம் விமர்சிக்காது. புளுகர்களைத் தலைவர்களாகக் கொண்ட நாடு என்றே தூற்றும்.

அதற்கான அறிகுறிகள் அடுத்த மாதம் ஜெனிவாவில் கூடவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் வெளிப்படும் என எதிர்பார்க்கலாம். அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதை இந்த நாட்டுத் தலைவர்கள் விரும்ப மாட்டார்கள் என நம்பலாம்.

ஏனெனில் போரில் இலங்கைக்கு உதவிய நாடுகள் இதனை வேறு விதமாகக் கருதவும் தலைப்பட்டு விடலாம் என்பதை நினைவில் நிறுத்துவது முக்கியம். அரசு வேளைக்கு ஏற்றவாறு தனது நிலைப்பாட்டை மாற்றுவது சரியென்றால் சர்வதேசமும் தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதில் எவரும் தவறு காண முடியாதே.

### வடக்கு, கிழக்கு பிரதேச மக்களின்

## வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப ரூ.90 மில்லியனை ஒதுக்குகிறது ஜப்பான்

கொழும்பு,பெப்.7

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஜப்பானிய அரசு 90 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்தாகியது.

இந்த நிதியைப் பயன்படுத்தி ஜப்பானின் அரசசார்பற்ற நிறுவனமான 'ஜென்' நிறுவனம் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு நீர் வசதிகள், வாழ்வாதாரங்கள், உணவுகள், பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தல் தொடர்பான திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் என்று கூறப்பட்டது.

ஜப்பானியத் தூதுவரான நொபுஹித்தோ ஹொபோ மற்றும் 'ஜென்' நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதிக்கையாள்கை அதிகாரியான திருமதி வீஸாவட்டனாபே ஆகியோரிடையே ஜப்பான் தூதரகத்தில் வைத்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-22)

## செயன்முறைப் பரீட்சையில் சித்தியடையாத 400 பேருக்கு பல்கலை வாய்ப்பு தவறியது

கொழும்பு,பெப்.7

உயர்தரப் பரீட்சையில் உச்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள போதிலும் பல்கலைக்கழகங்கள் மூலம் நடத்தப்படும் செயன்முறைப் பரீட்சைகளில் சித்தியடையாமை காரணமாக மாணவர்கள் 400 பேருக்கு பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டாது போயுள்ளது என்று உயர் கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

ஒரு சில பட்டப்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு முன்னர், குறித்த பல்கலைக் கழகங்களிலும் செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்படுவது வழமை. அத்துடன் அத்தகைய பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ள மாணவர்கள் 400 பேர் சித்தியடையாததன் காரணமாக இந்த சிக்கலான நிலை உருவாகியுள்ளது என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒரு சில பட்டப்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக சில மாவட்டங்களிலிருந்து எந்தவொரு மாணவரையும் தெரிவு செய்ய இயலாத நிலை உருவாகியுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

நுண்கலைப் பல்கலைக்கழகங்கள், மொறட்டுவ பல்கலைக் கழகம் மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில பல்கலைக்கழகங்களில் உள்ள ஒரு சில பட்டப் படிப்பு பாடநெறிகள் தொடர்பாக செயன்முறைப் பரீட்சைகளில் சித்தியடைதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-22)

## கைதிகளை நல்வழிப்படுத்த சிறைச்சாலைகளில் திரைப்படம்

கொழும்பு,பெப்.7

சிறைக் கைதிகளை நல்வழிப்படுத்த சிறைச்சாலைகளில் திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

சிறைக்கைதிகளின் மன எண்ணங்களில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களை நல்லெண்ணம் கொண்ட மனிதர்களாக சமுதாய மயப்படுத்தி விடும் குறிக்கோளுடன் அனைத்து சிறைச்சாலைகளிலும் முன்னுதாரணமான கருத்துக்களைக் கொண்டுள்ள திரைப்படங்களைக் காண்பிக்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் கருத்துக்கு அமைய இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக கடந்த நான்காம் திகதி ''சின்னத்தேவதை'' திரைப்படம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் காண்பிக்கப்பட்டது.

சுமார் 4 ஆயிரம் பேர் வரையிலான சிறைக்கைதிகள் திரைப்படத்தை பார்க்கத்தக்க விதமாக அகன்ற திரை அமைக்கப்பட்டு திறந்த வெளியில் திரையிடப்பட்டிருந்தது என்று வெலிக்கடை சிறைச்சாலைகள் அதிகாரியான காமினி ஜயசிங்க தெரிவித்தார்.

(ம-22)

## போலி இலக்கத் தகட்டுடன் அகப்பட்டுக்கொண்ட வாகனம்

கொழும்பு,பெப்.7

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்த வான் ஒன்று அகப்பட்டுக் கொண்டது என்று புத்தளம் பொலிஸார் தகவல் தெரிவித்தனர். அதன் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நான்காம் திகதி இரவு புத்தளம்-கொழும்பு மார்க்கத்திலுள்ள தில்அடிய பிரதேசத்தில் இந்த வான் அகப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இந்த வாகனத்தை தில்அடிய பிரதேசத்தில் நிறுத்தி பொலிஸார் சோதனையிட்ட போது அதன் பின்புற இலக்கத் தகட்டைப் பொருத்தும் இடத்தில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு இலக்கத் தகடுகள் பொலிஸாரிடம் சிக்கியுள்ளன.

அதற்கமைய அந்த வான் மறித்து வைக்கப்பட்டதுடன் அதன் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-22)

## மருத்துவச் சான்றிதழ் பெறும் உபகரணம் ஆஸ்பத்திரிகளுக்கு

தென்மராட்சி,பெப்.7

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் பெண்கள் மீதான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகத் தற்போதைய காலத்துக்கு ஏற்ப சட்டரீதியான நடவடிக்கைகளை வலுப்படுத்த மருத்துவ விஞ்ஞான சான்றுகளை பெறக் கூடிய உபகரணங்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள இரு வைத்திய சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு சட்ட மருத்துவ நஞ்சு ஆய்வியல் நிலையத்தின் சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரியால் உரிய உபகரணங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

புதிதாக வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் மூலம் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோருக்கு ஏற்பட்ட பாதிப்பை துல்லியமாக கண்டறிய முடியும் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-9)

## மாசேரிப் பகுதியில் திருடர் நடமாட்டம் இரவில் அதிகரிப்பு

தென்மராட்சி,பெப்.7

வரணி, மாசேரிப் பகுதியில் இரவு வேளைகளில் திருடர்களின் நடமாட்டம் காணப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரவு வேளைகளில் நடமாடும் திருடர்கள் திடீரென வீடுகளில் புகுந்து வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்தி பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் செல்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு அந்தப் பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற நில அளவையாளரின் வீட்டினுள் திருடர்கள் நுழைந்த போது அங்கிருந்தோர் கூக்குரலிட்டதும் அங்கிருந்து அவர்கள் தப்பி ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையம், அந்தப் பகுதி படையினர் ஆகியோருக்கு பொதுமக்கள் முறைப்பாடுகள் தெரிவித்த போதிலும் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

(ம-9)

# தடம் புரண்டது லொறி



கிளிநொச்சி,பெப்.7

கிளிநொச்சி ஏ-9 வீதியில் நெல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று தடம் புரண்டதில் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நெல் ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறி ஒன்றே ஏ-9 வீதியின் கரடிப் போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் வீதியை விட்டுத் தடம் புரண்டுள்ளது.

குறித்த லொறியின் சாரதி தெய்வாதீனமாக உயிர் பிழைத்துக் கொண்டார். அவருடன் உதவியாக சென்ற ஒருவர் சிறுகாயங்களுடன் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-6-426)

# ஓமந்தை வீட்டுத் திட்டத்துக்கு அடுத்தமாத இறுதிக்குள் மின்சாரம்

நெளுக்குளம்,பெப்.7

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்கு அடுத்த மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிய வருகின்றது.

வவுனியாவில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் ஒரு தொகுதி வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இதில் அரச ஊழியர்களின் குடும்பங்கள் குடியமர்ந்துள்ளன. மேலும் பல வீடுகள் கட்டிமுடிக்காத நிலையில் உள்ளன.

இங்கு வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெறாமையும், மின்சாரம் வழங்கப்படாமையும் பெரிய குறைபாடாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வவுனியா வீடமைப்பு அதிகார சபையினர் முதற்கட்டமாக மின்சாரத்தை வழங்க முன்வந்துள்ளனர். இது தொடர்பாக வவுனியா மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் இங்கு மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, தமக்கு வழங்கப்பட்ட காணிகளில் எதுவித கட்டடப் பணிகளையும் மேற்கொள்ளாத அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளைப் பறிமுதல் செய்வதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் வறட்சியான காலத்தில் கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் கட்டடப் பணிகளை மேற்கொள்ள முடியாதிருந்ததாகவும், மழைகாலத்தில் வீதிகளின் ஊடாக வாகனங்கள் மூலமாக கல், மண் ஆகியவற்றைக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும்-

இதனால் கட்டடப் பணிகளை மேற்கொள்வதில் சிரமங்கள் உள்ளதாகவும்-

தமக்கு ஏற்பட்ட அவலங்களை இங்குள்ள அரச ஊழியர்கள் பலர் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (க-402)

## வீதிகள் புனரமைக்கப்படாததால் அபிவிருத்திப் பணிகளில் பாதிப்பு

பூநகரி, பெப்.7

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வீதிகள் முழுமையாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுறது.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியின் சின்னப்பல்லவராயன்கட்டுச் சந்தியி லிருந்து பூநகரி நகருக்குச் செல்லும் வீதியில் குவிக்கப்பட்டுள்ள கிரவல் மண் குவியல்கள் பரவப்படாமையால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள எந்தவொரு வீதியும் முழுமையாகப் புனரமைக்கப்படாத நிலையே தற்போது காணப்படுகின்றது.

இங்குள்ள ஏ-32 வீதி உட்பட அனைத்து வீதிகளும் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதனால் பூநகரியின் அபிவிருத்திப் பணிகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



முகமாலைக் கிராமத்துக்கு அண்மையில் வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அங்கு மீள்குடியமர்ந்த மக்களுடன் உரையாடுகின்றனர். (க-426)

## பஸ் சேவை இல்லாததால் விநாயகபுரம் பகுதியில் போக்குவரத்து இடர்கள்

துணுக்காய்,பெப்.7

பஸ்சேவை இல்லாததால் பாண்டியன்குளத்திலுள்ள விநாயகபுரம் கிராம மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்துக்கு பஸ் சேவை இல்லாததால் இங்கு வசிக்கும் சுமார் 400 குடும்பங்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.

துணுக்காயிலிருந்து தென்மேற்குத் திசையில் சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது விநாயகபுரம் கிராமம். இதில் விநாயகபுரம் கிராமத்துக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 400 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.


இங்குள்ள பிரதான வீதி கடந்த 30 ஆண்டுகளாகப் புனரமைக்கப்பட்ட நிலையில் உள்ளதால் பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை.

இதனால் இங்குள்ள விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

மேலும் இங்கிருந்து மல்லாவி மத்திய கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் மல்லாவி மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் எனப் பலரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-415)

# ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில்



துணுக்காய்,பெப்.7

மல்லாவி யோகபுரம் மத்தி ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தின் நிர்மாணப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

யோகபுரம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இந்த ஆலடிப் பிள்ளையார் ஆலயம் கடந்த போரின்போது அழிவடைந்தது. மக்கள் இங்கு மீளக்குடியமர்ந்து மூன்றரை வருடங்கள் கழிந்துள்ளன. தற்போது இந்த ஆலயத்தைப் புனரமைக்கும் பொருட்டு திருப்பணிச் சபை ஒன்று உருவாக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு இங்குள்ள மக்கள் தமது பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(க-415)

## மகா பச்சைக்கொடிய பகுதியில் நிரந்தர முகாம் அமைப்பதற்கு காணி

வவுனியா,பெப்.7

வவுனியா மகா பச்சைக்கொடிய பகுதியில் நிரந்தர இராணுவ முகாம் அமைக்கவென வவுனியா மாவட்ட காணி வழங்கல் அபிவிருத்தி குழு அனுமதி அளித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிரந்தர இராணுவ முகாம்கள் அமைப்பதற்கு வவுனியா மாவட்ட காணி வழங்கல் அபிவிருத்திக்குழு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. தற்போது மகா பச்சைக் கொடிய பகுதியிலும் நிரந்தர முகாம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கிலுள்ள புளியங்குளம், கனகராயன் குளம் பகுதிகளிலும் இவ்வாறு நிரந்தர முகாம்களை அமைப்பதற்கு அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளிலேயே இராணுவ நிரந்தர முகாம்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. போரினால் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத பலருக்கு காணிகள் இல்லாத நிலையில், இராணுவமுகாம்கள் அமைப்பதற்கு இராணுவத்தினருக்கு நிரந்தர அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# கண்டாவளையிலுள்ள 216 வீதிகளில் 15 வீதிகள் மட்டுமே புனரமைப்பு

கிளிநொச்சி,பெப்.7

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் கரைச்சிப் பிரதேச சபைக்குரிய 216 வீதிகளில் 15 வீதிகள் மட்டுமே இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் தற்போது பிரதான மற்றும் ஏனைய குடியிருப்பு வீதிகளென சுமார் 258 கிலோ மீற்றர் நீளமான 216 வீதிகள் உள்ளன.

இந்த வீதிகள் கடந்த பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாமல் பெரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் மக்களின் போக்குவரத்துக்கு உதவாத நிலையிலும் உள்ளன.

இந்த நிலையில் சுமார் 15 வீதிகள் மட்டுமே இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (க-6)

# கிளிநொச்சி நகரில் சிறுவர்களுக்கான பூங்கா கூட அமைக்கப்படாத நிலை

## விசனம் தெரிவிக்கின்றனர் பெற்றோர்

கிளிநொச்சி,பெப்.7

கிளிநொச்சி பிரதான நகரங்களில் ஒன்றாக இருந்த போதிலும், சிறுவர்களை மகிழ்விக்கக் கூடிய வகையில் ஒரு சிறுவர் பூங்கா கூட இல்லையெனப் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நீண்ட போர் அழிவுகளில் இருந்து புத்துயிர் பெற்று ஒரு நகரமாகக் காட்சி தருகின்ற போதிலும், போரினால் தாய், தந்தையரை இழந்த சிறுவர்களையும், பாதிப்புக்குள்ளான ஏனைய சிறுவர்களையும் மகிழ்விக்கக் கூடிய வகையில் ஒரு சிறுவர் பூங்காவோ அல்லது சிறுவர் நூலகங்களோ இங்கு இதுவரை அமைக்கப்படவில்லை. அதனால் ஓய்வு நேரங்களைச் சிறுவர்கள் மகிழ்வுடன் கழிக்கக் கூடிய நிலை இல்லாமை வருத்தமளிக்கின்றது என்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு கரைச்சிப் பிரதேச சபையினால் மிகவும் நவீன வசதிகளுடன் கூடிய சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை எதுவுமே இடம்பெறவில்லை என்றும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-6)

## நீர்வேலைப் பிரிவால் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நீர்வேலைப் பிரிவினரால் யாழ். நகரின் வில்லூன்றி ஆலயப் பகுதி, குருநகர், பாஷையூர் பகுதிகளில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்தச் சேவையின் போது கடந்த ஆண்டு 2012 இதற்கான நீர் விநியோகக் கட்டணங்களை இதுவரை செலுத்தாதவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை வழங்கக் கூடியதாக இந்தச் சேவை இடம்பெறவுள்ளது என்று கூறப்பட்டது.

நாளை வெள்ளிக்கிழமை வில்லூன்றி பகுதி மக்களும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குருநகர் தண்ணீர் தாங்கிப் பகுதியைச் சேர்ந்த மக்களும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பாஷையூர் மக்களும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடமாடும் சேவையைப் பயன்படுத்தி தங்களது கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும்.


வேறு பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சேவையில் தெரிவிக்க முடியும் எனவும் கூறப்பட்டது. (ம-7)

## பனங்கிழங்கு, சோளம் விற்பனை மும்முரம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்ப்பாணத்தில் சோளம், பனங்கிழங்கு விற்பனை மும்முரமாக இடம்பெற்று வரும் நிலையில் அவற்றின் விலைகளிலும் சற்று வீழ்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

6 சோளம் பொத்திகள் நூறு ரூபாவும் வீதமும், பனங்கிழங்கு 25 நூறு ரூபாவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ம-ரி)



காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய ஆரம்ப பிரிவுக்கான புதிய கட்டடம் பிரிட்டனில் வாழும் பாடசாலையின் பழைய மாணவர் ஒருவரால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர் ஒருவரால் பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் நாடா வெட்டி திறந்து வைத்ததுடன் கட்டடத்துக்கான நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்து வைத்தார். (ம-250)

## கச்சதீவுக்கான சேவைக்கு வடதாரகை பயன்படுத்தப்படும்?

யாழ்ப்பாணம்,பெப்.7

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு வடதாரகை படகை கச்சதீவுக்கான சேவையில் ஈடுபடுத்தக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சேவைக்குப் பயன்படுத்த வடதாரகை பொருத்தமில்லை என்று வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் உட்பட ஏனைய தேவைகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையில் இருந்து ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவைக்காக மேலதிக படகுகளை நயினாதீவில் இருந்து பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய யாத்திரிகர்களின் நன்மைகருதி இரண்டு இடங்களில் சோதனை நிலையங்கள் நிறுவப்பட வேண்டும் என்று இந்திய அதிகாரிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கச்சதீவு திருவிழா தொடர்பான கூட்டத்தில் இந்த விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. (ம-7)

## நல்லூர் பிரதேச சபையுடன் இணைகிறது மேலும் ஒரு தொகுதி

நல்லூர் பிரதேச சபை மேலும் ஒரு தொகுதியால் அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது பிரதேச சபை 12 தொகுதிகளைக் கொண்டதாக உள்ளது. இது 13 தொகுதிகளாக எல்லைகள் நிர்ணயிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதேசசபை உறுப்பினர்கள் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எல்லைகள் நிர்ணயத்தை அடுத்து எதிர்காலத்தில் பிரதேச சபைக்கு தொகுதி உறுப்பினர்கள் 13 பேருடன் மேலதிகமாக நான்கு உறுப்பினர் சேர்ந்துக் கொள்ளப்படுவர் என்று கூறப்பட்டது. (ம-7)

## ஜப்பான் அரசின் நிதியில் குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் யாழ். மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைத்து வருகிறது. யாழ். மாவட்ட சர்வதேச புலம்பெயர்தலுக்கான நிறுவனத்தினர் இத்தகவலைத் தெரிவித்தனர்.

**குளங்களைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு ஜப்பான் அரசு 7.30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.**

நீண்ட காலமாக புனரமைக்கப்படாத குளங்களைத் தெரிவுசெய்து அவற்றைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு ஜப்பான் அரசு 7.30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. புனரமைப்புப் பணிகளை புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

அச்சுவேலி பிரதேசத்தில் வளலாய் விவசாயகுளம் மற்றும் வாய்க்காலைப் புனரமைப்பதற்காக 4 மில்லியன் ரூபாவும், மண்டைதீவு பிரதேசத்தில் உள்ள விவசாய குளம் மற்றும் வாய்க்காலைப் புனரமைப்பதற்காக 3.30 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

இந்த நிதியின் ஊடாகக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கும், பிரதேசங்களுக்கும் மிகவும் பயன்மிக்க வகையில் இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டது. (ம-13)

## நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாம்



யாழ்ப்பாணம்,பெப்.7

நெடுந்தீவு பிரதேசத்தில் இரண்டு நாள்கள் நடத்தப்பட்ட இலவச நடமாடும் மருத்துவ முகாமில் 400 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, உயர் குருதிய முக்கம் போன்ற நோய்கள் தொடர்பான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நோய் குறித்து இனம் காணப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.மோகனகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த இரண்டு நாள் மருத்துவ முகாமுக்கு யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவர் ப.கலாவேந்தன், வேலணை அரச வைத்தியசாலை மருத்துவர் எஸ்.பாலச்சந்திரன், யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ பீட மாணவர்கள், தீவுப்பகுதி பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் வருகை தந்திருந்தனர். (ம-17)

## அச்சுவேலி பஸ் நிலையத்தில் நிறுத்தப்படும் தனியார் பஸ்கள்

### பயணிகள் பெரும் சிரமத்தில்

அச்சுவேலி,பெப்.7

அச்சுவேலி பஸ் நிலையத்தில் தனியார் பஸ்கள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. இதனால் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் நிலையத் துக்குள்ளே செல்ல முடியாத நிலையில் வீதியோரத்தில் தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்கி செல்கின்றன என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் அச்சுவேலி பஸ் நிலையத்தில் தனியார் பஸ்கள் குறித்து ஒதுக்கப்பட்ட நேரத்துக்குரியவை மட்டும் தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் சென்றன.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் பஸ் நிலையத்தை முழுமையாக பயன்படுத்தி வந்தன.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் சில வசதி குறைகள் காணப்பட்டமையால் வலிகிழக்கு பிரதேச சபையால் பஸ் நிலையம் 50 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.



அச்சுவேலியில் தனியார் பஸ் உரிய முறையில் தரித்து நின்று பயன்படுத்துவதற்கு வல்லை சந்தியில் காணி ஒதுக்கப்பட்டதோடு கட்டடத்துக்கான அடிக் கல்லை முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.கணேஷ் நட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் பஸ் நிலையத்தை பயன்படுத்தாமல் வீதியோரத்தில் தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்வதால் விபத்துக்கள் ஏற்பட ஏது நிலை காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் வலி.கிழக்கு பிரதேச சபையும் உரிய கவனம் செலுத்தவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-11)

## யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டாக்காலியின் தொல்லை

யாழ். போதனா வைத்தியசாலையின் 30 ஆம் இலக்க விடுதியில் இருந்து இந்த மாத ஆரம்பத்தில் யாழ். மாநகர சபையால் வெளியேற்றப்பட்ட கட்டாக்காலி நாய் மீண்டும் அதே இடத்துக்கு வந்து பெரும் இடையூறுகளை விளைவித்து வருகிறது என்று நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

நோயாளர்களது கட்டிலுக்குக் கீழ் தங்கியிருக்கும் இந்தக் கட்டாக்காலி நாய் நோயாளர்களால் வைக்கப்படும் உணவுகளையும் திருடி வருகிறது என்று கூறப் பட்டது.

அத்துடன் விடுதியில் உள்ள நோயாளர்களையும், விடுதி பராமரிப்பாளர்களையும் குலைத்து அச்சுறுத்தி வருகின்றது.

குறித்த கட்டாக்காலி நாயின் மீள் வருகையால் அங்குள்ள நோயாளிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நோயாளர்கள் கேட்டுள்ளனர். (ம-ரி)

## ஆஸ்திரேலிய அரசின் நிதியில் யாழ்.மாவட்ட பயனாளிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம்,பெப்.7

ஆஸ்திரேலியா அரசின் நிதி உதவியுடன் யாழ். மாவட்ட பயனாளிகளுக்கு ஐ.ஒ.எம். நிறுவனம் கடந்த வருடம் வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கியுள்ளது என்று யாழ். மாவட்ட புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஆஸ்திரேலிய அரசால் யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாய, கடற்தொழில் பயனாளிகளுக்காக கடந்த வருடம் 31.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. இந்த நிதி உதவிகள் ஐ.ஒ.எம். நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டன. சேந்தாங்குளம் பிரதேசத்தில் வான் தோண்டல், கடற்தொழிலாளர்களுக்கான பொது நோக்கு மண்டபம், நூலகம், மீன் கூறுவிலை நிலையம், வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் நிலையம் என்பன அமைத்தல் கடற்கரை வீதி புனரமைப்பு ஆகியவற்றுக்காகப் 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தனங்களப்பு பிரதேசத்தில் 7 கிலோ மீற்றர் நீளமான உவர் நீர் தடுப்பு அணையை அமைத்துக் கொடுப்பதற்காக 18 மில்லியன் ரூபாவும் மறவன்புலோப் பிரதேசத்தில் 400 ஏக்கர் சிறு தானிய பயிர்ச் செய்கை மேற் கொள்ளும் வயல்களில் சுற்றி வேலி அமைத்துக் கொடுப்பதற்காக 1.2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்கள் யாவும் கடந்த வருடம் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-13)

# ஈரானில் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிப்பு

ஈரான் நாட்டில் சிறைப்பிடிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் 26 பேர் உள்ளிட்ட 29 மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை விடுவிக்கப்பட்டனர்.

குமரி மாவட்டம், ஆரோக்கியபுரம், கடியப் பட்டணம், குளச்சல், ராமன்துறை, பூத்துறை மற்றும் கேரளப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கத்தார் நாட்டில் தங்கி அங்குள்ள தனியார் நிறுவனங்கள் மூலம் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்கள் கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி கத்தார் துறைமுகத்தில் இருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது ஏற்பட்ட கடல் சீற்றத்தால், குறித்த மீனவர்கள் ஈரான் எல்லைக்குள் சென்றன ர். அங்கு ரோந்து சென்ற கடலோரக் காவல் படையினர் மீனவர்கள் 29 பேரையும் கைது செய்தனர்.

அவர்களுக்கு தலா ரூ.75 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டாலும் தொடர்ந்து அங்குள்ள தீவில் சிறைப் படுத்தப்பட்டனர். அவர்களை மீட்க பல்வேறு மீனவ அமைப்புகள் வலியுறுத்தி வந்த நிலையில் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் விமானம் மூலம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அதிகாலை திருவனந்தபுரம் சென்றடைந்தனர். (வ)



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா வருவதற்கு அனுமதியளித்த இந்தியப் பிரதமர் மன்மோகசிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோருடைய கொடும்பாவிகள் தந்தை பெரியார் திராவிட கழகம் சார்பில் கடந்த திங்கட்கிழமை காலை சென்னையிலுள்ள புதிய தலைமைச்செயலகம் முன்பாக எரிக்கப்பட்டன.

## மதுபோதையில் இருந்த தந்தை கடித்ததால் குழந்தை சாவு

சென்னை, பெப். 7

மதுபோதையில் இருந்த தந்தையால் கடிக்கப்பட்ட 5 மாத குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

ராஜஸ்தான் மாநிலம் பிகானீர் பகுதியைச் சேர்ந்த 5 மாத குழந்தை ஒன்று, கடந்த 26 ஆம் திகதி, மூக்கு மற்றும் உதடுகளில் கடுமையான காயத்துடன் ஜெய்ப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது.

விசாரணையில் குடிபோதையில் இருந்த அந் தக் குழந்தையின் தந்தை குழந்தையை கடித்தது தெரியவந்தது. (வ)

# மஹிந்தவின் வருகையை கண்டித்து சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப். 7

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து சட்டத்தரணிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சேலம் நீதிமன்ற வளாகத்தில் கூடிய சேலம் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஜனாதிபதி, தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்க இயலாது என்று கூறியதற்கு கடும் கண்டனமும் தெரிவித்தனர்.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழர்களுக்கு தன்னாட்சி தர இயலாது என்று அறிவித்த தற்கும் கண்டனம் தெரிவித்தும், நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்தவர்கள் ராமநாதபுரம் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் ரயிலை மறித்து கோஷமிட்ட அந்தக்கட்சியைச் சேர்ந்த 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில் இலங்கை ஜனாதிபதியின் இந்தியா பயணத்தைக் கண்டித்து கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள், ரயில் மறியலில் நேற்று முன்தினம் மாலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டம் குறித்து தகவல் அறிந்த ரேஸ்கோர்ஸ் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரசேகர் மற்றும் ரயில்வே பொறுப்பதிகாரி லாரன்ஸ் ஆகியோர் விரைந்து சென்று மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு நடத்தினர். எனினும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்ததால் 13 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியாவுக்கு விஜயம் செய்ய உள்ள இலங்கை ஜனாதிபதியைக் கண்டித்து மாணவர்களும் கோஷம் எழுப்பினர். (வ)

## மகாராஷ்டிரா எல்லையில்

## 12 ஆயிரம் ஆண்டுக்கு முந்தைய குகை ஓவியங்கள் கண்டுபிடிப்பு



மகாராஷ்டிரா - மத்திய பிரதேச மாநில எல்லையில் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய குகை ஓவியங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மகாராஷ்டிரா - மத்திய பிரதேச எல்லைப் பகுதியான பீதுல் அருகே, சத்புரா மலைத்தொடர் உள்ளது. அங்கு இந்திய தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவன ஆய்வாளர்கள் ஆய்வில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு ஏராளமான குகைகள் இருப்பது தெரிந்தது.

அந்த குகைகளுக்குள் சென்று அவர்கள் பார்த்த போது, அங்கு பழங்கால ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. சிவப்பு, வெள்ளை, பச்சை நிறங்களைப் பயன்படுத்தி அந்த ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரம் உள்ளிட்டவை ஓவியங்களில் இடம் பெற்றிருந்தன. தீவிர ஆராய்ச்சி செய்தபோது அந்த ஓவியங்கள் கற்கால மனிதரால் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டிருக்க வேண்டும் என்று தெரியவந்தது.

## குஜராத் வளர்ச்சித்திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்க வேண்டும்

### பிரதமரிடம் மோடி நேரில் வலியுறுத்து



குஜராத்தின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பிரதமரை நேரில் சந்தித்து தெரிவித்துள்ளார்.

மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில், குஜராத் மாநிலத்துக்கும் மத்திய அரசு காலம் தாழ்த்தி வருவதாக, பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து தான் பேசியதாக மோடி மேலும் குறிப்பிட்டார்.

குஜராத்தின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று பிரதமரிடம் தான் வலியுறுத்தியுள்ள தாகவும் அவர் மேலும் கூறினார்.

டில்லியில் கல்லூரி விழா ஒன்றில் கலந்து கொண்ட மோடி பிரதமர் மன் மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். (வ)

## எல்லையில் ராணுவம் உஷார் நிலையில்

### இராணுவ அதிகாரி கருத்து

டில்லி, பெப்.7

பாகிஸ்தானை ஒட்டிய இந்திய எல்லைப் பகுதியில் எமது இராணுவத்தினர் உஷார் நிலையில் உள்ளனர் என்று இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ருஸ்தம் பட்நாயக் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதல் வாரத்தில் இந்திய இராணுவ வீரர்கள் இருவரை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொன்றதையடுத்து எல்லையில் பதற்றம் நிலவியது. இந்த நிலையில் இராணுவம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த கண் சிகிச்சை முகாமில் பி.டி.ஐ. செய்தியாளரிடம் பட்நாயக் மேலும் கூறியதாவது:-

எமது படை வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் எச்சரிக்கை யாக உள்ளனர். இருதரப் புக்கும் நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் எவ்வித விரும்பத்தகாத சம்பவங்களும் இடம்பெற அனுமதிக்க மாட்டோம்-என்றார். (வ)

## பேஸ்புக்கில் மன்மோகன் சிங்கின் கேலிச்சித்திரம் வெளியிட்டவர் கைது

பிரதமர் மன்மோகன் சிங் பற்றி பேஸ்புக்கில் கேலிச் சித்திரம் வெளியிட்டதற்காக உத்தரப் பிரதேச மாநில சிவில் பொறியியலாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர் கபில்சிபல், சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம்சிங் உள்ளிட்டோர் குறித்துச் சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரங்களை வெளியிட்டதாக லக்னோவைச் சேர்ந்த அந்த சிவில் பொறியியலாளர் மீது முறைப்பாடு கூறப்பட்டது. இதே போல் ஆட்சேகபரமான கருத்துகளையும் அவர் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

அதனால் பதற்றமான சூழ்நிலை உருவாவதைத் தடுக்கும் வகையில் அந்த சிவில் பொறியியலாளர் கைது செய்யப்பட்டார் என்று உத்தரப் பிரதேச பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## காஷ்மீர் பெண்கள் இசைக்குழுவை விமர்சித்தோர் மீது விசாரணை

காஷ்மீர் பெண்கள் இசைக் குழுவுக்கு எதிராக இணையத்தளங்களில் வெறுக்கத்தக்க கருத்துகளைப் பதிவு செய்தவர்கள் மீது பொலிஸார் விசாரணை மேற் கொண் டுள்ளனர்.

பெண்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட காஷ்மீரின் முதலாவது இசைக் குழு 'பிரகாசம்' மீது கிராண்ட் முஃப்தி என்ற அமைப்பு பத்வா பிறப்பித்தது. அது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

'பிரகாசம்' இசைக் குழுவை மோசமாக விமர்சித்து ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக இணையத் தளங்களில் சிலர் கருத்துகளைப் பதிவு செய்திருந்தனர். இது தொடர்பாக காஷ்மீர் பொலிஸார் வழக்குப் பதிந்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பில் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறியதாவது:-

சைபர் செல் உதவியுடன் ஃபேஸ்புக்கில் தவறாக விமர்சனம் செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அவர்கள் 2 நாள்களில் கைது செய்யப்படுவார்கள் - என்றார். இது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## மஹிந்த வருகையைக் கண்டித்து

# ஆளுநர் மாளிகையை முற்றுகையிடச்சென்ற வாழ்வுரிமைக் கட்சியின் 500 பேர் கைது

சென்னை, பெப். 7

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையை அனுமதிக்கும் மத்திய அரசைக் கண்டித்து தமிழக ஆளுநர் மாளிகையை முற்றுகையிட ஊர்வலமாக சென்ற தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுனர் வேல்முருகன் உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.




இலங்கை ஜனாதிபதி மூன்றாவது முறையாக இந்தியாவுக்கு நாளை வெள்ளிக் கிழமை வரவுள்ளார். அவரது இந்திய பயணத்துக் குத் தடை விதிக்க வேண் டும் என்பது ஒட்டு மொத்த தமிழக அரசியல் கட்சிகளின் கோரிக்கை.

இந்து முன்னணியின் ராமகோபாலன் ஒருவர் மட்டுமே ராஜபக்ஷவை ஆதரிக்கிறார். ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. அதன் ஒரு கட்டமாக தமிழக ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தப் போவதாக தமிழக வாழ்வுரிமைக் கட்சி அறிவித்தது.

நேற்று முன்தினம் காலை சென்னை சேப்பாகம் அரசு விருந்தினர் மாளிகை முன்பாக வேல்முருகன் தலைமையில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் கூடினர். அதன் பின்னர் அங்கிருந்து ஆளுநர் மாளிகை நோக்கி கடற்கரை சாலை வழியே ஊர்வலமாகச் செல்ல முயன்றனர்.

அவர்கள் அனைவரையும் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். பின்னர் வேல் முருகன் உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.



## பயணிகள் பஸ் மீது தற்கொலைத் தாக்குதல்


### பல்கேரியாவில் 6 பேர் சாவு

பேர்க்காஸ், பெப்.7

ஐரோப்பிய நாடான பல்கேரியாவில் பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் பஸ் ஓட்டுநர் மற்றும் 5 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல்லாவுக்கும், தாக்குதலை நடத்தியோருக்கும் இடையே பணப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அதையடுத்து தாக்குதலை ஹிஸ்புல்லா அமைப்பே மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ற)

## சொலமன் தீவில் நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை



மெல்பேர்ன், ஜன.7

பசுபிக் கடலில் அமைந்துள்ள சொலமன் தீவில் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் அளவில் 8 புள்ளியாக இது பதிவாகி உள்ளது. நிலநடுக்கத்தை அடுத்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இந்தோனேஷியா மற்றும் பிஜி தீவு பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சொலமன் தீவின் சென்டா கிரஸ் தீவுப் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

புவிநடுக்க மையத்தில் இருந்து சுனாமி அலைகள் உருவாக வாய்ப்பு உள்ள தென பசுபிக் நிலநடுக்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ற)

## சீன இராணுவம் குறித்து குறைத்து மதிப்பிடாதீர்!

### துணை இராணுவத் தளபதி



பெய்ஜிங், பெப்.7

சீன இராணுவம் குறித்து குறைத்து மதிப்பிடக் கூடாது. நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் விடயத்தில் சீன இராணுவம் எப்போதும் உறுதியான முடிவையே எடுக்கும்- இவ்வாறு எச்சரித்துள்ளார் சீன இராணுவத்தின் துணைத் தளபதி கீ ஜியாங்குவா.

தென் சீனக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தமர்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கருத்தமர்வின் பின்னர் இராணுவத் துணைத் தளபதி கீ ஜியாங்குவா கூறியதாவது:-


நாட்டின் இறையாண்மையையும் முக்கிய நலனையும் பாதுகாக்க சீனா கடுமையான தாக்குதல் நடத்தத் தயங்காது. நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் விடயத்தில் சீனாவின் உறுதியான முடிவு குறித்து பக்கத்து நாடுகள் குறைவாக மதிப்பிடக்கூடாது என எச்சரிக்கிறேன்- என்று தெரிவித்தார்.

சீன இராணுவம் சுமார் 23 இலட்சம் வீரர்களைக் கொண்டுள்ளது. அண்மைக்காலமாக ஜப்பான், தைவான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் எல்லை தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. அத்துடன் பசுபிக் கடலில் ஆதிக்கம் செலுத்துவது தொடர்பில் அமெரிக்காவுடனும் மறைமுகமான போட்டி நடைபெற்று வருகிறது.

இந்தநிலையிலேயே சீன இராணுவத் துணைத் தளபதி இவ்வாறான கருத்தை வெளியிட்டிருக்கிறார். (ற)

# அணு ஆயுத சோதனை கடும் விளைவைத் தரும்

## கடுந்தொனியில் எச்சரிக்கிறது அமெரிக்கா
## விடாப்பிடியாக நிற்கின்றது வடகொரியா



வோஷிங்டன், பெப்.7

வடகொரியா அணு ஆயுத சோதனையை நடத்தும் பட்சத்தில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி எச்சரித்துள்ளார்.

வடகொரியா, இன்னும் சில நாள்களில் அணு ஆயுத சோதனையை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தநிலையிலேயே அமெரிக்க வெளியுறவுச் செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் அணு ஆயுத சோதனைக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டம் உலக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் என்றும் அவை அச்சம் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி கடுந்தொனியிலான எச்சரிக்கை விடுத்திருக்கிறார். சர்வதேச நாடுகள் கருத்துகளை அசட்டை செய்து வடகொரியா அணு ஆயுத சோதனையை மேற்கொள்ளுமாயின் கடுமையான விளைவுகளை அந்த நாடு சந்திக்க நேரிடும். இது சர்வதேச நாடுகளிடையே ஒரு அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், வடகொரியாவின் அணு ஆயுத சோதனை தவிர்க்க முடியாத ஒன்று என்று அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)

## எம்–23 போராளிகள் 19 பேர் கைது

ஜோகன்னஸ்பேர்க், பெப்.7

எம்-23 கிளர்ச்சியாளர்கள் 19 பேரைக் கைது செய்துள்ளதாக தென்னாபிரிக்க குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான கொங்கோவில் எம்-23 என்ற கிளர்ச்சி அமைப்பு தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் 19 பேரையே தென்னாபிரிக்கக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இருவர் எம்-23 அமைப்பின் முக்கிய தலைவர்கள் எனக் கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்ட 19 பேரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## நிரூபிக்கப்பட்டது போர்க்குற்றம்

# முக்கிய அரசியல் கட்சி பிரமுகருக்கு பங்களாதேஷில் ஆயுள் தண்டனை

டாக்கா, பெப்.7

போர்க்குற்றங்களில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டதை அடுத்து பங்களாதேஷின் பிரதான இஸ்லாமிய கட்சியின் தலைவர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஜமாத் இ இஸ்லாமி கட்சியைச் சேர்ந்த அப்துல் காதர் முல்லா என்பவருக்கே ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிடம் இருந்து பங்களாதேஷ் விடுதலை பெற முன்னர் இடம்பெற்ற படுகொலைகளுடன் இவர் தொடர்புபட்டுள்ளார் என்று போர்க்குற்றங்களை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட சிறப்பு போர்க்குற்றங்கள் தீர்ப்பாயம் உறுதி செய்தது. அதனை அடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. அது குறித்த தீர்ப்பை நீதிபதிகள் வெளியிட்டபோது, அப்துல் காதர் முல்லா அவர்களை நோக்கி உரத்த குரலில் திட்டினார் என்று கூறப்படுகிறது.

1971ஆம் ஆண்டு நடந்த போரின்போது, சுமார் முப்பது இலட்சம் பங்களாதேஷ் மக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போர், பங்களாதேஷ் பாகிஸ்தானிலிருந்து பிரிய வழிவகுத்தது. அந்தப் போரின் போது நூற்றுக்கணக்கான நிராயுதபாணிகளான சிவிலியன்கள் கொல்லப்பட்ட சம்பவங்களில் அப்துல் காதர் முல்லா சம்பந்தப்பட்டிருந்தார் என்று இனம்காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, தீர்ப்பு வெளியானதை அடுத்து அப்துல் காதர் முல்லாவின் கட்சி நாட்டில் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. வன்முறைகள் வெடிக்கலாம் என்ற சந்தேகத்தில் நாட்டின் முக்கிய பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# காஷ்மீர் பிரச்சினையால் உலக அமைதிக்கு ஆபத்து

### பாக். பிரதமர் பர்வேஷ் அஷ்ரப்

இஸ்லாமாபாத், ஜன.7

காஷ்மீர் பிரச்சினை அந்தப் பகுதிக்கு மட்டுமின்றி உலக அமைதிக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றது என்று பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் ஒற்றுமை தினம் தொடர்பாக நடைபெற்ற விழா ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

காஷ்மீர் பிரச்சினை குறித்து தீர்வு காண உலக மக்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். காஷ்மீர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண உலக நாடுகள் இந்தியாவை வலியுறுத்த வேண்டும். பாகிஸ்தான் எப்போதுமே இந்தியாவுடன் நல்லுறவையே விரும்புகிறது.

காஷ்மீர் மக்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட சுயமாக முடிவு எடுக்கப்பட வேண்டும். காஷ்மீர் பிரச்சினை அந்தப் பகுதிக்கு மட்டுமின்றி உலக அமைதிக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறக்கூடும்-என்று அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் ஒற்றுமை தினம் 1990ஆம் ஆண்டில் இருந்து பெப்ரவரி 5ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது. (ற)

## சிறுமிகள் துஷ்பிரயோகம்: 115 ஆண்டுகள் சிறைத் தண்டனை

கோலாலம்பூர், பெப்.7

சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்தவருக்கு 115 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 50 கசையடிகள் வழங்குமாறு மலேசிய நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மலேசியாவின் சபாநகரைச் சேர்ந்தவர் ரபிதின் சதிர். 42 வயதான அவர் கடந்த ஆண்டு தனது அயல் வீடுகளில் வசித்த 17, 16 மற்றும் 8 வயது சிறுமிகளை கத்தியைக் காட்டி மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்,

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து ராப் நகர நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியது. அதில் ரபிதினுக்கு 115 ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் 50 கசையடிகள் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.(ற)

# விமான விபத்து


### பிரேஸிலில் 5 பேர் சாவு

சவ் பவ்லோ, பெப்.7

பிரேஸிலின் தென்கிழக்கு பகுதியில் இடம்பெற்ற விமான விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

சவ் பவ்லோ நகரம் நோக்கி விமானம் பயணித்தபோதே விபத்து ஏற்பட்டுள்ளது. விமானம் வயல் ஒன்றில் வீழ்ந்து நொருங்கியதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம் என்று தெரிவித்திருக்கும் பொலிஸார், மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ற)



*ஜப்பானில் புகழ்பெற்ற 64ஆவது சப்போரோ பனித் திருவிழா கோலாகலமாக நேற்றுமுன்தினம் தொடங்கியது.*

*ஆண்டுதோறும் பெப்ரவரி மாதத்தில் 7 நாள்களுக்கு சப்போரோ என்ற இடத்தில் நடைபெறும் இந்த புகழ் பெற்ற பனித் திருவிழாவில் பல்வேறு பனிச் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்படுவது வழக்கம்.*



சர்வதேச நகப்பூச்சுப் போட்டி கடந்த திங்கட்கிழமை ரோமில் நடைபெற்றது. அதில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து 220 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். 7 பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டிக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டுள்ள ஓர் போட்டியாளர்.

## சிறுமிகளும் இனிமேல் பர்தா அணிய வேண்டும்

### சவூதியில் மதகுரு கட்டளை

றியாத், பெப்.7

சவூதி அரேபியாவில் சிறுமிகளும் பர்தா அணிய வேண்டும். இல்லாவிட்டால் தண்டனை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார் அரச அங்கீகாரம் பெற்ற முஸ்லிம் மதகுருவான ஷேக் அப்துல்லா தாவூத்

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர்,

முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு பர்தா அணிவிக்க வேண்டும். இதன் மூலம் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்கள் குறையும். பர்தா அணியாத குழந்தைகளுக்கு பத்வா (தண்டனை) வழங்கப்படும்- என்று தெரிவித்தார்.

எனினும் எவ்வாறான தண்டனை வழங்கப்படும் என்பது குறித்து அவர் குறிப்பிடவில்லை.

தாவூத் இவ்வாறு தெரிவித்திருப்பது முஸ்லிம் மக்களிடையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. தாவூத்தின் டுவீட்டர் பக்கத்தில் எதிர்ப்புக் கருத்துக்கள் குவிந்து வருகின்றன.

இதேவேளை, சவூதியின் முன்னாள் நீதிபதியான ஷேக் முகமது அல்-ஜஸ்லானா கருத்துத் தெரிவிக்கையில், இதுபோன்ற செயற்பாடுகள் இஸ்லாம் மற்றும் ஷரியா அமைப்பின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும்- என்று தெரிவித்தார். (ற)

## ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் மீது செருப்பு வீச்சு

### எகிப்தில் சம்பவம்



கெய்ரோ, பெப்.7

எகிப்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் மீது காலணி வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் உள்ள பழமையான வழிபாட்டு தலத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்தபோதே ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் மீது காலணி வீசப்பட்டுள்ளது. எனினும் அதில் இருந்து நிஜாத் தப்பித்துக் கொண்டார்.

தாக்குதலை நடத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணைகளின் போது, அவர் சிரிய நாட்டு ஆதரவாளர் என்பது தெரிய வந்துள்ளது.

தாக்குதலை நடத்தியவர் தற்போது பொலிஸாரின் காவலில் உள்ளார். அவர் விரைவில் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று தலைமுறைகளின் பின்னர், ஈரான் தலைவர் ஒருவர் தற்போதுதான் எகிப்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## துப்பாக்கிக் கலாசாரத்தை ஒழிக்க இதுவே சரியான தருணம் - ஒபாமா

நியூயோர்க், ஜன.7

துப்பாக்கி வன்முறையை ஒழிப்பதற்கு இதுவே சரியான தருணம். அதற்கான நடவடிக்கைகள் விரிவாக ஆராயப்படுகின்றன. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

மினியாபோலிஸில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. துப்பாக்கிக் கலாசாரத்தை தடுக்க ஏதாவது செய்தாக வேண்டும். அதற்கான சரியான நேரம் இதுவே. நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

துப்பாக்கிக் கலாசாரத்தை முற்றாக ஒழிக்க மக்களிடையே விழிப்புணர்வு அவசியம். அதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்



படும்.

எமது வீதிகளும், பாடசாலைகளும் துப்பாக்கிச் சண்டை நடத்துவதற்கான இடமல்ல- என்று தெரிவித்தார். (ற)

## தவறாக எழுதினால் சுட்டிக்காட்டும் பேனா

### தயாரித்தது ஜேர்மன் நிறுவனம்

லண்டன், பெப்.7

பிழையாக எழுதினால் சுட்டிக்காட்டும் நவீன பேனாவை ஜேர்மனைச் சேர்ந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. ஜேர்மனைச் சேர்ந்த 'லெர்ன்ஸ்டிப்ட்' நிறுவனம் தயாரித்துள்ள பேனாவை பயன்படுத்தும்போது, எழுத்துப்பிழை அல்லது இலக்கணப்பிழை ஏற்பட்டால், பேனாவில் உள்ள கண்காணிப்புக் கருவி, எழுதுபவரின் கை விரல்கள் உணரும்படி அதிர்வை ஏற்படுத்தும்.

அதன்மூலம் எழுதியதில் தவறு இருக்கிறது என்று இதன் மூலம் உடனடியாக தெரிந்துகொள்ள முடியும். குழந்தைகள் தவறில்லாமல் எழுத உதவும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த பேனா எல்லா வயதினருக்கும் உபயோகமாக இருக்கும் என்று அதைத் தயாரித்துள்ள நிறுவனம் தெரிவித்துள்ளது.(ற)

## மரண அறிவித்தல்

### கனகசபை சபாரட்ணம்



மேற்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சபாரட்ணம் கடந்த 27.01.2013 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை(இலக்கணகனகர்)-அன் னம்மா தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி செல்லையா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தசாமி (மஸ்கெலியா), சரஸ்வதி (மன்னார்), காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சோமசுந்தரம், பொன்னுத்துரை,இராசரத்தினம், அருளம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,ஜெனீஸ்வரி(மணி), கமலா தேவி(கமலி-ஓய்வுபெற்ற ஆசிரியை, சென்.பெனடிக் கல்லூரி, கொழும்பு), ஞானசௌந்தரி (கிளி-கனடா), சுலோஜனா(சுசீலா), நகுலேஸ்வரி(றஞ்சினி-கனடா), புவனேஸ்வரி(சாந்தி-ஜேர்மனி),சிவனேஸ்வரி (சிவா-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம், சின்னத்தம்பி(ஓய்வுபெற்ற ஆசிரியர்-சென்.பெனடிக் கல்லூரி கொழும்பு), குலசிங்கம் (கனடா), ரவீந்திரகுமரன்,தனபாலன்(கனடா), ரவீந்திரன் (ஜேர்மனி),ரகுபதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயகௌரி, சிவறஞ்சன், ஜெயசுதா,சிவகரன்,ஜெயறஜீவி,பாலகுமார், வர்சினி, ஹரிகரன், சுஜீத்தா, திவானி,சுஜித்,அஸ்வினி, நிஷாந்தன், சகிலா, ஐங்கரன்,சங்கரன், றோசான், சஞ்சீவ், தனுஷன், சாலினி, குமரன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு பேரனும், தயானி, யதுஸ்,ஸஜிலன், அக்ஷயன்,அஜய்,அக்சனா, ஜோகித், யதுஷா,யனோஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவிலும், இத்துயர நிகழ்வு அளவெட்டியில் உள்ள கணபதிப்பிள்ளை சிவஞானம் என்பவரின் இல்லத்தில் இன்று (07.02.2013) வியாழக்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட்,
அளவெட்டி.
தொ.பே.: 021 373 7099


(சி/6234)(5-6-7)

தகவல்:
சிவஞானம்(மருமகன்).

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
21.06.1965

மறைவு
20.01.2012



### அமரர் கந்தசாமி ஸ்ரீதரன்

(பணியாளர் முத்துப் பிள்ளையார் வண்ணச் சோலை,.கிளிநொச்சி)

திதி- 07.02.2013

**பிறப்பிடம்– கோப்பாய் வடக்கு , பூதர்மடம்**
**வதிவிடம்– 212/2, திருவையாறு,கிளிநொச்சி**

மணவறையில் உங்கள் கரம் பற்றிய
மகிழ்வு கூட இன்னும் மறையவில்லை!
பிணவறையில் உங்களை அணைத்து அழுத
என் விதியினை எண்ணி நாளும் தவிக்கிறேன்!
என் அப்பனே ! என்னை விட்டு எங்கு சென்றீர்கள்!

212/2, திருவையாறு,
கிளிநொச்சி.

(26326) (6.7.11)

மனைவி
அ. ஸ்ரீதரன்

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(12)

துணிந்து ஒரு காரியத்தில் இறங்கும்போது எம்மிடம் பலனைப் பற்றி ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது. மேலும் இதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, எமது முழு உயிரையும் கொடுத்து, விளையாடும் ஆட்டம் இருக்கிறதே, அது தரும் உற்சாகம் எமக்குத்துணை நிற்கிறது.

எது எத்தகைய பலன் கொடுக்கும் என்று ஒரு பட்டியல் போடுங்கள். வெற்றி வாய்ப்பின் சதவிகிதத்தைக் கணக்கிடுங்கள்.

சினிமா எடுக்கிறீர்கள். இலாப நஷ்டம் எப்படி? இருவரில் ஒருவர் வெற்றியடைகிறார். பத்தில் ஒருவருக்குப் போட்ட பணம் வருகிறது என்கிறார்கள். வாய்ப்பு இவ்வளவு குறைந்திருந்தும் ஏன் பலர் இதை மோகிக்கிறார்கள்? மோகம் ஒரு முக்கிய காரணம்! அதற்கு அடிமையாகக் கூடாது.

ஸ்டாக் மார்க்கெட்டில், அல்லது தொழிலில் பணம் போடுகிறீர்கள். வெற்றி வாய்ப்பு இன்னும் அதிகம்.

மனை வாங்கி வியாபாரம் செய்கிறீர்கள். நஷ்டமாகும் நிலை மிக மிகக் குறைவு. இலாபமும் வெற்றி வாய்ப்புமே அதிகம்.

இன்சூரன்ஸ் தொழில் இருக்கிறது. மனிதர்கள் சாவதை வைத்துப் பணம் கொடுக்கிறார்கள். ஏதோ பெரிய சூதாட்டம் போல் தோன்றுகிறது. ஆனால் எவ்வளவு மனிதர்கள் எத்தனை வயதில் என்ன காரணங்களுக்காகச் சாகிறார்கள் என்ற ஆராய்ச்சிப் பின்னணியில் உங்கள் உயிரை 'இன்சூர்' செய்கிறார்கள். அந்தக் கணக்கெடுப்பு பாதுகாப்பையும் நல்ல வருமானத்தையும் இன்சூரன்ஸ் கம்பனிகளுக்குத் தருகிறது.

துணிந்து இறங்கும்போது நாம் ஏந்த விதங்களில் நஷ்டங்களைக் குறைத்துக்கொள்ளலாம்? ஆபத்துக்களின் - நஷ்டங்களின்- தன்மையைக் குறைத்துக் கொள்ள நாம் முயலவேண்டும். ரேஸ் கார் ஓட்டுபவர், கார் நல்ல கண்டிஷனில் இருக்கிறதா என்றும், நல்ல பாதுகாப்புக்களுடன் கட்டப்பட்டிருக்கிறதா என்றும் சரிபார்த்துக் கொள்கிறார். நிறைய இன்சூர் செய்து கொள்கிறார். சிறந்த மருத்துவரைத் தன் செலவில் போட்டி மைதானத்தில் தயாராக இருக்க ஏற்பாடு செய்கிறார். சட்டங்களை மீறிக் கண்டபடி ஓட்டும் தன்மைகொண்ட போட்டியாளர்களை நீக்கும்படி சொல்லி-ரேஸ்கோர்சின் சட்டதிட்டங்களைச் சரிவரப் பரிபாலிக்கிறார்களா என்று பார்க்கிறார்-ஆபத்துக்களைக் குறைத்துக்கொள்கிறார். அவ்வாறே புதிய தொழில் அல்லது வியாபாரத்தில் ஆர்வமுடன் துணிந்து இறங்கும்போது நட்டங்களைத் தவிர்க்க என்னவெல்லாம் செய்யலாம் என்பதையும் யோசிக்க வேண்டும்.

எலெக்ட்ரானிக் கால்குலேட்டரை முதலில் கண்டுபிடித்த மனிதன், எல்லோரும் சிறிய கால்குலேட்டர்களைத் தங்கள் சட்டைப் பையில் வைத்துக்கொள்ளும் நிலை ஒருநாள் வரும் என்று தீர்க்க தரிசனத்துடன் கூறினான். மற்றவர்கள் சிரித்தார்கள். ஏன்? கால்குலேட்டர் மிக பெரிதாக இருந்தது. அதன் விலை அதிகமாய் இருந்தது. எல்லோராலும் வாங்கக்கூடிய நிலையில் அது அன்று இல்லை. அதனால் சிரித்தார்கள். சிரித்தவர்களுக்கு இன்றிருக்கிற நிலையை மீறி எதிர்காலத்தைப் பார்க்கும் தன்மை இல்லை. ஆனால் கால்குலேட்டரைக் கண்டுபிடித்தவனுக்கு அந்தத் திறமை இருந்தது. இவ்வாறே தொழில் அல்லது வியாபாரத்தில் எதிர்காலத்தைக் கணித்து அதற்கேற்ப இப்போதே திட்டமிடும் ஆற்றல் அவசியம்.

''பாதுகாப்பு என்று எண்ணுவது முக்கால்வாசி மூடநம்பிக்கை. இயற்கையில் அப்படி ஏதுமில்லை. மனித சமுதாயம் அப்படி எதையும் அனுபவித்ததில்லை!'' என்கிறார் ஹெலன்கெல்லர் என்ற அமெரிக்கப் பெண்மணி; கண்களைப் பிறவியில் இழந்த பிரமுகர் அவர்.

நாம் துணிந்து எதில் இறங்கினாலும் எதைப் புதிதாகச் செய்தாலும், பலர் "தம்பி ஊருக்குப் புதிசு!" என்று சொல்லி பயமுறுத்தக்கூடும். "அண்ணே, அரசியல்லே என்ன பண்றீங்க?" என்று திருப்பிக் கேளுங்கள். தம்பி ஊருக்குப் புதிசல்ல என்று தெரிந்துகொள்வார்கள்.

**சாதனைப்பாதையில் கட்டுப்பாடு என்ற படிகள்**

ஆசைகள் அழைத்துச் செல்லும் வழிக்குப் பெயர் கட்டுப்பாடு. கட்டுப்பாடற்ற பாதையில் சென்றால் இலக்கை அடைய முடியாது. வாழ்க்கையில் வெற்றி கிட்டாது. வாழ்வு ஒரு நிரந்தரப் போராட்டம். நல்லவற்றிற்கும் கெட்டவற்றிற்கும் சுயகட்டுப்பாட்டிற்கும் மனம்போன போக்கிற்கும் அந்தப் போராட்டத்தில் சுயகட்டுப்பாடு வெற்றி பெறுகிறதா அல்லது மனம் போன போக்கு மேவுகிறதா என்பதைப் பொறுத்துத்தான் வெற்றி அமைகிறது; எமது சாதனைகள் அமைகின்றன.

சுயகட்டுப்பாடு வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் எமக்குத் தேவைப்படுகிறது. சாப்பாடு; உடலின்பம்; வரவு-செலவு; குழந்தை வளர்ப்பு; கோபம், சந்தோஷம், பொறாமை போன்ற உணர்வுகள் என்று, வாழ்வின் எல்லா அம்சங்களிலும் சுயகட்டுப்பாடுடன் இருப்பவர்களே நல்ல பலன்களைக் காண்கிறார்கள்.

ஆழ்ந்து நோக்குமிடத்து இந்த உலகமே- இந்தப் பிரபஞ்சமே- ஒரு கட்டுப்பாட்டில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பது தெரியவரும். பூமியும், சந்திரனும், செவ்வாய்க் கோளமும், சூரியனும் ஒரு கதியில் ஓர் ஒழுங்கில்தான் இயங்குகின்றன. "என்னைச் சுற்றி வா!" என்று சொல்லிவிட்டு சூரியன் பூமியைத் திடீரென்று விட்டு விடுகிறதென்றால் என்னாகும்? எப்படி பிரபஞ்சத்திலுள்ள கோளங்கள் அனைத்தும் பரஸ்பர ஈர்ப்புச் சக்தியால் கவரப்பட்டு ஓர் ஒழுங்குடன் இயங்குகின்றனவோ அது போலத்தான் மனித வாழ்வும், சமுதாயமும் இயங்குகிறது. அதாவது எமது கட்டுப்பாடு, எமது வாழ்வை மட்டுமின்றி, பிறர் வாழ்வையும் தொடுகிறது; பாதிக்கிறது.

கற்பு என்பதும் ஒரு வகை கட்டுப்பாடுதான். கற்பு என்பது வாழ்வின் ஒரு நெறி. அதை ஏன் போற்றுகிறோம் என்றால் அந்த நெறியைக் கடைப்பிடிப்போரின் வாழ்க்கை பூராவும் அது ஊடுருவுகிறது. அதனால் அவர்கள் வலிமை பெறுகிறார்கள்.

*எம்.எஸ்.உதயமூர்த்தி* (தொடரும்)

# இளையோரின் ஆற்றல்களை வெளிக்கொணர ஊக்குவிப்புத் தேவை


## இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், பெப்.7

இளைஞர்களின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும்போது சமூகத்தில் உள்ளவர்கள் அதனை ஊக்குவித்து மேலும் ஆற்றல் மிக்க செயல்களை மேற்கொள்ள வழிகாட்டிகளாக இருக்கவேண்டும்.

யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் பி.ஈஸ்வரராஜா இவ்வாறு கூறினார்.

சாளினி சாள்ஸ் எழுதிய 'உனக்காக' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

எமது பிரதேசத்தின் கலை, கலாசாரம் பண்பாடுகளுக்கு அமைவாக இளைஞர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்திய வண்ணம் உள்ளார்கள்.

இத்தகையவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் பணிகளை இளைஞர் சேவை மன்றம் மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக எமது பண்பாடுகளை உணர்த்தக்கூடிய ஆக்கங்களை வெளியிடும் எழுத்தாளர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

நாடளாவிய ரீதியில் யாழ்ப்பாணத்து எழுத்தாளர்கள் தமது ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து வருகிறார்கள்.

இதனைவிட புலம் பெயர்ந்த நாடுகளில் ஈழத்து எழுத்தாளர்கள் தமக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று மேலும் ஆற்றல் உடையவர்களாக மாறிவருகிறார்கள்.

இளம் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்படும்போது ஏனையவர்களுக்கு இது தூண்டுதலாக அமையும்.- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நூலை வெளியிட்டு வைத்தார். (ம-14)



மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் இடம்பெற்ற முதலாம் தரத்தில் இணைந்த மாணவர்கள் வரவேற்கும் கால்கோள் விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள், பெற்றோர் ஆகியோருடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள். (எ-9)

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து சாட்சியமளிக்க முன்வரின் அதனை கட்டுப்படுத்த முடியும்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

சிறுவர் துஷ்பிரயோகம் எமது பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு பலரும் முன்வருவார்களாயின் அதனைக் கட்டுப்படுத்த முடியும். இந்த விடயத்தில் அரச உத்தியோகத்தர்கள், சமூகப் பொறுப்புள்ளவர்களாகச் செயற்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

எழுத்தாளர் டாக்டர் ஆ.பேரின்பநாதனின் 'சிறுவர் துஷ்பிரயோகம்', 'மதுவும் அடிமை நிலையும்' என்ற இரு நூல்களின் வெளியீட்டுவிழா வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ரூபினி வரதலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர் துஷ்பிரயோகம் எமது சமூகத்தில் களையப்பட வேண்டுமானால், சமூகத்தில் பொறுப்புள்ள ஒவ்வொரு பிரஜையும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் பாடசாலைக்கும் தனியார் கல்வி நிலையத்துக்கும் மட்டுமன்றி வேறு எங்கு செல்கிறார்கள், எவருடன் பழகுகிறார்கள் என்பதையும் பெற்றோர் கவனிக்க வேண்டும்.

மாவட்ட ரீதியாக சிறுவர், பெண்கள் நலன் பேணும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். பாதிக்கப்படுவோர் இவர்களின் ஊடாக தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். சிறுவர் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முறையான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

இளம் வயது திருமணம், பாலியல் துஷ்பிரயோகம், பெண் பிள்ளைகள் காணாமற் போதல் போன்ற பல முறைப்பாடுகள் தினமும் கிடைக்கின்றன. அவற்றைக் குறைப்பதற்கு அரச உத்தியோகத்தர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஆலயங்கள், பாடசாலைகளுக்கு அண்மையில் இயங்கும் மதுபான நிலையங்களும் சட்ட விரோத மதுபான நிலையங்களும் மூடப்பட வேண்டும். புதிய மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதிக்கக் கூடாது-என்றார். (எ)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



சாவகச்சேரி நகரசபையின் துணைத் தலைவரும் முன்னாள் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபருமான கி.சதாசிவமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதிவானாக சாவகச்சேரி மர்வட்ட நீதிபதி லெனின்குமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (எ-9)

# சமுர்த்தி முகாமையாளராக மூவருக்கு பதவி உயர்வு

தென்மராட்சி, பெப்.7

தென்மராட்சி பிரதேசத்தின் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களாக கடமையாற்றிய மூவர் சமுர்த்தி முகாமையாளர்களாக பதவி உயர்வு பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யோகராஜா உதயணன் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலகத்துக்கும், பிளமிங் டிலானி பளைப் பிரதேச செயலகத்துக்கும், மார்க்கண்டு விமல்ராஜ் மன்னார் மாவட்ட நானாட்டான் பிரதேச செயலகத்துக்கும் சமுர்த்தி முகாமையாளர்களாக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளனர். (ம-9)

# பட்டினி பயன் தரும்

சாப்பிடாமல் இருந்து பாருங்கள் அதனாலே கிடைக்கின்ற சௌகரியம் நிறைய இருக்கின்றது! எமக்கு தெரிந்தும்- தெரியாமலும் எம் உடம்புக்குள்ளே எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கலாம்.

எல்லாவற்றையும் செலவு இல்லாமல் சரி செய்வதற்கு சிறந்த வழி- சாப்பிடாமல் இருப்பதுதான்.

உடம்பிலே உண்டாகக்கூடிய நோய்- சுகக்கேடு இவற்றையெல்லாம் இயற்கையாகவே ஜீவ அணுக்கள் சரி செய்கின்றன.!

உண்ணா நோன்பு என்பது உடற்கூறு ரீதியான ஓய்வென்று சொல்கிறார்கள்.

இது நோயைக் குணப்படுத்துகிறது.

அது மட்டுமில்லாமல் நோய் வராமலும் தடுக்கின்றது.

சாப்பிடாமல் இருந்துதான் பிரார்த்தனை-தியானம், இவற்றைக் கடைப்பிடிப்பார்கள்.

இது வெறும் தெய்வீகம் மட்டுமல்ல.

விஞ்ஞானம் கலந்த தெய்வீகம்.

சாப்பிட்டுவிட்டு தியானம் செய்கின்றேன்.. பிரார்த்தனை செய்கின்றேன் என ஆரம்பித்தால்.. உங்களுக்கு தெய்வீக சிந்தனை வராது. தூக்கம் தான் வரும்.

தூங்கி விழிப்பீர்கள். மறுபடியும் சாப்பிடலாம் எனத் தோன்றும்.

உடம்பிலே உண்டாகின்ற தேவையில்லாத கழிவுப்பொருள் நீங்குவதற்கு ' பட்டினி' அவசியம்.

இயற்கை வைத்தியத்திலே உண்ணா நோன்பு எப்பொழுது இருப்பது ? எப்படி இருப்பது ? என்பது நோயின் தன்மையைப் பொறுத்தது.

சரி சாப்பிடாமல் இருக்கிறதுக்கு நான் தயார் , அப்படியென்று கையைத் தூக்கிறவர்கள் மட்டும் முன்னால் வாருங்கள்.

நான் சொல்லுவதைக் கொஞ்சம் செவிமடுங்கள்.

எப்போது ஆரம்பிப்பது? , எப்போது முடிப்பது? இதைப்பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

குளிர்காலத்திலே இது வேண்டாம்.

உடம்பிலே போதுமான தெம்பு இல்லையா?

அப்படியானால் இது உங்களுக்கு வேண்டாம்.

நீங்கள் பட்டினி கிடந்து, ஏற்கனவே இருந்த சிறிய அளவிலுள்ள தெம்பையும் விட்டு விட்டு என்னிடம் சண்டைக்கு வருவீர்கள்!

நரம்புத் தளர்ச்சி, பயந்தசுபாவம், கோபதாபம் அதிகமாக உள்ளவர்களெல்லாம் விலகிக்கொள்ளுங்கள். உங்களுக்கும் இது வேண்டாம்.

முதல் தடவையாக உண்ணாவிரதம் இருக்கப் போகின்றீர்களா? அப்படியானால் நீங்கள் ஒரு வரைமுறையை வைத்துக்கொள்ளுங்கள். வாரத்துக்கு ஒருநாள் உணவை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாக பழச்சாறு மட்டும் குடியுங்கள்.

முதலிலே காலை உணவைக் கைவிடுங்கள். அதன்பின் மதிய உணவை நிறுத்துங்கள். அதன்பின் பழச்சாறு மட்டும் குடித்து விட்டு ஒருநாள் பூராகவும் சாப்பிடாமல் இருங்கள். இப்படிப் படிப்படியாக வரவேண்டும்.

சாப்பிடாமல் இருக்கிற சமயத்தில் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? அதிர்ச்சி- ஆரவாரம் இவையெல்லாம் கூடாது.

அமைதியான சூழ்நிலை வேண்டும். நல்ல காற்றோட்டம் தேவை.

அதிக ஈரமான அல்லது அதிக வெதுவெதுப்பு அளிக்கக்கூடிய ஆடைகள் அணியக்கூடாது.

சுத்தமான குடிதண்ணீர் பருக வேண்டும்.

மனதிலே நல்ல நம்பிக்கையும், பூரண ஓய்வும் மிகவும் அவசியம்.

உண்ணாவிரதத்துக்கு முன்பும், பின்பும் ஒரு வார காலத்துக்கு- கெட்ட பழக்க வழக்கம் எதுவும் இருக்கக்கூடாது.

உண்ணாவிரதத்தை முடிக்கும் போது பழச்சாறு- இளநீர் இப்படி எதாவது குடித்து அதனை நிறைவு செய்யவேண்டும்.

உண்ணாவிரதம் இருக்கும் போது உங்கள் உடம்பிலே சில அறிகுறிகள் தெரியலாம். தலைச்சுற்றல், தலைவலி, பலவீனம், இதய படபடப்பு, நாக்கில் மாவு படிவது, சுவை இல்லாமலே போவது- இந்த மாதிரிஅறிகுறிகள் இருக்கலாம். அதுக்காக கவலைப்பட வேண்டாம். உடம்பு வெப்பநிலை, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் இவைகள் வித்தியாசமாக இருக்கலாம்.

இயற்கை வைத்தியம் உடம்பிலே சேர்ந்த நச்சுக் கழிவுகள் எல்லாம் உண்ணா நோன்பு காலத்தில் வெளியேற்றப்படுகின்றது என கூறுகின்றது.

உடல் பருமனை குறைப்பதற்கு - உண்ணா நோன்பும், உணவுக் கட்டுப்பாடும் ஒரு நல்ல வழி.

இடைவெளி விட்டு இருக்கிற விரதத்தினாலே உடம்புக்கு புதிய உற்சாகம் ஏற்படுகின்றது... நிறை குறைகின்றது. உண்ணா விரதத்தினாலே என்ன சௌகரியம் தெரியுமா? உடல் உறுப்புகளுக்கு ஓய்வு கிடைக்கின்றது.

உடம்பிலே சேர்ந்த நச்சுப்பொருளும், கெடுதல் செய்கின்ற பக்டீரியாப் பொருள்களும் வெளியேறுகிறது.

நோய்க்கு இது நல்ல சிகிச்சை. மனநோயைக் கூட இது கட்டுப்படுத்துகிறது.

புகையிலை- போதைப்பொருள் பழக்கத்திலேயிருந்து விடுபட இது உதவியாக இருக்கும். எடை குறைகிறது, தோற்றப் பொலிவு கிடைக்கின்றது.

உற்சாகம் கிடைக்கின்றது. ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கின்றது. அதனாலே.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 1837 இல் மிஷனரிமாரின் பணித்தளமான பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை



**கர்ணன்**

(கடந்தவாரத் தொடர்ச்சி......)

1837 ஆம் ஆண்டு பருத்தித்துறை ஐரோப்பிய மெதடிஸ்த மிஷனரிமாரின் முக்கிய பணித் தளங்களில் ஒன்றாக மெதடிஸ்த திருச்சபை விளங்கியது.

1848 ஆம் ஆண்டு தொடக்கம் 1849 ஆம் ஆண்டு வரை அருட்திரு ஜோன் வோல்டனும், 1850 ஆம் ஆண்டு தொடக்கம் 1855 ஆம் ஆண்டு வரை அருட்திரு டபிள்யூ. ஆர் வைரமுத்துவும், 1856 ஆம் ஆண்டு தொடக்கம், 1860 ஆம் ஆண்டு வரை அருட் திரு சைமன்ஸ் கொட்டும், 1861 ஆம் ஆண்டு தொடக்கம் 1863 ஆம் ஆண்டு வரைக்கும் அருட் திரு வில்லியம் வோல்டனும், 1864 ஆம் ஆண்டு தொடக்கம் 1867 ஆம் ஆண்டு வரை அருட் திரு லூக்ஸ் கொட்டுமவும் 1867 தொடக்கம் 1869 வரையும் அருட் திரு ஹென்றி டி சில்வாவும், 1870 ஆம் ஆண்டு தொடக்கம் 1871 ஆம் ஆண்டு வரை அருட் திரு சாமுவேல் நைல்ஸாமும் குருக்களாப் பணியாற்றினார்கள்.

1861 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் திருச்சபைக்கு குருவாகப் பணிபுரிந்த அருட் திரு வில்லியம் வோல் டன் 1863 ஆம் ஆண்டு மரணமானார். இவரின் மரணம் விசேடமாக பருத்தித்துறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

1861 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த அவர் நேரடியாக பருத்தித்துறைக்கு வந்து தனது முதல் பணியை ஆரம்பித்தார். இவர் பருத்தித்துறையில் நிலை கொண்டிருந்த காலத்தில் மகாத்தான பணியைச் செய்து வந்தது மாத்திரமன்றி இப்பகுதி மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றிருந்தார்.

> 1821 ஆம் ஆண்டு பருத்தித்துறை கடற்கரையோரப்பகுதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை ஆரம்பிக்கப்பட்டது. அந்த வேளையில் கட்டைவேலிப் பகுதிகளில் இருந்து கொண்டே மெதடிஸ்த திருப் பணித் தூதுப் பணியாளர்கள் மெதடிஸ்த திருப்பணிகளை மேற் கொண்டனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் திருச்சபையின் அங்கத்தவர் தொகை சடுதியாக அதிகரித்தது. 1836 ஆம் ஆண்டு 38 ஆக இருந்த அங்கத்தவர் தொகை 1876 ஆம் ஆண்டு 130 அங்கத்தவர்களாக அதிகரித்தது. பருத்தித்துறை ஜி.பி.எஸ். பாடசாலை பரு த்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையாக, அருட் திரு டபிள்யூ ஆர்.வின்ஸ்டன் குருவாக இருந்த காலத்தில் தரமுயர்த்தப்பட்டது. இப் பாடசாலை தர முயர்த்தப்பட்டமையே திருச்சபையின் அங்கத்தவர் தொகை அதிகரிக்கக் காரணமாக இருந்தது.

பருத்தித்துறை கட்டைவேலிப் பகுதியில் 1817 ஆம் ஆண்டு அருட் திரு தோமஸ் ஸ்குவான்ஸ் முதன் முதலாக நற்செய்திப் பணிகளை ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆண்கள், பெண்களுக்கான இரு பாடசாலைகளும், தேவாலய அமைப்புப் பணிகளுடன் ஆரம்பிக்கப்பட்டதால், பாடசாலைகளின் மாணவர்களின் வரவு தொகையும் அதிகரித்தது.

அதே நேரம் 1837 ஆம் ஆண்டளவில் கொழும்புக்கு அடுத்ததாக ஐரோப்பிய மெதடிஸ்த மிஷனரிமாரின் முக்கிய பணித் தளமாக பருத்தித்துறை அமைந்திருந்தது. இதனால் மெதடிஸ்த திருச்சபை மதத்தை மட்டும் வளர்ப்பதோடு நின்று விடாது மக்கள் மத்தியில் கல்வி அறிவை மேம்படுத்தவும் தவறவில்லை.

பருத்தித்துறை மெதடிஸ்த சபை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதன் முதலாக பல தமிழர்கள் மெதடிஸ்த திருச் சபையில் இணைந்து நற்செய்திப் பணி ஊழியத்தை மேற்கொள்ள முன் வந்தார்கள். இதன் காரணமாக இலங்கையில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை மதிப்பிற்குரியதாகக் கருதப்பட்டது. இவ்வாறு திருச்சபையில் இணைந்தவர்களில் 1848 ஆம் ஆண்டு தொடக்கம் 1849 ஆண்டு வரையான காலப்பகுதியில் றிச்சேட் வொட்சனும், 1850 -1855 ஆம் ஆண்டு வரை டபிள்யூ ஆர் வைரமுத்துவும் போதகர்களாக நியமிக்கப்பட்டு பணி புரிந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து டானியல் தாமோதரமும் இணைந்து கொண்டார். அவரது சேவை மிகவும் பாராட்டத்தக்கதாக இருந்தது. அவர் ஒரு சிறந்த நற்செய்தி ஊழியராக இருந்தார் என்று கூறப்படுகின்றது. டேனியல் தாமோதரம் மூன்று தடவைகள் பருத்தித்துறைச் சபையில் திருப்பணியாளராகக் கடமையாற்றியவர்.

அவர் தனது காலத்தில் வெஸ்லியன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையை கிறிஸ்து நாதர் பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்தார். இதனால் பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயம் பருத்தித்துறை கிறிஸ்து தேவாலயம் என அழைக்கப்பட்டது. இதே கிறிஸ்து நாதர் பாடசாலை தான் இக் காலத்தில் ஹாட்லிக் கல்லூரியாக அழைக்கப்பட்டு வருகின்றது.

(வளரும்)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222

**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ரிசிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பேராசையும் பலிக்கடாக்களும்

முன்பெல்லாம் பல்கலைக்கழகத்துக்குச் செல்வது மாத்திரமே மாணவர்களின் இலக்காக இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. தரம் ஒன்றிலேயே மாணவர்களுக்கான இலக்கு நிர்ணயம் ஆரம்பித்துவிடுகிறது. புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய மாணவர்களை சித்தி பெறும் வகையில் தயார் செய்யக்கூடிய 'பிரபல' ஆரம்பப் பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு பெற்றோர் ஆலாய்ப் பறக்கின்றனர். அதற்கு எந்தளவு விலையையும் கொடுப்பதற்கு அவர்கள் தயார். ''என்ர பிள்ளை கம்பஸ்'' என்று கொலரை உயர்த்திக் காட்டிய நிலைமை மாறி, ''என்ர பிள்ளைக்கு 'இந்தப் பள்ளிக்கூடத்தில' அட்மிசன் கிடைச்சிருக்கு'' என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளும் நிறையப் பேரைத் தற்போது காணமுடிகிறது.

இந்தப் பெருமைக்காக பெற்றோர் படுகின்றபாடும், செய்கின்ற தகிடுதத்தங்களும் சொல்லி மாளாதவை. பெரும்பாலும் அதிகூடிய மாணவர்களைப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற வைக்கும் உற்பத்தி நிலையங்களாக வர்ணிக்கப்படும் பிரபல பாடசாலைகள், மாணவர்களை அனுமதிப்பதற்காக பெரிய தொகையை எதிர்பார்க்கின்றன.

மாணவர்களின் அனுமதிக்காக பாடசாலைகள் ஒரு சதத்தைக்கூட வாங்கக்கூடாது என்று கண்டிப்பான அறிவுறுத்தல் வந்தும்கூட, அதிலிருந்து தப்பிக்க இந்தப் பாடசாலைகள் தமது அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக அனுமதிக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கிக் கொண்டதாக கதைகள் உள்ளன. அண்மையில் இவ்வாறு 'பிரபலமான' ஆரம்பப்பாடசாலை ஒன்று விளையாட்டுப்போட்டிக்காக ஒவ்வொரு மாணவரிடமும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அறவிட்டிருக்கிறது. தமது பிள்ளைகள் பெரிய பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டும் என்பதற்காக பெற்றோரும் அழுதழுது இந்தத் தொகையைக் கட்ட வேண்டியிருந்தது. சாதாரணமாக ஒரு விளையாட்டுப் போட்டிக்கு மாணவரிடம் ஐம்பதோ, நூறோ வாங்கினால் கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சுளையாக 2 ஆயிரம் ரூபா அறவிட்டு விளையாட்டுப் போட்டியை நடத்த வேண்டும் என்று என்ன கட்டாயம்?


இதேபோன்று இன்னொரு பிரபல ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவி, அந்தப் பாடசாலையில் பணியாற்றும் 60 வயதான சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவரால் பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி குடாநாட்டு மக்களை உலுப்பி எடுத்துள்ளது. குறித்த கொடூரச் செயலைப் புரிந்தவர் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. [நான்கு வயது சிறுமியொருத்தியை வன்புணர்வு செய்த ஒருவருக்கு நேற்று இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது].

இந்தப் பாடசாலையில் 60 வயது முதியவரால் இம்சிக்கப்பட்ட மாணவி தனது பெற்றோரோடு தங்கியிருக்கவில்லை. அவரது பெற்றோர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஆனால் வடமராட்சிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு குறித்த பாடசாலையில் அனுமதி கிடைக்காது. எனவே அவர்கள் யாழ். நகருக்கு அண்மித்த பகுதியில் வசிக்கும் தமது உறவினரின் வீட்டு முகவரியைக் கொடுத்தே தமது பிள்ளையை அந்தப் பாடசாலையில் இணைத்துள்ளனர். தூர இடத்தில் இருந்து பிள்ளை வந்துபோக முடியாது என்பதால், பேர்த்தியார் வீட்டில் தங்கியிருந்தே அந்த மாணவி பாடசாலைக்கு சென்று வந்திருக்கிறாள். இவ்வளவுக்கும் பிரபல பாடசாலையில் தங்கள் பிள்ளை படிக்க வேண்டும் என்ற பெற்றோரின் அங்கலாய்ப்பே காரணம்.

பெற்றோரின் நேரடி கவனிப்பும், கரிசனையும் கிட்டாத பிள்ளைகளை அபாயம் எப்படி இலகுவாக நெருங்கிவிடும் என்பதற்கு அந்த மாணவி மீதான கொடூரம் ஒரு பாடமாக அமைந்து விட்டது. பேர் போன பாடசாலையில் தமது பிள்ளை படிக்க வேண்டும் என்ற பெற்றோரின் பேராசை ஒரு தளிரின் வாழ்வையல்லவா சிதைத்துவிட்டது? இனியாவது பெற்றோர் பிரபல பாடசாலைகள் என்ற மாயையிலிருந்து விடுபட்டு, தமது கண்ணின் மணி போன்ற குழந்தைகளை அருகில் இருந்தே கவனிக்க வசதியான உள்ளூர் பாடசாலைகளில் இணைக்க முன்வர வேண்டும். இனியாவது இது குறித்து சிந்திக்கக் கூடாதா?

# விலைவாசி உயர்வால் மக்கள் திண்டாட்டம் ஆட்சியாளர்களோ சுதந்திர கொண்டாட்டம்

■ என்.ஆர்.மகேந்திரன்



சாதாரண ஒரு மனிதன் இந்த நாட்டில் வாழ முடியாத விதத்தில் நாளுக்கு நாள் பொருள்களின் விலைகள் உயர்வடைந்து கொண்டு போகின்றன. ஆனால், ஆட்சி பீடத்தில் இருப்பவர்களோ நாட்டின் 65 ஆவது சுதந்திர தினத்தை பெரும் எடுப்பில் கொண்டாடுகின்றனர்.

அதுவும் மக்களின் கோடிக்கணக்கான வரிப்பணத்தைச் செலவழித்து சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்காக ஜனாதிபதியும், அமைச்சர்களும் வந்து போகும் வீதிகளை மட்டும் செப்பனிட்டுள்ளனர். அதேவேளை திருகோணமலை நகருக்குள் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளின் வீதிகள் குண்டும் குழியுமாகவும் வடிகால்கள் ஒழுங்காக அமைக்கப்படாமலும் இருக்கின்றன.

நகரில் கடற்கரையை அண்டிய ஒரு பகுதியில்தான் இந்த சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் எவ்வித பிரச்சினைகளுமில்லை, நாட்டு மக்கள் எல்லோரும் சமவுரிமைபெற்று வாழ்கின்றார்கள், முப்பது வருடங்களாக நாட்டில் நடைபெற்ற கொடிய பயங்கரவாதத்தை எமது படையினர் ஒழித்து மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்று படையினருக்கு ஓர் உசுப்பேத்தி விடும் ஒரு விழாவே திருகோணமலையில் நடந்த 65 ஆவது சுதந்திரதின விழா.

சர்வதேச மனித உரிமைகளை மீறி தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சுற்றி வளைப்புகளும், தேடுதல்களும் அடையாள, குடும்ப அட்டைகள் பரிசோதனைகளும், தெருவால் போவோர் வருவோரைப் பரிசோதித்தும் இப்படி ஒரு சுதந்திர தின விழாவைத் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் திருகோணமலை நகரில் தான் நடத்த வேண்டுமா என மக்கள் கேட்கின்றனர்.

இதெல்லாம் ஏன்? பௌத்த சிங்கள மக்களை ஏமாற்றவும், இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்குக் காட்டவுமே திருகோணமலை நகரில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. பயங்கரவாதத்தை 2009 ஆம் ஆண்டே அடியோடு ஒழித்து விட்டோம் என்று கூறும் மஹிந்த அரசு, பிறகேன் தமிழ் மக்களுக்கு மென்மேலும் தொல்லைகளைக் கொடுக்க வேண்டும் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

65 வருடகால இனப்பிரச்சினையைத் தீர்க்க வக்கில்லாது மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள், தமிழ் பேசும் மக்களைப் பல வகையிலும் பிரித்து அடக்கி ஆண்டு கொண்டு தமிழ்ப் பாடசாலைப் பிள்ளைகளும் விழாவில் பங்கு கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியதுடன், வாகனச் சாரதிகள் உட்பட, தமிழ் மக்களின் வீடுகளிலும், சிங்கக்கொடி பறக்க வேண்டும் என்றும் அரச படைகளை வைத்து வற்புறுத்தியமை சர்வதேச மனித உரிமைகளை மீறும் செயலல்லவா?

தமிழ் மக்களை அடிமைகளாக வைத்துக் கொண்டு, சிங்கள மக்கள் மத்தியில் இன, மத, மொழி பிரதேச வாதம் பேசிக் கவர்ந்து ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருப்பதே சிங்கள ஆளும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ சிந்தை கொண்டவர்களின் உள்நோக்கம்.

இலங்கையில் சுதந்திரதினக் கொண்டாட்டங்களைச் சிறப்பாக நடத்துவதற்கு தமிழ் மக்கள் எதிரானவர்கள் அல்லர். ஆனால் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்காத வரையில் இத்தகைய கொண்டாட்டங்களில் தமிழ் மக்கள் கலந்து கொள்வது பொருத்தமானதல்ல.

அரசும் அதன் தலைவர்களும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை என்றுமே வித்தியாசமான கண்ணோட்டத்தில்தான் பார்க்கின்றார்களே தவிர, அதன் உண்மைத்தன்மைகளை உணர்வதாக இல்லை. தமிழ் மக்கள் பிரிவினை கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் அதிகாரமுள்ள சபையைத்தான் கேட்கின்றார்கள். அங்கே மூவின மக்களும் சகல சமயத்தவர்களும் சிறுபான்மை இனத்தவர்களின் தனித்துவத்தை இல்லாமல் செய்யக்கூடாது என்பதே தலைவர் இரா. சம்பந்தன் அவர்களின் வேண்டுகோள்.

முதலில் தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினையில் அரச படைகள் தலையிடக்கூடாது. ஏனென்னில் இது ஒரு அரசியல் பிரச்சினை. ஆனால் ஆளும் ஏகாதிபத்திய சிந்தையுள்ள சிங்கள தலைமைகள் தமிழ்- சிங்கள உழைக்கும் மக்கள் மத்தியில் குரோதங்களை வளர்த்து அவர்களை மோதவிட்டு அதன் மூலம் தொடர்ந்து ஆட்சியில் நீடித்து இருக்கவே என்றும் விரும்புகின்றன. அதே வேளை சிங்கள- தமிழ் முற்போக்கு சக்திகள் ஒன்றுபட்டு போராடுவதன் மூலமே நாட்டின் சகல பிரஜைகளும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியும்.

சிங்கள உழைக்கும் வர்க்கத்தை சரியான முறையில் சிந்திக்க வைக்க ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆளும் சிங்கள தலைவர்கள் அனுமதிப்பதில்லை. அதற்காக தமிழ் மக்களின் உரிமைகளை வைத்தும், ஏழைச் சிங்கள மக்களின் பிள்ளைகளான அரச ஆயுதப்படையினர் மத்தியில் இன, மத ரீதியில் பேதங்களை வளர்த்தும், தொடர்ந்து பிரச்சினைகளை வைத்திருக்கவே விரும்புகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது பொதுவாக சாதாரண உழைக்கும் மக்களே.

தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கோ பௌத்த சமயத்திற்கோ என்றுமே எதிரானவர்களல்ல.

ஆனால் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தரப்புகளது கோரிக்கை.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 65 வருடங்கள் கடந்த போதிலும் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியை இந்நாடு கண்டுள்ளதா? இன்றும் மக்கள் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில்தான் உள்ளார்கள்.

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு என்று அரசியல் யாப்பில் பொறிக்கப்பட்டுள்ளதே தவிர இங்கு ஜனநாயகமும் இல்லை சோஷலிஸமும் இல்லை.

சுதந்திரம் என்றால் என்ன? இந்நாட்டுப் பிரஜைகள் அத்தனை பேர்களுக்கும் குறைந்தது அடிப்படை உரிமைகளான பேச்சு, எழுத்துச் சுதந்திரம், உணவு, உடை, இருப்பிடம், பாதுகாப்பு, கல்வி ஆகியவை இருக்க வேண்டும் இவை மக்களுக்குத் தடையின்றிக் கிட்டுகின்றனவா? என்பது இலங்கையைப் பொறுத்த மட்டில் கேள்விக் குறியே.

அகிம்சையை உலகிற்குப் போதித்த அண்ணல் மகாத்மா காந்தி பிறந்த மண்ணில் கூட இன்று அஹிம்சை தோற்றுப் போய் விட்டது. இல்லையேல் இந்திய மத்திய அரசு ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையில் தலையிட்டு சரியான ஒரு தீர்வைப் பெற்றுத்தர அக்கறை காட்டாதிருப்பதேன்?

பலஸ்தீன மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதாகப் பெரிதாகக் காட்டும் மடிக்கும் ஜனாதிபதி தன் நாட்டில் ஒரு சிறுபான்மை இனத்தவர்களின் தாயகமான வடக்கு- கிழக்கு மாகாணங்களால் பெரும்பான்மை இனத்தவர்களை குடியேற்றுவதன் மூலம் தமிழர் நிலங்களைக் கபளீகரம் செய்ய முயல்வது நியாயமா?

ஆதலால் வீணாக சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக கோடிக் கணக்கான பணத்தைச் செலவிடுவதிலும் பார்க்க நாட்டு மக்களின் அன்றாட வாழ்வியல் தேவையான உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வைக் குறைத்தாலே அதனால் நாட்டின் பொதுமக்கள் தமது வாழ்வியலைச் சிரமமின்றி முன்னெடுக்க வாய்ப்புக் கிட்டும். ★

## நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

# ஆண்களே...!



இன்றைய விஞ்ஞான உலகில் நாகரிகம் வளர்ந்து செல்வது மறுக்க முடியாததொன்று. எனினும் அந்த நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்கள் தான். எங்கே எப்போது புதிய ஆடைகள் விற்பனை செய்யப்படுகிறன என்று அறிந்து அங்கே பெண்கள் அணியும் ரீசேட் வகைகளைத் தாமும் அழகாக இருக்கிறது என்று எண்ணி வாங்கி வெளியே பயணிக்கும்போது அணிவார்கள். புதிய புதிய படங்களைப் பார்த்து நடிகர்களை போல் அர்த்தம் தெரியாதவர்களாய் ரயரிலே வெட்டிய சிறிய காப்பை கையிலும் பெண்கள் அணியும் தோடுகள், மெட்டிகள் என்பவற்றை காதிலும் அணிவார்கள். ஏன் பல ஆண்கள் நாகரிகம் எனும் பெயரில் பெண்கள் காலணிகளையே தமது காலணிகளாக அணிகின்றனர். நினைக்கும் போதே அருவருப்பாக உள்ளது. ஏழைக் குடும்பத்தில் பிறந்த பையன் பணக்காரப் பெண்ணைக் காதலிப்பது போல் நடிப்பதற்கு இந்த நாகரிகத்தைத் தனது குடும்ப நிலைமை மறந்து பயன்படுத்திக் கொள்கிறான். நாகரிகம் செந்தாமரை போன்றது தான். ஆனால் ஆண்கள் அதனைச் சேறாக்குகின்றனர். இவ்வாறு நாகரிகம் எனும் பெயரில் ஆண்கள் என்பதையே தம்மை மறந்து விடுகிறார்கள். ஆண்களுடைய நாகரிகத்துக்குள்ளே பொய்யான நடத்தைகள் பல மறைந்து கிடக்கின்றன. ஆனால் பெண்களினுடைய நாகரிகத்தினுள் பொய்யான கபடச் செயல்கள் இருப்பதில்லை. காரணம் பெண் அடக்கமுடையவள். சூதுவாது அறியாதவள். சூதுவாது அறியாதவள் ஆண்களுக்கு நாகரிகப் போர்வையைப் போர்த்துக் கொண்டு ஆண்கள் இலகுவில் பெண்களை ஏமாற்றி விடுபவர்கள். ஆதலாய் தமக்கு சாதகமாக நாகரீகச் சாயம் பூசித்திரிபவர்கள் அதிகமாக ஆண்களே தான்.

திருநாவுக்கரசு சுதர்சினி,
வேலணை.



## சீதனம்

இதுவென்ன ஆண் வர்க்கத்தின் கோலமை?
இங்கு நிகழ்வது தான் என்ன?
மனித நேயத்தை பாராது-மணவாளர்கள்
பணத்துக்காய் அலைவது நிலைக்குமா?
அல்லது நியாயம் தான் ஆகுமா?
பாரதி கண்ட புதுமைப் பெண்ணே -உன்
கவலையில் நின்று விலகிவிடு
பெண்ணினத்தின் அன்புச் சொத்துக்கு முன்
ஆடவர்களின் பணச் சமுதாயம்-என்ற
மாயப் போர்வை படிதாண்டிச் சென்றுவிடும்.

க.கலையரசி
துணவி, வட்டுக்கோட்டை.

## பொறிக்க மறந்த இரத்த சரித்திரம்



பொறிக்க மறந்த இரத்த சரித்திரம்...!
எத்தனை எத்தனை பாடுகள் பட்டோம்
அத்தனை பாடுகளும்-எம்
கல்லறைக் காடுகளாகவே...!!
மண்ணை இழந்தோம்-மனித
மாண்பினையும் இழந்தோம்
இன்னும் எத்தனை எத்தனையோ இழந்தோம்-ஆனால்
பண்டைத் தமிழனின் ஏட்டுக் கல்வியை
தொடவே மறப்போம் என எண்ணவில்லை
அன்னையே....!!
நீ பெற்ற பிள்ளைகள் எங்கே...???
ஒன்று இதயத்து கிழியலுள்ளும்!
மற்றையது மரண வாசலினுள்ளேயுமே!!!
தமிழ்த் தாயே...!
இனியும் ஈன்றிடாதே உன் மகவை
பாதுகாத்து பலியான எம் தந்தையர்கள்!
பறிகொடுத்து பலியாய்ப்போன எம்
அன்னையர்கள்!! பட்சியாய் பலியான சிசுக்கள்!
இத்தனை பார்த்தும்...!!!
"பார் பார்வையைத் திருப்பியது ஏன்...???
நாம் வாழ்ந்த தீக்குச்சி வீடுகள்
குண்டு மழையில் நனைந்த போதும்
நாம் தூங்கித் துயில் எழுந்த-எம்
அன்னையர்களின் மடிகள் கிழிக்கப்பட்ட போதும்
எழுதும் எழுது கோல்களும்
பதியும் வெள்ளைக் காகிதங்களும்
படுத்துறங்கியது ஏன்..?
ஓ... ஓ நாங்கள் எல்லாரும்
பாமரச் சாதிகள் தான் அது தானே!!....!

ம.பி.ஜதீஸ்குமார்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.



## காத்திருந்தேன்...

இமைகள் என்
கண்களை
மூட
காத்திருந்தேன்
கனவுகளின்
வரவுக்காய்

ஜீ.கீர்த்தனா, கந்தர்மடம்

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................................

முகவரி :- ....................................................

.....................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அம்மா...



அம்மா என்ற
வார்த்தைக்கு
அர்த்தம் தேடி
அகராதி
புரட்டினேன்
அகப்படவில்லை
அம்மா-உன்
அன்புக்கு நிகரான
வார்த்தைகள்
எதுவும்!!
ஆயிரம்
சொந்தங்கள்
அவனியில்
இருப்பினும்
அம்மா உன்
அன்பிற்கு
ஈடேதுமுண்டோ!!!
தாயின் மடி தானது
சொர்க்கம்
தலைசாய்த்து
உறங்கு-உண்மைதனை
உணர்ந்திடும்
உனதுள்ளம்.

ஆன் அன்ரனி
கணேஸ்.

## என்ன விலை... ?



அன்பு என்ன விலை...?
என்று கேட்கிறேன்
என்னிடம் அன்பில்லை
என்று அல்ல
என்னவனிடம் அன்பு இல்லையாம்
அதற்காகவே...!

## தலைமைத்துவ பயிற்சியின் 3 ஆம் கட்டம் 12 இல் ஆரம்பம்

**உயர் கல்வி அமைச்சு தகவல்**

கொழும்பு,பெப்.7

பல்கலைக்கழக மாணவர்களுக் கான தலைமைத்துவப் பயிற்சியின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை உயர்கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள மூன்றாம் கட்ட தலைமைத்துவ பயிற்சியில் பங்கேற்க 7038 மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். அவர்களுக்கு பயிற்சி அளிக்க நாடு முழுவதும் 28 முகாம் கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை தலைமைத்துவ பயிற்சி யில் பங்கேற்காத மாணவர்களுக்கு நான்காம் கட்டப் பயிற்சி ஆரம் பிக்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)



சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் மாத்தறை மாவட்டத்தில் சுயதொழில் புரியும் குடும்பங்களுக்கு பாதணிகளைச் செய்வதற்கான உபகர ணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண கலந்துகொண்டு பயனாளி ஒருவருக்கு உபகரணத்தைக் கையளித்தபோது....

## மாதம்பையில் வெடித்தது குண்டா?

**பொலிஸார் விசாரணை**

கொழும்பு,பெப்.7

கொழும்பு,மாதம்பை - சுதுவெல்ல பகுதியில் உள்ள பழைய இரும்புகளை உருக்கி புதிய இரும்பு தயாரிக்கும் இந்திய நிறுவனத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இவ்வாறு வெடித்தது குண்டு தானா என மாதம்பே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

இந்த வெடிப்புச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.15 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தால் எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரும்பு தயாரிக்கும் நிறுவனத்தின் கழிவுகள் அருகில் கொட்டப்படுகின்றன.

இனந்தெரியாத நபர் ஒருவர் அந்த இடத்துக்கு நேற்றுமுன்தினம் தீ வைத்ததை அடுத்தே அங்கு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது என்று மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## துமிந்த சில்வா விடுவிக்கப்படுவார்

**சாட்சியம் மாறுபட்டதிலிருந்து புரிகிறது என்கிறார் ஹிருனிக்கா**

இலங்கையில் பணத்தால் எதனையும் சாதிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.



கொழும்பு,பெப்.7

நடைமுறைகளை வைத் துப் பார்க்கும்போது நாடா ளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா விடுவிக்கப்படுவார் என்று தெரிகிறது என கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லஷ்மன் பிரேமசந்திர வின் மகள் ஹிருனிக்கா தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது தந்தையை கொலை செய்ததாக துமிந்த சில்வா மீது குற்றம் சுமத்தப்பட்டுள் ளது. அது தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் பாரத லஷ்மனின் வாகன சாரதி ஏன் தான் முன்னர் வழங்கிய சாட்சியத்தை மீளப்பெற்றார் என்பது எமக்குப் புரிய வில்லை.

ஒரு வருடத்துக்குள் எவ் வாறு அவரின் சாட்சியம் மாறுபட்டது என்று தெரிய வில்லை.

இந்த விடயத்தில் அரசி யல் பின்னணிகள் காரண மாக அமைந்திருக்கலாம்.

இலங்கையில் பணத் தால் எதனையும் சாதிக்கமுடி யும் என்ற நிலை ஏற்பட்டுள் ளது -என்றார். (ச)

**பரீட்சயமான மொழியில்**

# தேசிய கீதம் பாடினால் தேசப்பற்று அதிகரிக்கும்

**ஜெஹான் பெரேரா ஆலோசனை**



கொழும்பு,பெப்.7

தேசிய கீதத்தைத் தெரி யாத மொழியில் பாடாமல் பரீட்சயமான மொழியில் பாடினால் தேசப்பற்று அதி கரிக்கும் என்று தேசிய சமா தான பேரவையின் நிறைவேற் றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா ஆலோசனை தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் பாடப்படு வது சாதகமான நிலைமையை ஏற்படுத்தும்.

தமிழ்,சிங்களம் ஆகிய மொழிகள் நாட்டின் தேசிய மொழிகளாகும். எனவே தேசிய கீதத்தில் தமிழ் வரி கள் இணைக்கப்படுவதில் தவறில்லை.

தேசிய கீதத்தில் தமிழ் வரிகளை இணைப்பதனால் கீதம் நீளுதல், சிங்கள மக் களுக்கு வரிகள் புரியாமை போன்ற சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

எனினும், இரண்டு தேசிய மொழிகள் காணப்படும் நாட்டில் ஒரு மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைப் பது நியாயமற்றது.

பிரதேசத்தின் சனத் தொகைப் பரம்பலுக்கு ஏற்ற வகையில் தமிழ் மொழி யிலோ அல்லது சிங்கள மொழியிலோ தேசிய கீதத் தைப் பாடமுடியும்.

மேலும், சில நாடுகளைப் போன்று இரண்டு மொழி களையும் கலந்து தேசிய கீதத்தை இசைக்க முடியும்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதைச் சிலர் விரும்பவில்லை. எனினும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை யில் பெரும்பான்மை சிங்கள மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிடவில்லை.

அரசியல்வாதிகளே கடும் இனவாதத்தையே போதிக் கின்றனர் -என்றார். (ச)

## ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் குறித்து விசாரணை

கொழும்பு,பெப்.7

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தொடர்பில் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

செல்வந்த வர்த்தகர்களிடம் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் பணம் பெற்றுக் கொண்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட் டுள்ளது, புலனாய்வுப் பிரிவு அதிகாரி களுக்கு எதிராக பொலிஸ் தலைமையகம் முறைப்பாடு செய்துள்ளது.

புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய மற்றும் கடமையாற்றிவரும் ஊழல் பேர் வழிகள் குறித்த தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குற்றச் செயல்கள் தொடர்பிலான விசார ணைகளைத் திசை திருப்புவதற்காக சிலரிட மிருந்து புலனாய்வுப் பிரிவு உத்தியோகத் தர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

450 மில்லியன் ரூபா ஊழல் மோசடி செய்த நபர் ஒருவருக்குப் புலனாய்வுப் பிரிவின் சில அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

**மாணவிக்குக் கை பறிபோனமை குறித்து**

## விசாரணைகள் முடிந்ததும் குற்றவாளிகளுக்கு தண்டனை

கொழும்பு,பெப்.7

கொழும்பு சட்டபீட மாணவி கையினை இழந்த சம்பவம் குறித்த விசாரணை முடிந்ததும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும். இவ்வாறு சுகாதார அமைச்சின் செயலர் நிஹால் ஜயத்திலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீட்டில் இடம்பெற்ற சிறு விபத்தால் தனது கையை இழந்த மாணவிக்குப் பொருத்தமான கை தேடப்படுகிறது. இந்த நடவடிக்கை தனியார் துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெலிக்கடை சிறைக் கைதிகள் கூட தங்கள் பணத்தை மாணவிக்கு வழங்கியுள்ளனர்.

மாணவி பாதிக்கப்பட்டதை அடுத்து சுகா தார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, வெளி விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் மாணவியை வைத்தியசாலைக்குச் சென்று



பார்வையிட்டு நலம் விசாரித்துள்ளனர்.

மாணவி கையை இழந்த சம்பவம் குறித்து விசேட குழு விசாரணை நடத்தி வருகிறது.

விசாரணையில் யாராவது குற்றம் செய் துள்ளார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் சட்டத் துக்கு உட்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவர்.

மாணவியின் சம்பவத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு சுகாதார அமைச்சு மீது குற்றம் சுமத்த வேண்டாம். எனவே குற்றம் செய்தவர்களுக்கு சட்டத் தின் படி தண்டனை வழங்கப்படும்.-என்றார். (ச)

## சுற்றறிக்கைகளை மாற்ற நடவடிக்கை

**கல்வி அமைச்சு தீர்மானம்**

கொழும்பு,பெப்.7

தற்போது வெளியிடப்படும் அனைத்து சுற்றறிக்கைகளையும் காலத்துக்கு ஏற்ற வகையில் மாற் றியமைக்க கல்வி அமைச்சு தீர்மானித் துள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் அனைத்து மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு மாக விநியோகிக்கப்பட்டுள்ள சுற் றறிக்கைகளே இவ்வாறு திருத்திய மைக்கப்படவுள்ளன.

இந்த சுற்றறிக்கைகளில் பலவும் 20 வருடங்கள் பழமை வாய்ந்தவையாகும். அதனால் கல்வி அமைச்சின் நடவ டிக்கைகளை முன்னெடுக்கும் சந்தர்ப் பத்தில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க நேரிடுகிறது என்று அமைச் சின் செயலர் கோத்தபாய ஜயரத்ன குறிப்பிட்டார்.

சுற்றறிக்கை தொடர்பான பிரச்சினைகள் குறித்து எந்த நபரும் கல்வி அமைச்சுக்கு அறிவிக்க முடி யும் என்று அவர் கூறினார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. புதியவர்கள் நண்பர்களாவார்கள். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**இடபம்:** செலவுகள் அதிகமாகும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனதை வாட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவார்கள். உத்தியோகத்தில் சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பெண்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய மிகுதிகள் வசூலாகும்.

**நாளை**

தை -26 வெள்ளிக்கிழமை 08.02.2013
திதி: திரயோதசி பி.ப. 05.13 வரை
நட்சத்திரம்: பூராடம் கா.08.27 வரை
சுபநேரம்: 06.35- 08.05 வரை
ராகுகாலம்: 11.05- 12.35 வரை

**துலாம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப் புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**விருச்சிகம்:** வீண் குழப்பங்கள் வந்து செல்லும். சோர்வு நீங்கி சுறுசுறுப்படைவீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். பிற்போட்ட விடயங்கள் உடனே முடிவடையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். உத்தியோகத்தில் விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம்.

**தனுசு:** நுழைவதால் எதிர்பார்த்த காரியங்கள் தாமதமாக முடியும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** வீண் சந்தேகமும், எதிர்காலம் பற்றிய பயமும் வந்து போகும். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திடாதீர்கள்.

**கும்பம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**மீனம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 2 | 7 | 8 | | 6 |
| | 5 | | | | 4 | | | 3 |
| | | 6 | 3 | 1 | | | 5 | 4 |
| | | 1 | 4 | 3 | 6 | | | |
| | | | 9 | | 5 | | | |
| | | | 2 | 8 | 1 | 6 | | |
| 2 | 4 | | | 5 | 3 | 1 | | |
| 1 | | | 8 | | | | 3 | |
| 9 | | 5 | 1 | 6 | | | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 5 | 3 | 9 | 4 | 2 | 6 | 8 |
| 2 | 3 | 8 | 5 | 1 | 6 | 7 | 9 | 4 |
| 4 | 6 | 9 | 8 | 7 | 2 | 1 | 5 | 3 |
| 9 | 4 | 6 | 1 | 5 | 8 | 3 | 2 | 7 |
| 3 | 2 | 7 | 4 | 6 | 9 | 5 | 8 | 1 |
| 5 | 8 | 1 | 7 | 2 | 3 | 6 | 4 | 9 |
| 8 | 5 | 4 | 6 | 3 | 7 | 9 | 1 | 2 |
| 6 | 7 | 2 | 9 | 8 | 1 | 4 | 3 | 5 |
| 1 | 9 | 3 | 2 | 4 | 5 | 8 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை.. 1 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)



திதி:- அபரபக்க துவாதசி (07.02.2013)

அன்பின் வடிவமாய் அமைதியின் சொரூபமாய்
ஆலமரமாய் நிழல் தந்து
இல்லத்தின் குலவிளக்காய் நல்லொளி வீசி
ஈடில்லாப் பாசத்துடன் எமை ஆளாக்கி வைத்த தாயே!
உள்ளத்தில் கருணை கொண்ட உன் பிரிவால்
ஊரெல்லாம் கதறியதே!
எமையெல்லாம் தவிக்கவிட்டு
ஏழுலகம் தாண்டிச் சென்றாயே! - எம்
ஐம்புலனும் தவிக்கின்றனவே
ஒன்றல்ல இரண்டல்ல
ஓராயிரம் ஆண்டுகளானாலும் ஆறாது எம் துயரம்
உங்கள் அன்பு முகத்தை நெஞ்சில் சுமந்தபடி
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

தோற்றம்
15.03.1936

மறைவு
20.01.2012

72/27, பனிக்கர் லேன்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

"சிவகிரி"
மீசாலை வடக்கு, மீசாலை.

## ஹற்றனில் பூச்சி கொல்லி தயாரிப்பு நிலையம் சிக்கியது

ஹற்றன்,பெப்.7

போலி பூச்சிக்கொல்லி உற்பத்தி நிலையம் ஒன்று ஹற்றன், கொட்டகலை, ரொசிட்டா பகுதி வீடொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டை நுவரெலியா நுகர்வோர் சேவை மத்திய நிலைய அதிகாரிகள் சுற்றிவளைத்தனர்.

தேயிலை மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கு தெளிக்கவென அதிகூடிய விலையில் இந்தப் பூச்சிக்கொல்லி உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பூச்சிக்கொல்லி உற்பத்தி நிலையத்தை இயக்கிவந்த நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று நுவரெலிய நுகர்வோர் சேவை மத்தியநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)



அம்பாறை, அன்னமலை கிராம சேவகர் பிரிவில் உள்ள விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வேப்பையடியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் நெல் அறுவடை செய்கின்றனர்.

## வர்த்தக நிலையங்களில் சோதனை: பாவனைக்கு உதவாத பழங்கள் மீட்பு

### நுகர்வோர் அதிகார சபை அதிரடி

கண்டி,பெப்.7

கண்டி நகர வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் அதிகார சபை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத பழ வகைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சோதனை நடவடிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மேற்கொள்ளப்பட்டது.

நடைபாதைக் கடைகளில் காணப்பட்ட பாவனைக்கு உதவாத பழவகைகளே மீட்கப்பட்டன என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச)

**நடைபாதை கடைகளில் காணப்பட்ட பாவனைக்கு உதவாத பழவகைகளே மீட்கப்பட்டன.**

## கால் தடுக்கி விழுந்த மாணவன் சாவு

கல்முனை,பெப்.7

கால் தடுக்கி விழுந்து மூன்று நாள்களாக சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

கல்முனைக்குடி, ஸாஹிபு வீதியைச் சேர்ந்த ஏ.எஸ். ஸஹ்ரான் அஹமட் (வயது 11) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் கல்முனை அல் அஷ்ஹர் வித்தியாலயத்தில் 6ஆம் தரத்தில் கல்வி கற்று வருபவர் என்று உறவினர்கள் கூறினர்.

கடந்த முதலாம் திகதி அவர் பாடசாலையில் கால் தடுக்கி விழுந்துள்ளார்.

அந்தநிலையில் அவர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (ச)

# கிழக்கு மாகாண மாணவரின் கல்வி நிலை உயர்த்தப்படும்

### சர்வதேச தரத்துக்கு அது முன்னேற வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

அம்பாறை,பெப்.7

கிழக்கு மாணவர்களின் கல்வியை வளர்ப்பதே அரசின் நோக்கம். குறுகிய மனப்பான்மைகளைப் புறந்தள்ளி சர்வதேச தரத்துக்கு அவர்கள் தம்மை முன்னேற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவிலிலுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



பல்கலைக்கழகக் கல்வி தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல சர்வதேச மட்டத்திலும் தொழில் வாய்ப்புக்களைப் பெறும் வகையில் முன்னேற்றமடைய வேண்டும். அதற்காக பீடாதிபதிகள், துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். கல்வியே சிறந்த செல்வம். அறிவுதான் மிகச் சிறந்த ஆயுதமாகும்.

கிழக்கு மாணவர்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அரசியல்வாதிகள் கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு வரமுடியாத வெறுப்பான காலகட்டம் ஒன்றிருந்தது. அந்தநிலை இன்று மாறியுள்ளது.

எதிர்கால புத்திஜீவிகளாக கிழக்கு மாணவர்கள் உருவாக வேண்டும். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பல பிரிவுகள் கல்லடி, செங்கலடி போன்ற இடங்களில் இயங்குகின்றன.

இந்தப் பல்கலைக்கழகத்தில் மூவின மாணவர்களும் கற்பது பெருமை தருகிறது.

நாம் ஒரு தாயின் மக்களே. எம்மில் பேதங்கள் இருக்க முடியாது. இந்த நாட்டில் இனவாதம், மதபேதங்களுக்கு இடமில்லை. பெற்றோருக்கு கீழ்ப் படிந்து அவர்களின் ஆசியைப் பெற்று மாணவர்கள் முன்னேற வேண்டும்.

உலக பல்கலைக்கழகங்களின் வரிசையில் 12,300 ஆவது இடத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் உள்ளது. அது திருப்தி தருவதாக இல்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 7000 ஆவது இடத்தில் உள்ளது. எனவே கிழக்குப் பல்கலைக்கழகம் முதல் 100 பல்கலைக்கழகங்களுக்குள் வரும் வகையில் முன்னேற வேண்டும். அந்த சவாலை வெற்றி கொள்ள அர்ப்பணிப்புடன் கற்று முன்னேற வேண்டும் -என்றார். (ச)

## திருகோணமலைக்கு பிரதி அமைச்சர் பதவியை பெற்றுத்தர முயற்சிப்பேன்

### ஹக்கீம் சொல்கிறார்

திருகோணமலை,பெப்.7

திருகோணமலை மாவட்டத்துக்குப் பிரதி அமைச்சர் பதவி ஒன்றைப் பெற்றுத் தருவதற்கு ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவுள்ளேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகால உறப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை மாவட்டத்துக்குப் பிரதி அமைச்சர் பதவி ஒன்று பெற்றுத்தரப்படும் என்ற எதிர்பார்பில் உள்ள கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின்போது பதவி கிடைக்காமையை யிட்டு கட்சியுடன் அதிருப்தி அடைந்த நிலையில் உள்ளனர்.

இந்த விடயம் குறித்து கட்சி தலைமைப்பீடத்துக்கு அவசர கடிதங்களை அனுப்பி வைத்திருந்தது. கட்சித் தலைமை எம்முடன் சந்திப்பு ஒன்றினை மேற்கொளள வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

எமது கட்சியுடன் எவ்வித கலந்தாலோசனைகளும் இன்றியே அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இந்த மாற்றம் தொடர்பில் எனக்குத் தெரியாது. இந்த விடயம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவுள்ளேன்.

திருகோணமலைக்கு பிரதி அமைச்சர் பதவி ஒன்றைப் பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பேன் .-என்றார்.(ச)

## தொடரும் குளவித் தாக்குதலால் மாணவர்கள் வைத்தியசாலையில்

நுவரெலியா,பெப்.7

மெதகம அல் இஷார் வித்தியாலயத்துக்கு அருகில் கூடு கட்டியிருந்த குளவிகள் தாக்கியதில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

குளவி தாக்குதலுக்கு உள்ளான அல் இஷார் வித்தியாலய உப அதிபரும், 14 மாணவர்களும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, புசல்லாவையில் குளவி கொட்டியதில் 23 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் கவலைக்கிடமான ஐந்து பேர் புசல்லாவ மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் புசல்லாவ , நோனாதோட்டம், மூன்றாம் இலக்க தேயிலை மலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.



மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்களே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார்கள்.

இந்தப் பிரதேசத்தில் குளவிகளின் தாக்கம் அதிகமாக இருப்பதால் தொழில் செய்ய சிரமமாக உள்ளது என்று தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ச)

## நுவரெலியாவில் பெண்ணின் சடலம் மீட்பு

நுவரெலியா,பெப்.7

நுவரெலியாவில் பெண்ணின் சடலத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர்.

65 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, சமரகிரி பகுதியிலுள்ள தேயிலைச் செடி பற்றைக்குள்ளிருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் நுவரெலியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மின்னல் தாக்கி கடை எரிந்தது

மின்னல் தாக்கி வர்த்தக நிலையம் எரிந்து நாசமாகியது. கடையின் குளிரூட்டி உட்பட 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் மின் இணைப்புகளும் முழுமையாக எரிந்து சேதமடைந்தன. கடந்த திங்கட்கிழமை இரவு பெய்த கடும் மழையின் போது ஏற்பட்ட மின்னலின் தாக்கத்தால் மின் இணைப்பு உட்பட கடையினுள் இருந்த அனைத்துப் பொருள்களும் எரிந்து சேதமடைந்தன. இரவு முழுவதும் மழை பெய்ததால் எவரும் வெளியில் நடமாட்டம் இல்லாத வேளையில் வர்த்தக நிலையம் எரிந்ததாகவும் மறுநாள் காலையில் வர்த்தக நிலையத்தைத் திறந்த போதே கடை எரிந்ததைக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி நகர்ப் பகுதி ரயில் நிலைய வீதியில் உள்ள புதிய கடைத் தொகுதியில் உள்ள ஒரு கடையே மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது என்று கூறப்பட்டது. (ம-9)


## மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா 17.02.2013

08.02.2013 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகித் தினமும் மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையும் நவநாள் வழிபாடும் நடைபெறும்.
16.02.2013 ஆம் திகதி சனி மாலை 06 மணிக்கு அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனியும், நற்கருணை வழி பாடும் நடைபெறும்.
17.02.2013 ஆம் திகதி ஞாயிறு காலை 07 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்னையின் வழியாக
ஆண்டவன் அருளைப்
பெற்று இறையுறவில்
வளமுடன் வாழ அன்புடன்
அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையும், பங்கு மக்களும்
மாதகல். (29191)(6.7.11)







## கடைகளுக்கான இடங்கள் வழங்கல்

17.02.2013 ஆம் திகதி மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல திருவிழாவின்போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் கீழ்வரும் கடைகளுக்கான இடங்கள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கடைகளுக்கான இடங்கள் தேவைப்படும் வியாபாரிகள் 10.02.2013 ஆம் திகதி ஞாயிறு மு.ப 10.00 மணிக்கு தூய லூர்து அன்னை திருத்தலத்திற்கு சமுகம் தந்து கடைகளுக்கான இடத்தினை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1) குளிர்பானக் கடைகள்
2) உணவகங்கள்
3) அழகுசாதனக் கடைகள்
4) ஏனைய பெரும் கடைகள்

பங்குத்தந்தை,
மாதகல். (29189)(6.7.11)

## மரண அறிவித்தல்

### வைரவன் ஐயம்பிள்ளை



கராச்சடி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் மடத்தடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் ஐயம்பிள்ளை 03.02.2013ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2013) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மடத்தடி,
சண்டிலிப்பாய். (29188)(5.6.7)


## கடை வாடகைக்கு

A9 வீதியில் யாழ் கச்சேரிக்கு அண்மையில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 627 2190 (29186)(5-6-7)

## ஜனா கொம்பியூட்டேர்ஸ்

"கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு"
கொம்பியூட்டர் - 10,000/= தொடக்கம்
C.R.T. மொனிற்றர் - 1500/=, L.C.D மொனிற்றர் - 4000/=
T.V. - 6000/= மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கணினி திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777508908.
உதயநகர், கிளிநொச்சி. (26317) (6.7.2))





அமரர்
ஐயம்பிள்ளை செல்லக்கிளி

திருமதி
செல்லக்கிளி கமலாம்பிகை

13.07.1936 - மலர்வு - 01.08.1941
14.03.2007 - உதிர்வு - 08.01.2013

கருவிலே எமைத் தாங்கி
கண்மணியாய் எமைக்காத்து
காலமெல்லாம் சிறக்க வைத்து -எமை
கதறவிட்டு சென்றதேனோ

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரர்கள்.

முதலிகோயிலடி,
கோக்குவில் மேற்கு, கோக்குவில்.

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு சண்முகராசா



வேலணை, அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கணேசபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சண்முகராசா 02.02.2013 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும், பேரானந்தம்(சந்திரன்-பிரான்ஸ்), விநாயகமூர்த்தி (மூர்த்தி- இந்தியா), ரவிச்சந்திரன் (ரவி- இந்தியா), உமாதேவி (வவுனியா), சுசீலாதேவி(இந்தியா), கோணேஸ்வரன் (கோணேஸ்-மீசாலை), தாரணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.02.2013 புதன்கிழமை அன்னாரின் கணேசபுரம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிளிநொச்சி இந்து பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(26334)(5-6-7)


## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றினூடாக மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.

உற்பத்தி திருத்தி மீள்சுழற்சி

Tel: 021 222 8680, 0775925088, 0750407430





எங்கள் அன்பின் சந்துக்குட்டியே!
நீ பிறந்து மகிழ வைத்தாய்
நீ சிரித்து எமை குதூகலிக்க வைத்தாய்
நீ வளர்ந்து உதவியாய் இருந்தாய்
நீ மறைந்து எங்களை கலங்க வைத்தாய்
உன் பூ வதனம் எங்கள் மனக்கண் நிற்குதையா
உம்மால் எம் குலம் குடும்பம் எல்லாம் விளங்கும்
என நினைத்தோம் ஆனால் எமைக் கலங்க வைத்துச் சென்றாய்
உன் பிரிவை நினைத்து தினம் அழுத வண்ணம் வாழ்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை மறவாத
மாமா, அத்தை, கேதா அண்ணா, மதுரா மச்சி, நவீன்,
றஜீவன் அத்தான், தீபன் அண்ணா, மயூ மச்சி, லகிஸ்சன் குட்டி.
மயூரபதி, ஆனைக்கோட்டை. – மாமா பாஸ்கரா.


## VACANCY NOTICE



Vacancy is available for an office Administrator, who is capable and experienced in managing foreign and local staff, logistics, office equipments and Transport. Should be a permanent resident of Jaffna and able to communicate in all three languages. Apply with CV giving the contact numbers of two non related refrees by post to

**GREEN TECH CONSULTANTS (PVT) LTD.**
P.o.Box: 1861, Colombo
or
by e-mail to **hr@gtc.lk**

(29258)(6.7.10)





மண்ணில்
08-04-1987


விண்ணில்
06-02-2009

திதி– துவாதசி

எங்கள் மூத்த
முத்துக் கயூரனே!
எங்கள் அண்ணாவே!
நான்காண்டு
சென்றாலும்
நீ எங்களை விட்டுச்
செல்லவில்லையடா!
எங்கள் விழிகளில்
நீதானடா இருக்கிறாய்!"

அப்பா, அம்மா, தம்பிமார்.

(26325)(6.7.11)



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

### மானஸ், நௌரு தீவுகளில் தற்கொலை முயற்சிகள்:

# விசாரணை நடத்தப்படும் என்கிறது ஆஸி. அரசு

மானஸ் மற்றும் நௌரு தீவு தடுப்பு முகாம்களில் இடம்பெறும், தொடர் தற்கொலை முயற்சிகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று ஆஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் தமது அமைச்சு பதவியை ஏற்றுக்கொண்ட அவர், விரைவில் தாம் நௌரு தீவு முகாமுக்குப் பயணம் செய்யவுள்ளதாக குறிப்பிட்டார்.

இதுகுறித்து குடிவரவுத் துறை அமைச்சர் பிரன்டன் ஓ கோனர் தெரிவித்ததாவது:-

அதன்பின்னரே உரிய தகவல்களை வழங்க முடியும்.

ஆஸ்திரேலியாவில் 40 வருடகாலமாக தாதியாக தொழில்புரியும் மரினே இவார்ஸ் என்பவர் அண்மையில் ஏ.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் குறித்த முகாம்களின் நிலைமை மோசமானது- என்று கவலையுடன் தெரிவித்தார்..

இதேவேளை தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதை நான் அறிந்துள்ளேன். மூன்று வாரங்கள் தாம் அங்கு தங்கியிருந்தபோது 4 தற்கொலை முயற்சி சம்பவங்களைக் கண்டதாகவும் குறித்த தாதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் குழுக்களால் பாலியல் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமக்கு மருத்துவ பணியாளர்கள் கூறியதாக அந்தத் தாதி குறிப்பிட்டுள்ளார். (வ)

## "அந்தர்வாணி" என்றால் என்ன?

''அந்தர்வாணி''என்றால் அகக் குரல் அல்லது ''மனச்சாட்சி''. அறிவு அல்லது புத்திக்கு இது மறு பெயராகும்.

'எனது செயலை என் மனச்சாட்சி அங்கீகரிக்கவில்லை' என ஒருவன் கூறுவானால், அவன், அவனது அந்தர்வாணியின் (அகக் குரலின்) மனச்சாட்சியின் ஆணைப்படி நடந்துகொள்ளவில்லை என்பதாகும்.

ஒரு பிரச்சினை எழும்பொழுது,எம்மை நெறிப்படுத்துவதற்காக நாம் எமது அகக்குரலை எதிர்பார்த்து இருக்கிறோம். அகக் குரலிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்காவிட்டால் மனிதனுக்கு வாழ்வில் எத்தகைய திருப்தியும் ஏற்படாது.

''தலைவனைத் தொடர்வாய்'' எனும் வாக்கியத்தில் தலைவன் எனக் குறிக்கப்பட்டது அந்தர்வாணியை- அகக்குரலை- ஆகும். அகக் குரலின் மனச்சாட்சியின் ஆணையை நாம் பின்பற்றினால்தான் எமது வாழ்வின் சரியான சேர்விடத்தைச் சென்றடைவோம்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



**சாயி சிந்தனை**

## மெய்வன்மைப் போட்டிகள்

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.வித்தியாலய அதிபர் பி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார். (வ-9)

★ ★ ★

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் கிருஷ்ணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரனும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி மத்தி கிராம அலுவலர் பா.லலித்தும் கலந்துகொள்வர். (வ)

★ ★ ★

இமையாணன் அரசினர் தமிழக் கலவன் பாடசாலை வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி என். சந்திர சேகரம் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் முகாமைத்துவம் ஏ.சிறீதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (வ)

★ ★ ★

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் வி.எஸ். மகேந்திரன் தலைமையில்இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய முன்னாள் பல் வைத்திய நிபுணர் வி.ஆர். டேவிற் கலந்து கொள்ளவுள்ளார். (வ)

## உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.7

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

செ.மயூரன்-2ஏபி, சி.அகிலேந்திரன்-3பி, செ.பிர சாந்-2பிசி, க.கௌத மன்-பி2சி

**விஞ்ஞானப் பிரிவு**

அ.ராஜகரன்-ஏ2பி, தே.சந்தியா-2பிசி, செ.திங்கரன்- பி2சி, க.கௌதமி- பி2சி

**வர்த்தகப் பிரிவு**

க.சுகன்யா-3ஏ, கி.கோகுலன்- 3ஏ, செ.சுதன்-2ஏபி, எஸ். நிதர்சினி-ஏ2பி, க.தேன்மொழி-ஏ2பி

**கலைப் பிரிவு**

ம.உஷாந்தி-ஏ,2பி, கௌ.கேமதட்சனி-ஏ2பி, லோ. சர்மினி-ஏபிசி, தி.கோபிகா-3பி,ந.துஜிக்கா- 2பி சி.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

**விஞ்ஞானப் பிரிவு**

பி.பனோஜன்-ஏ2பி, எஸ்.பிரணவன்-பி2சி, (மாவட்ட நிலை-1) ரி.வசீகரன்-ஏபிசி, வி.கோவர்த்-ஏபிசி, கே.தர்சன்-3பி, டபிள்யூ.பெனஜா-3சி, வி.நிதுசன்-3சி

**வர்த்தகப் பிரிவு**

ர.நிரோஷன்-2ஏ,பி, இ.தனு சன்-2ஏ,பி, த.லக்ஷ தன்-2ஏ பி, ஏ.சிவச்சந்திரன்-ஏ2பி, ச.ஜெபதர்சன்-ஏபிசி, சு.கவிசாந்தன்-ஏபிசி, உ.கெங்கேசன்-3பி, சி.சாதோக்-பி2சி

**கலைப்பிரிவு**

அ.யூட் நிசாந்-3ஏ, (மாவட்ட நிலை.12) ஆ.வாணன் -ஏ2பி, சி.குருபர நாத்- ஏ,2பி, ச.சங்கர நேசன்- ஏபி, எஸ், தூ.ஜெரூஜன்- 2பிஎஸ், சிகபிலராஜ்-ஏ2சி,அ.நிரோஜன்-2ஏசி. (வ)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10.09.1975 இறப்பு 07.02.2000

செல்வன்
**இராசரத்தினப் பத்தர் சுகந்தன்**

*தம்பி குஞ்சன்!*
*ஆண்டுகள் பதின்மூன்று ஓடி மறைந்தாலும் என்றும் உன் நினைவுகளுடன் வாழும்!*

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை,சாவகச்சேரி.

குடும்பத்தினர்
நேசம் அழகு நகை.

(29178)(6.6.7)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சுப்பிரமணியம்

*(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் -Dozer Operator)*

யாழ்ப்பாணம், மாட்டீன் றோட்டைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் தற்போது இல.83/1, றக்காவீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான ஆறுமுகம் சுப்பிரமணியம் 05.02.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஆறு முகம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ் சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், வசந்தகுமார் (கனடா), சந்திரகுமார் (G.S.கண்ணாட்டி கணேசபுரம்), சிவாஜினி (இராமநாதபுரம்), இராசகுமார் (வன்னேரி), விஜயகுமார் (A.I.சாவகச்சேரி/அம்பன்), ரவீந்திரகுமார் (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் உதயகுமார் (கனடா), கலாறஞ்சினி (கனகபுரம்), சீத்தாலோஜினி (பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனலட்சுமி (கனடா), சகுந்தலாதேவி (ஆசிரியை, வவுனியா சைவப்பிரகாசா வித்தியாலயம்), வன்னியசிங்கம் (இராமநாதபுரம்), பரமேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர்- வன்னேரி), ஸ்ரெலர்கிறேஸ் (ஜடா- மிருசுவில்), சித்திரா (Canada), லீலாவதி (வவுனியா), பாலதர்சினி (கனடா), நவலோகநாதன் (கனகபுரம்), செல்வகுமார் (பிரான்ஸ்), ராம்மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2013) வெள்ளிக்கிழமை "கீர்த்தனம்" 5ஆம்ஒழுங்கை, கோயில் புதுக்குளம், வவுனியாவில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோயில்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.83/1, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். 0776512373,
0776617949, 0770287272.

**தகவல்:** குடும்பத்தினர். சு.விஜயகுமார் (விவசாய போதனாசிரியர்- சாவகச்சேரி, அம்பன்), சு.சந்திரகுமார் (கிராம அலுவலர் -கண்ணாட்டி கணேசபுரம், வவுனியா)

(C/29258)(6.7.11)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**E.S.பேரம்பலம்**
(வாரிவளவு, காரைநகர்)
(ஸ்தாபகர்
E.S. பேரம்பலம் அன் சன்ஸ்)

செந்நிற மேனியும் செவ்விதழ்ச் சிரிப்பும்
கண்ணுறும் வகையிலா கட்டழகுருவும்
திருநீறு நெற்றியும் திருஅம்பலவன் நாமமும்
தாங்கிநின்று தரணி போற்ற வாழ்ந்தீர்

அன்பினால் நிறைந்து பண்பினால் கடிந்து
தென்பினை ஊட்டித் தேட்டத்தை நாட்டி
நன்மதிப்பூட்டி நல்லறிவு தந்து
பாசத்துடன் வளர்த்தீர் பார் போற்ற வாழ்ந்தீர்

இறைவனவன் பாதம் சேர்ந்து
இருபதாண்டுகளான போதும்
மறக்குமா உம் நினைவு
உங்கள் ஆத்ம சாந்திக்காக
வாரிவளவு ஸ்ரீ கற்பகவிநாயகன்
பாதம் பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மணி ஓசை
383; கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
E.S.P. நாகரத்தினம் அன் கோ
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 13 ஆவது அகவையில்

## கண்ணீருடன் நினைவலைகள்

# ச.சந்துதன்





இன்பத்தில்
07 ☆ 02 ☆ 2000

இன்று 07.02.2013
துன்பத்தில்

விண்ணில்
08 ☆ 09 ☆ 2009

எங்கள் அருமை மகன் சந்துக்குட்டியே
நீங்கள் எமைப் பிரிந்து ஆண்டுகள் மூன்று
உருண்டோடி விட்டதய்யா. நீங்கள்
பிறந்த அந்தப் பொன்னான இந் நாளை
வேதனை நாளாக மாற்றிவிட்டுச் சென்று விட்டீர்.
உற்றாரும் உறவுகளும் ஒன்று கூடிக் குதூகலித்து
மகிழ்ந்த அந்த இன்பமான 9 ஆண்டுகளும்
மறந்துவிடக் கூடியதோ. இன்று நாங்கள்
உம் நிழற்படத்தை வைத்து நினைவுகளை மீட்கின்றோம்.
நீர் நீண்ட துயில் கொள்ளுகின்ற துயில் இல்லத்தைப்
புனரமைத்து, உம் அருகில் அனுதினமும் வந்து கதைத்து
ஆறாத துன்பத்தை ஆற்றிவருகின்றோம் ஐயா.
உமக்காக நாம் அமைத்த கல்லூரிக் கட்டடத்தை
உம் பொன்னான நாளிலே உருவப்படம் நிறுத்தி
நினைவாலயமாக இன்று திறக்கின்றோம் ராசா.
தொலைந்து போன சந்தோஷத்தை இனி மீட்கத்தான்
வழியுண்டோ? இல்லையப்பா. நீ இருந்த அந்த
இன்பமான காலம் மீண்டும் வராதா? என்று ஏங்கி
அழைக்கின்றோம் அருமை மகனே. வாழ என்று பிறந்த
நீங்கள் வாழ்வு நிலையற்றதென்ற தத்துவத்தை எமக்கு
உணர்த்தி விட்டு நிலையான வாழ்வைத் தேடிச்
சென்றுவிட்டீர் தெய்வமே! எங்கள் கண்ணீரும் கவலையும்
அறியாதவனல்ல நீங்கள் மீண்டும் நாம் வந்து
உமைக் காணும் அந்த நல்ல நாளை எதிர்பார்த்து நிற்கும்

**– உமது பெற்றோர்.**

**ம.சண்முகநாதன்**
**அருள்நங்கை**



(சி/6230) (2-6-7)

லக்சுமி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் கிருஸ்ணானந்தா



கொக்குவில் மேற்கு மணியர் பதியை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு C.C.T.M பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கிருஸ்ணானந்தா (ஓய்வுபெற்ற முகாமையாளர்- பேசாலை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்) 02.02.2013 அன்று காலமானார்.

அன்னார் விக்னேஸ்வரியின் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்- பேசாலை பாத்திமா மத்திய மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சரோஜினிதேவி (ஆஸ்திரேலியா), சர்வானந்தா (சொய்ஸா தொடர் மாடி), காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் வசந்தகுமாரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), ஆனந்தராஜா, காலஞ்சென்ற யமுனா மற்றும் தவயோக சிந்தாமணி (லண்டன்), பத்மநாதன் (வவுனியா), காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் (லண்டன்), சொர்ணலிங்கம், காலஞ்சென்ற ராசலிங்கம் மற்றும் சண்முகலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மைத்துனரும், வைதேகி (கனடா), எழில்குமரன் ஆகியோரின் பெரியப்பாவும், அனோஜினி (ஆஸ்திரேலியா), சங்கர், சுரேஷ், ஸ்ரீபவன் (கனடா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மனைவி-
விக்னேஸ்வரி கிருஸ்ணானந்தா
சகோதரன் -
மயில்வாகனம் சர்வானந்தா

(c/5599)(10-6)

## இலவச நீரிணைப்பு வழங்கும் பெருவிழா பெப். 15 இல்

அம்பாறை,பெப்.7

கல்முனையில் 100 வறிய குடும்பங்களுக்கு இலவச நீரிணைப்பு வழங்கும் சேவைத் திட்டப் பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி கல்முனை மாநகர சபை முன்றிலில் நடைபெறவுள்ளது.

முதல்வர் முஹம்மட் சிராஸ் மீரா சாகிப் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், நீதி அமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பஷீர் சேகுதாவூத், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ரீ. ஹஸனலி, எம்.எம்.எம் ஹரீஸ், கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் உட்பட பலர் கலந்து கொள்வர்.

கல்முனை மாநகர முதல்வர், யூ.என். ஹெடொட் நிறுவனத்துடன் பேச்சு நடத்திய தன் பயனாக, இலவச நீரிணைப்பு வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

### தேவை

கடை மற்றும் தங்குவதற்கு வசதி கொண்ட வீடு தேவை. 10 பரப்புக்கு மேற்பட்ட காணியும் தேவை. (யாழ்.நகர்ப்பகுதி விரும்பத்தக்கது)
தொடர்பு:0777777552

### தேவை

கனரக வாகனம் ஓட்டக்கூடிய கொழும்பு, திருகோணமலை பாதை தெரிந்த அனுபவம் உள்ள சாரதி உடன் தேவை. 30-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும், சிங்களம் பேச தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு - 0777281399
(29310)(14)

### மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கான நாகர்கோயில் மணல், கண்டாவளை ஆற்று மணல் என்பன மிகவும் குறைவான விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கே விநியோகிக்கப்படும்.
கருங்கற்சல்லி, செங்கல் விற்பனை
கருங்கல் (6X9), கருங்கல் சல்லி, செங்கல் என்பனவும் குறைவான விலையில் விநியோகிக்கப்படும்.
தொடர்பு:- 0755110767

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கி முகாமையாளர் சி.பெ.அரசகுமார் அவர்களின் பாசமிகு தாய்

### கனகம்மா சின்னத்துரை

அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CHUNNAKAM BRANCH
PAN ASIA BANK

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனப் பணியாளர் T. சுதர்சன் அவர்களின் பாசமிகு மகன் அபிலாஷ் அவர்களின் மறைவு குறித்து துயர் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

STP கணினி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்,
பணியாளர்கள்,

## ஆசிரியர் தேவை

Urumpirai Kids Park, Thirunelvely Smart Kids ஆகியவற்றில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்கள் ஆவணங்களுடன் நேரடியாக 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு சமுகம் தரவும்.
நேர்முகப் பரீட்சை நடைபெறும்
முகவரி
**Urumpirai Kids Park,**
ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய்.
(29301)(6.7.11)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் நித்தியசிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் 105, பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நித்தியசிங்கம் கடந்த (04.02.2013) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, அப்புத்துரை, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற யோகரத்தினம் மற்றும் விநாயகமூர்த்தி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான பூபாலசுந்தரமூர்த்தி (தங்கம்), சுகுமார் மற்றும் யோகமலர், ரோகினிதேவி ஆகியோரின் மைத்துனரும், , காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் மற்றும் ஜெயக்குமார் (வவா - ஜேர்மனி), ஜெயந்திரன் (சுவிஸ்), கிருபாகரன் (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயதேவி (ஜேர்மனி), தனுசா (சுவிஸ்), சங்கீதா (கொலண்ட்) ஆகியோரின் மாமனும், உசேனி (ஜேர்மனி), அட்ஷயன், மாதங்கி (சுவிஸ்), ஆதித்தியா, ஆரூயன், அனுமிதா (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

105, பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி கனகலிங்கம் செல்வநாயகம்



இணுவில் கிழக்கு அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, வட்டுவினி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் செல்வநாயகம் நேற்று முன்தினம் (05.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், செல்லத் துரை, பரமேஸ்வரி, குணநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி (கனடா), ஆனந்த ஜோதி (சிவசிவா- ஜேர்மனி), இந்திராணி (இந்திரா), சந்திரராணி(சந்திரா), அருந்தவராணி (கிளி- கனடா), கமலாதேவி (வவா-ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ் சென்ற சண்முகசுந்தரம்(அப்பையா)மற்றும் வசந்தி, சண்முகரத்தினம், பத்மநாதன், உலகநாதன், சந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமியும், சாலினி, லக்கி, யசோ, அனுரா, சுமன், கஜன், ஆரபி, பைரவி, பிரியா, பவித்திரன், திவ்யா, ஐங்கரன், கமல், சூட்டி, ராஜி, ராஜீப், அபிரா, ஆதித்யா, அட்சயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சுமிக்கா, மயூரன், ஆகிசன், ஆருஜன், ஆரணி, நிலானி, வினோத், அஜித், அஸ்வினா, அஸ்மிரா, கஜன், கபிஷன், அஜீன், ஆறோன், யஸ்மிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுவினி வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 491 6704

# பாராட்டுகின்றோம்

இலங்கை வங்கி கிழக்கு மாகாண
உதவிப் பொது முகாமையாளர்

## திரு.கே.பி.ஆனந்தநடேசன்

அவர்கள், அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் டவர் மண்டபம் மருதானையில் வழங்கப்பட்ட "சாமசிறி தேச மானிய" தேசிய விருதினைப் பெற்றுக் கொண்டதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வீ.ஆர்.சுதாகரன், பிரதிப் பொதுமுகாமையாளர் (கிளைகள்) அலுவலகம்;
இலங்கை வங்கி, கொழும்பு.

(29196)(2.6.7)

# பொருளியற் கல்லூரி - BARATHY

நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ்.றோட், இணுவில். | பிரதான வீதி, சித்தன்கேணி

அரசியல் பாடத்தில் யாழ்.மாவட்டத்தில் அதிகப்படியான A தர சித்தி களையும் B தர சித்திகளையும் ஏனைய சித்திகளையும் பெற்று எனக்கு பெருமையீட்டித் தந்த அனைத்து மாணவர்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

**A/L DAY CLASS**

வாரத்தில் 6 மணித்தியாலங்கள்

**அரசியல்**

S.கோகுலன் B.A.(Hons),Political (SPL)

A/L DAY CLASS புதியவகுப்புக்கள் ஆரம்பமாகி மூன்று நிறுவனங்களிலும் நடை பெறுகின்றன.

✱உங்கள் அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்.

(சி/6259)(5-6-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் சாரதியாக கடமையாற்றும் செ.அரியானந்தம் அவர்களின் அன்புத் தந்தையார்

## நல்லதம்பி செல்லத்துரை

அவர்கள் 03.02.2013 அன்று இறைபதம் அடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர், பணியாளர்கள்
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(c/6260)(6.7.11)

# பசீர் சேகுதாவுக்கு அமைச்சுப் பொறுப்பு; ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

அம்பாறை,பெப்.7

பசீர் சேகுதாவுத் அமைச்சுப் பொறுப்பை பெற்றுள்ளமை குறித்து அரசியல் அதி உயர் பீடத்துக்குக் கொண்டு சென்று ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம் பாறை மாவட்ட மத்திய குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் இடம் பெற்றபோதே இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர் கள் கலந்து கொண்ட கூட்டத்தில், கட்சியின் தவிசாளரான பசீர் சேகுதாவுத் அமைச்சுப் பொறுப்பை பெற்றமை குறித்து விவாதம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் கட்ட மைப்பை உடைத்துக்கொண்டு அமைச்சுப் பொறுப்பை பெற்றுக்கொண்டமை தவறா னது என்று அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்தனர். (ச)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


# ஆசிரியர் தேவை

கொக்குவில் மேற்கில் நீண்டகாலம் இயங்கும் தனியார் கல்வி நிலையத்திற்கு O/L வரை பின்வரும் ஆசிரியர்கள் தேவை.

✱ தமிழ் ✱ வர்த்தகம் ✱ சுகாதாரம்
✱ புவியியல் ✱ தமிழ் இலக்கிய நயம்

மாலை 6.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். 0774701492

A/L சூழநிலை வகுப்பு செய்ய விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

(29198)(6.7.11)

# Personal /group class

(Tamil & English)

தரம் 7 தொடக்கம் O/L வரை விஞ்ஞானமும் A/L மாணவர்களுக்கு உயிரியலும் கற்பிக்கப்படும்.

(25 வருட வினாத்தாள் செய்விக்கப்படும்)

தொடர்பு- 0770232782

(29194)(6.7.11)

# யா/மகாஜனக்கல்லூரி

## தெல்லிப்பழை

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர்

## திறனாய்வுப் போட்டி - 2013

தலைவர் : திரு. கு. வேல்சிவானந்தன் (அதிபர்)
இடம் : கல்லூரி மைதானம்

**திறனாய்வுப் போட்டி - 2013**
**ஆரம்பப் பிரிவு**
காலம்
08.02.2013 பி.ப 1.00 மணி
(வெள்ளிக்கிழமை)

*பிரதம விருந்தினர்*
திரு. நாகமணி வடிவேஸ்வரன்
மகாஜனன்
(இலங்கை உதைப்பந்தாட்ட அணி முன்னாள் வீரர்)
திருமதி செல்வகுமாரி வடிவேஸ்வரன்

*சிறப்பு விருந்தினர்*
திருமதி சௌமியா விசுவலிங்கம்
மகாஜனன்
(ஓய்வு பெற்ற உப அதிபர் யா/மகாஜனக் கல்லூரி)
திருமதி பாகீரதி கணேசதுரை
மகாஜனன்
(ஓய்வு பெற்ற உப அதிபர் யா/மகாஜனக் கல்லூரி)

**திறனாய்வுப் போட்டி - 2013**
காலம்
09.02.2013 பி.ப 1.00 மணி
(சனிக்கிழமை)

*பிரதம விருந்தினர்*
திரு. கனகசபை சத்தியபாலன்
மகாஜனன்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
திருமதி கீதா சத்தியபாலன்

*சிறப்பு விருந்தினர்*
திரு. சுப்பையா சண்முககுலகுமாரன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழை)

(c/6262) (6-7-10)



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பாடசாலை மேம்பாட்டுக்குழு, நலன்விரும்பிகள்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 • 08 • 1958



மறைவு 11 • 01 • 2013

## அமரர் நவரத்தினம் யலீந்திரா

கடந்த (11.01.2013)அன்று சிவபதமடைந்த நவரத்தினம் யலிந்திரா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (08.02.2013)வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற விருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராதம்பு
கோப்பாய் வடக்கு,கோப்பாய்.

(2919?)(5.6.7)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பிஐயா யுகநாதன் (ரஞ்சன்)

(நயினாதீவு)



நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக வும், நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாக வும் கொண்ட தம்பிஐயா யுகநாதன் (ரஞ்சன்) 05.02.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிஐயா-சிவக்கொழுந்து தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கராசா மற் றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகபரமேஸ்வரியின் அன்புக் கணவரும், லிங்கநாதன், சாந்தினிதேவி, நந்தகுமாரி (சுவிஸ்), இரத்தினகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதர னும், நாக இராஜேஸ்வரி, நாகசிவனேஸ்வரி, காலஞ்சென்ற நவரெத் தின ராசா மற்றும் நாகவரலேஸ்வரி (சுவிஸ்) அமிர்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2013) வியாழக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நயினாதீவு, சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த. அமிர்தராசா
(அமுதன்-மைத்துனர்)
5ஆம் வட்டாரம், நயினாதீவு.
தொ.பே:0213008188

தகவல்:
குடும்பத்தினர்.

(29263) (10-6-10)

*கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது... (வெளி 14:13)*

### திருமதி

## கனகம்மா சின்னத்துரை



உடுவில் களவியவத்தையைப் பிறப் பிடமாகவும், சங்குவேலி வடக்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத் துரை கனகம்மா நேற்று முன்தினம் (05.02.2013) செவ்வாய்க்கிழமை தனது 92ஆவது வயதில் கர்த்தருக்குள் நித்திரை யடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியார்-நாகம்மா தம்பதியரின் அன்பு மக ளும், காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் வைத்தி சின்னத்துரையின் அன்பு மனை வியும், காலஞ்சென்றவர்களான அரச நாதன், அரசேந்திரன் மற்றும் தேவியற்கரசி (ஓய்வுபெற்ற லிகிதர்), அரசகுமார் (ஓய்வுபெற்ற முகாமையாளர்- இலங்கை வங்கி), பூவை யற்கரசி (கனடா), அரசதுரை (கனடா), அரசஜோதி (ஜேர்மனி), அரசநாயகம் (கனடா), கலாநிதி அரசகேசரி (மேலதிக பணிப் பாளர், விவசாய ஆராய்ச்சி வட பிராந்தியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், றீற்றா தேவி, மொனிக்கம்மா, தேவநேசன், ஜெனிற்றா (கல்வித்திணைக்களம்), யேசுதாசன், சுந்தரலிங்கம் (கனடா), கல் யாணி (கனடா), சுதா (ஜேர்மனி), பரமேஸ்வரி (கனடா), சறோஜினி தேவி, காலஞ்சென்ற றமிலா ஆகியோரின் அன்பு மாமியும், டிவினியா (கனடா), றோகன் (ஜேர்மனி), சர்மிலா (பிரான்ஸ்), சிந்து (கனடா), டிமோ (கனடா), மொறின் (பிரதேச செயலகம்-சங்கானை), யூடி, நியூஜன் (சுவிஸ்), சின்ரா (கனடா), றெனுஜா (ஆசிரியை), Dr. றூபகன் (சிலாபம்), Dr. டிலான் (யாழ்ப்பாணம்), காமினிற்றா (யூனி யன் வங்கி), றொஸ்டன் (ஜேர்மனி), றொசாய்றோ, றொமன்ஸ், றொஸ்னா, ஆன் கியூரி (கனடா), கிசான் (கனடா), லிஸ்னா (கனடா), ஸ்றெபான் (ஜேர்மனி), அபினா (ஜேர்மனி), அஜித்தா (ஜேர் மனி), யோசுவா (கனடா), மக்டலின் (கனடா), ஜொகான்சன் (இந்தியா), றேச்சல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனைகள் எதிர்வரும் (09.02.2013) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பிற்பகல் 3.30 மணிக்கு மல்வம் சேமக்காலையில் நல்ல டக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(29261) (6.7.10)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெப்ரவரி மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர் கிடைக்கவில்லை

தென்மராட்சி, பெப்.7

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் ஓய்வூதியம் பெறும் மூவருக்கு பெப்ரவரி மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது:-

ஓய்வூதியர்களுக் கான டிசெம்பர் மாத வவுச்சருடன் இந்த வருடத்திற்குரிய வாழ்க்கை அத் தாட்சிப் பத்திரம் அனுப்பப்பட்டு ஜனவரி இருபதாம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியர்களால் கையளிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் பல ஓய்வூதியர்கள் தமது பத்திரங்களைப் பூர்த்தி செய்து வழங்கி யுள்ளனர்.

இதுவரை வாழ்க்கை அத் தாட்சிப் பத்திரம் சமர்ப் பிக்காத சிலரின் வவுச்சர்களே பிரதேச செயலகத்தில் வைக் கப் ட்டுள்ளன.

குறித்த ஓய் வூதி யர்கள் அந்தப் பத் திரத்தைப் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் கையளித்து பெப்ரவரி மாதத்துக் குரிய வவுச்சர் களைப் பெற்றுக் கொள்ள லாம் எனத் தெரிவிக் கப்பட்டது.

(ம-9)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
T.P 0777 2776 70 Colombo 12.




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் வீரசக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்
★ நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்
★ காலை முதல் மாலைவரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்
★ மழலைகட்கும் மகப்பேற்றுத்தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் முதுமைக் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்

சந்தைப்படுத்துவோர்:- சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- றோயல் இன்டஸ்ரீஸ், ஆல்வொன்ஸ் ஸ்றீற், கொழும்பு - 13

(C/6257) (2.6)


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி அழகம்மா கந்தசாமி

(மேரி போல் - முன்னாள் ஆசிரியர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.)



மண்ணில்
01★ 04 ★ 1941

விண்ணில்
07★ 02 ★ 2005

பட்டங்கள் இருந்தென்ன
பதவிகள் இருந்தென்ன
அம்மா என்று அழைக்க
யாரும் இல்லை இப் பூவுலகில்

தம்பசிட்டி, பருத்தித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாரதா சம்பந்தன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாரதா சம்பந்தன் நேற்று (06.01.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி டாக்டர் N.T. சம்பந்தனின் (முன்னாள் வைத்திய அதிகாரி, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை) அன்பு மனைவியும் சுபாஸ்சந்திரன் (கனடா), T.S. நாகலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும், திருமதி சு.ஜெயந்தி (கனடா), திருமதி நா.றோகினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், நா. நிருத்தன் (கொழும்பு), சுபாசினி, கீதா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.02.2013) வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கிரியைகள் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(29262)(2-6.7)

தகவல்: T.S. நாகலிங்கம். 0776010252

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**Dr.ஆறுமுகம் நாகலிங்கம்**
தோற்றம் - 26.03.1928
மறைவு - 19.01.2012
திதி: 07.02.2013



திருமதி
**நாகலிங்கம் பொன்னம்மா**
தோற்றம் - 06.03.1933
மறைவு - 20.10.2011
திதி: 08.11.2012

அன்புடனும் பாசத்துடனும் பண்புடனும் வளர்த்த
எங்கள் அன்புத் தெய்வங்களே!
அன்னையே! எம்மை விட்டுப் பிரிந்து
தொண்ணூறு நாள் தனில் தந்தையையும்
அழைத்துச் சென்றீர்களே!
நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
இரும்பாக்கி எம் மனதை இறுக்க நினைத்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை வாட்டுகிறதே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கதிர்காமகோயிலடி,
வதிரி,கரவெட்டி.

(29070)(5.6.7)

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி ருக்மணி நடராசா



திதி:-07.02.2013

எம் அன்புத் தெய்வமே! அம்மா!
பாசத்தின் வடிவமாகப் பாரினில்
எமையெல்லாம் பண்பு சொல்லி
பரிவுகாட்டிப் படிக்க வைத்து
பாதியிலே உன் செல்வங்கள் பரிதவிக்க
தாயில்லாப் பிள்ளையோ காலனவன்
தாய் மடிக்கேங்கி உனைக் கவர்ந்தானோ?
மௌனத்துயர் அமர்ந்து நம் இதயம்
விம்மித் துடிப்பதென்ன?
அலைபாயும் மனமும் நிலைசோரும்
உடலும் உனைப்பார்க்கத் தவிக்கின்றன
உங்கள் முகம் ஆங்காங்கு எல்லாம்
கண்டு அகமெல்லாம் கலங்குகின்றதே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா! அம்மா
அன்போடு எமை அரவணைத்து
பண்போடு எமை வழிநடத்திய
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
மூன்றாண்டுகள் உருண்டோடி விட்டதே அம்மா
இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகள்
உருண்டோடினாலும் உங்கள்
நினைவுகள் என்றுமே எம்மை விட்டுப்பிரியாது
மீண்டுமொரு புது ஜென்மம் எடுத்திங்கு
எமதுயிரை விடுவிக்க வேண்டுமம்மா?
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

- நடராசா (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மலர்வு
01.05.1945

உதிர்வு
10.02.2010

138,சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# இறுதிக்குள் ஜொலிஸ்ரார்

வலி.வடக்கு, பெப்.7

கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்காக, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 30 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அரையிறுதி ஆட்ட மொன்றில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 8 இலக்குகளினால் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக குமணன் 58 ஓட்டங்களையும், ரஜித்தன் 19 ஓட்டங்களையும், டக்சன் 18ஓட்டங்களையும், விதுசன் 14 ஓட்டங்களையும், பிரியதர்சன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகள்ாக 35 ஓட்டங்களும் பெறப்பட்டன.

அணி சார்பாக குமணன் 58 ஓட்டங்களையும், ரஜித்தன் 19 ஓட்டங்களையும், டக்சன் 18ஓட்டங்களையும், விதுசன் 14 ஓட்டங்களையும், பிரியதர்சன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மணிவண்ணன் 4பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், நிரோஜன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பிரியதர்சன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கிசோகன், பகீரதன் ஆகியோர் தலா ஒவ்வெரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

192 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ''ஜொலிஸ்ரார்'' விளையாட்டுக் கழகம் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 195 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் மதுசன் 11 பவுண்டரிகள் , ஒரு சிக்ஸர் அட்ஙகலாக 80 ஓட்டங்களையும், நிரூஜன் ஆறு பவுண்டரிகள் , ஒரு சிக்ஸர் உட்பட ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும், உமா ஆட்டமிழக்காது 33ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 17 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விதுசன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், ஹரிவதனன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினை வீழ்த்தியதன் மூலம் ஜொலிஸ்ரார் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

(ங-86)

## இன்றைய ஆட்டங்கள்

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று வியாழக்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3மணி

ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி

எதிர்

அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம்

★ ★ ★

ஆர்.இராசேஸ்வரன், மகிதரன் ஆகியோரின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான பொங்கல் விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப 4.45.மணி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் (பச்சை) எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலைகளுக்கு இடையில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பி.ப 3மணி

வேம்படி மகளிர் கல்லூரி அணி எதிர் இராமநாதன் கல்லூரி அணி

பி.ப.4மணி

யாழ் இந்துக் கல்லூரிஅணி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி. (ங-23-228)

# கோப்பாய் மகாவித்தியாலய நூற்றாண்டு விழாப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.கோப்பாய் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா எதிர்வரும் மார்ச்மாதம் கொண்டாடப்படவுள்ளது.

கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் ஒரு அங்கமாக மரதன் ஓட்டம், கிரிக்கெட் சுற்றுப்போட்டி, கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் (பெண்கள்) ஆகிய போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் கோப்பாய் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளும், கோப்பாய் பிரதேச செயலக நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களும் பங்குபற்ற முடியும். கழகங்களுக்கு வேறாகவும், பாடசாலைகளுக்கு வேறாகவும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கோப்பாய் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளும், கோப்பாய் பிரதேச செயலக நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட கழகங் களும் பங்குபற்ற முடியும்

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பெற்று கல்லூரியில் சமர்ப்பிக்குமாறு அதிபர் க.வீரசிங்கம் கேட்டுள்ளார். (ங-23)

# நவீல்ட் மெய்வன்மை நாளை கராத்தே காட்சி

யாழ்ப்பாணம், பெப். 7

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப்போட்டியில் இடைவேளை சிறப்பு நிகழ்வாக 'கராத்தேக் காட்சி' நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன்தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணியளவில் குறித்த பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி நடைபெறவுள்ளது.

இதன்போது தேசிய மட்டத்தில் பங்குபற்றி சாதனைகளையும், விருதுகளையும் வென்ற நவீல்ட் பாடசாலை மாணவர்களின் கராத்தேக் காட்சிகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

(ங-4-23)

# மகாஜன வீதியோட்டத்தில் வென்றோர்...





பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர்



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான வீதியோட்டப் போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் முறையே ம.தர்ஜன், ம.ஜனனன், சோ.நிரோஜன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் முறையே பா.சானு, ம.ஜான்சிகா, ச.சரண்யா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (ங-86)

# சுப்பர் - 6 சுற்றுக்குள் இலங்கை




இந்தியாவில் இடம் பெற்று வரும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளின் சுப்பர் 6 சுற்றுக்கு இலங்கை அணி தகுதிபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்திய அணிக்கெதிரான போட்டியில் 138 ஓட்டங்களால் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றே இலங்கை அணி சுப்பர் 6 சுற்றுக் தகுதிபெற்றது.

மும்பை பிரட்பேர்ண் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 282 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது இலக்கை 4 ஓட்டங்களுக்கே இழந்த இலங்கை அணி இலக்குக்காக 117 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து வந்த வீராங்கனைகளும் சிறப்பாக ஆட இலங்கை அணி பலமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக தீபிகா ரசங்கிக்கா 109 பந்துகளில் 84 ஓட்டங்களையும், அணித்தலைவி ஷஷிகலா சிரிவர்தன 67 பந்துகளில் 59 ஓட்டங்களையும், இஷானி கௌஷல்யா 31 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், யசோதா மென்டிஸ் 80 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ஜூலன் கோஸ்வாமி 3 இலக்குகளையும், அமித்தா சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற 283 ஓட்டங்களையும், சுப்பர் 6 சுற்றில் தகுதிபெற ஆகக்குறைந்தது 251 ஓட்டங்களையாவது பெற வேண்டுமென்ற இலக்கோடு களமிறங்கிய இந்திய அணி 42.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 138 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.


துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக நீமா மல்கோத்ரா 51 பந்துகளில் 38 ஓட்டங்களையும், திருஷ் காமினி 22 ஓட்டங்களையும், அணித்தலைவி மித்தாலி ராஜ் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக அணித்தலைவி ஷஷிகலா சிரிவர்தன, சாமனி செனவிரத்ன ஆகியோர் தலா 2 இலக்குகளையும், இஷானி கௌஷல்யா, உதேஷிக்கா பிரபோதனி, ரீபாலி வீரக்கொடி, இனோக்கா ரனவீர, சன்டமாலி தொலவட்டே ஆகியோர் தலா ஒவ்வோர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் முடிவு காரணமாக குழு ''ஏ''யில் இருந்து இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் சுப்பர் 6 சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளன. குழு ''பி''யில் இருந்து ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா அணிகள் தகுதிபெற்றுள்ளன.

(ந)


இஷானி



தீபிகா ரசங்கிக்கா

# தீவுகளை அடக்கியது ஆஸி.

ஷேன் வொட்சனின் அபார சதத்தின் உதவியுடன் மேற்கிந்தியத் தீவுகள் மீண்டும் ஒரு தடவை வீழ்த்தியது ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று ஆஸி. அணி முன்னிலை பெற்றிருந்த நிலையில் மூன்றாவது போட்டி கான்பராவில் நேற்று நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸி. தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சை சிதறடித்த ஆஸியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான வொட்சன் - பின்ச் இருவரும் சிறப்பான அடித்தளம் இட்டனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 89 ஐ தொட்டபோது சமியின் பந்தில் 38 ஓட்டங்களுடன் பின்ச் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் வொட்சனுடன் இணைந்து கொண்ட கியூஸ் தன் பங்குக்கு அதிரடியில் இறங்கினார். இதனால் ஆஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயரத் தொடங்கியது. அபாரமாக ஆடிய வொட்சன் (122) சதமடித்து றோச்சின் பந்தில் பிடிகொடுத்து வெளியேறினார். அதனைத் தொடர்ந்து களம் இறங்கிய அணித் தலைவர் கிளார்க் (15) ஏமாற்றினார். தொடர்ந்து போராடிய கியூஸ் (86) அரைச் சதம் கடந்து களத்தை விட்டு அகன்றார். அதன் பின் வந்தார் பெய்லி. பவுண்டரிகளை விளாசி எதிரணிக்கு கிலியை ஏற்படுத்தினார். ஆயினும் அவரது வேகத்துக்கு சுனில் நரேன் வேட்டு வைத்தார். சர்ச்சை வீரர் மக்ஸ்வெல் சிக்ஸருக்கு அனுப்பிய பந்தை எல்லைக் கோட்டில் வைத்து பாய்ந்து பிடித்து அவரையும் களத்தை விட்டு அகற்றினார் பொலார்ட்.





அதன் பின் வந்தவர்கள் பெரிதாக ஜொலிக்கவில்லை. எனினும் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஆஸி.அணி 7 இலக்குகளை இழந்து 329 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

மிகப்பெரிய இலக்கை விரட்டத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 54 ஓட்டங்களை எடுத்திருந்த போது முதல் இலக்காக தோமஸை (19) இழந்தது. ஓரளவு தாக்குப்பிடித்த பவலும் 47 ஓட்டங்களுடன் வெளியேறினார். மேற்கிந்தியத் தீவுகள் அணி 81 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்தபோது டுவைன் பிராவோவும், டெரன் பிராவோவும் இணைந்து கொண்டனர். இருவரும் மிகச் சிறப்பாக ஆடி 100 ஓட்டங்களை இணைந்து பெற்றனர். ஆயினும் டெரன் பிராவோ 86 ஓட்டங்களுடனும், டுவைன் பிராவோ 51 ஓட்டங்களுடனும் வெளியேறினர். அதிரடி நாயகர்களான கெய்லும் (2), பொலார்ட்டும் (9) சொற்ப ஓட்டங்களுடன் நடையைக் கட்ட ஆஸி.அணியின் வெற்றி உறுதியானது. இறுதியில் 47.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 290 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

இதனால் ஆஸி.அணி 39 ஓட்டங்களால் வெற்றியீட்டி, 3:0 என்ற ரீதியில் தொடரையும் கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக சதம் விளாசிய ஷேன் வொட்சன் தெரிவானார்.

(ந)

# சிங்கள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இன, மத எதிர்ப்பு சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்று புத்தசாசன மத விவகாரப் பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன ஜனவரி 21 ஆம் திகதி கூறினார்.

அவர் அவ்வாறு கூறிக்கொண்டிருந்தபோதே குளியாப்பிட்டியில் பௌத்த தேரர்களையும், சாதாரண மக்களையும் உள்ளடக்கிய குழு ஒன்று வாகனத்தில் அல்லாஹ் என்று எழுதி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஏற்கனவே பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டும்கூட பொலிஸார் அதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### மிக அபாயகரமான நிலை

இதுவரை 10 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களுக்கு எதிராக 10 ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அரசு உடன் தலையிட்டு இந்த அபாயகரமான நிலைமையைத் தடுக்கவேண்டும்.

அரசு இதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் மேலும் விரிசல்கள் அதிகரிக்கின்றன. சிங்களவர்கள் சிறுபான்மையினராக மாறிக்கொண்டிருக்கின்றனர் என்ற கருத்து வேண்டுமென்றே பரப்பப்படுகின்றது. தெற்கின் 7 மாகாணங்களில் சிங்களவர்கள் சிறுபான்மையினராகி முஸ்லிம்கள் பெரும் பான்மையினராக அதிகரித்துக்கொண்டு போகின்ற இடங்கள் காட்டப்படுகின்றன.

போர்த்துக்கேயரின் வருகையின்போது இலங்கையில் முஸ்லிம்கள் எவரும் இருந்திராத வரைபடமும் மறுபுறம் காட்டப்படுகின்றது.

சிங்கள மக்களின் விகிதாசாரம் 1947இல் 63 சதவீதமாக இருந்து காலத்துக்குக்காலம் அதிகரித்து, இப்போது 75 சதவீதமாக உள்ளது.

ஆனால், அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறியதால் சிறுபான்மையினர் விகிதாசாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சிங்கள மக்கள்தான் இந்த நாட்டின் பெரும்பான்மையினர். அவர்கள் தொடர்ந்து பெரும்பான்மையினராகவே இருப்பர். ஆனால், தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் வாழும் உரிமையைக் கொண்டுள்ளனர். அவர்கள் சமமாக நடத்தப்படவேண்டும் என்று டி.எஸ்.சேனநாயக்க அப்போது கூறினார்.

இரண்டாவதாக, ஹலால் சான்றிதழ் பிரச்சினை. இது ஒரு சுயாதீன விடயம். அந்தச்சான்றிதழைப் பெறுமாறு ஏதாவது ஒரு வர்த்தக நிறுவனம் கட்டாயப்படுத்தப்பட்டால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும்.

அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னைச் சந்தித்த முஸ்லிம் தலைவர்கள் விருப்பம் தெரிவித்துள் ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அரசு ஏன் முஸ்லிம்களுட னும், வர்த்தக சமுகத்துடனும் பேச்சு நடத்தாமல் உள்ளது?

### ஜிஹாத்துக்குப் பிழையான விளக்கம்

'ஜிஹாத்' என்பதற்கு பொய்யான, பிழையான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தை ஏற்காதவர்களை அழிக்கும் பயங்கரவாத அமைப்புதான் 'ஜிஹாத்' எனப் பிழையான அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்துக்கு எதிராக அதிகமான இணையத்தளங்கள் செயற்படுகின்றன. இவ்வாறான இணையத்தளங்கள் தொடர்பில் அரசு மௌனமாக உள்ளது. சட்டம் ஒழுங்கு மீறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தம்புள்ளை பள்ளிவாசல் உடைக்கப்பட்டபோது அரசு உரிய நடவடிக்கையை எடுத்திருந்தால், இன்று சட்ட ஒழுங்கு மீறப்பட்டிருக்காது.

இந்த விடயத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் அமைதியாக இருப்பது தொடர்பில் நாம் அதிர்ச்சியடைகிறோம்.

கிழக்கு முஸ்லிம் முதலமைச்சர் தொடர்பில் கூக்குரல் போட்டவர்கள் இப்போது ஊமையாக உள்ளார்கள். அவர்களுக்குப் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்வதுதான் முக்கியமானதாக உள்ளது.

சிங்களவர்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும். ஆனால், தமிழ், முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிப்பதற்குஎவருக்கும் உரிமை கிடையாது.

முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படும் என்று சபை முதல்வர் கூறியதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இதற்கு முன்னரும் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் எடுத்த நடவடிக்கையின் இலட்சணம் தொடர்பில் நாம் நன்கு அறிவோம். ஆகவே, இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசு என்ன நட வடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டும் - என்றார். (த-2)

# நாவற்குழியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குழியில் நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது இலங்கை அரசின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வித்தியாசத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

### தேசிய நல்லிணக்கம் கேலிக் கூத்தாகிறது

எந்த இனத்தவரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழலாம். இதை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அரசின் நேரடியான - மறைமுகமான ஒத்துழைப்பைப் பெற்று இனரீதியாக ஆக்கிரமிக்கும் நோக்குடன் குடியேறுவதென்பது, தேசிய நல்லிணக்கத்தைக் கேலிக் கூத்தாக மாற்றும் செயல்.

ஜனாதிபதி சுதந்திர தினத்தில் ஆற்றிய உரைக்கு நான் பதிலளித்துக் கூறியது, சில நாள்களிலேயே சரி என்று நிரூபணமாகியுள்ளது.

இந்தியாவோ, அமெரிக்காவோ நாவற்குழியில் வந்த இந்தச் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பார்த்திருக்க முடியாது. தமிழ்த் தேசியத் தலைவர்கள் தோழமைக் கட்சிகளுடன் இணைந்து இதனைச் சாத்வீக வழியில் எதிர்க்க வேண்டும். இதுவே எமக்கிருக்கும் ஒரே வழி - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இது குறித்துத் தெரிவிக்கையில்:-

கொழும்பில், காலியில், அம்பாந்தோட்டையில் அல்லது வேறு எங்காவது இவ்வாறு நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் அத்துமீறிக் குடியேறி இருக்க முடியுமா?

இங்கே சிங்களவர்கள் வந்து இராணுவப் பின்புலத்துடனும் அமைச்சர்களின் ஒத்துழைப்புடனும் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். சிங்கள மக்கள் தாங்கள் விரும்பியவாறு எல்லாம் செய்யலாம் என்று நினைத்தால் அது தவறு. சிங்கள மக்கள் நாவற்குழியில் அடாத்தாகப் பிடித்துள்ள காணி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானது. இந்தக் காணியை விட்டு, அந்த மக்களை வெளியேற்றுமாறு அமைச்சு உத்தரவிட்டிருந்ததாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2010 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர்கள் இங்கே தங்கியிருந்து தற்போது நிரந்தர வீடுகளும் நிர்மாணிக்கத் தொடங்கிவிட்டனர். அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதனை விளக்கமாகத் தெரிவித்து அவர்களை வெளியேற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத்திலேயே ஆயிரக்கணக்கான மக்கள் காணியில்லாமல் இருக்கும்போது, இவர்கள் எங்கேயிருந்தவர்கள்?, இவர்களுக்கு எப்படிக் காணி வழங்க முடியும்? இந்தச் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் முன்னர் இருந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் அதற்கான ஆதாரமோ ஆவணமோஎதுவுமில்லை. அத்துடன் அவர்களுக்குக் காணிகளும் இருந்ததில்லை - என்றார். (த-5)


**CIMA-UK புலமைப்பரிசில் திட்டம்**

தற்போது A/L பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மாணவர்களிற்கு CIMA-UK பதிவுக்கட்டணம் **16000** ரூபாவிற்கான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. மேற்படி புலமைப்பரிசிலை பெறவிரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபரின் சிபாரிசு கடிதத்துடன் 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள **MCS IT CAMPUS** (CIMA Listed College) நேரில் கையளிக்கவும்.

இணைப்பாளர்-CIMA T.P 772 395 895



**A/L 2012 பரீட்சை முடிவுகள்.....!**

**அடுத்தது என்ன?**

17 வருட கால அனுபவமும், பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு வளமான எதிர்காலத்தையும் உருவாக்கிக் கொடுத்த எமது நிறுவனம் உங்களுக்கும் வழிகாட்ட காத்திருக்கின்றது.

**கலந்துரையாடல்**

விடயம் :- உள்நாட்டு / வெளிநாட்டு உயர்கல்வியும், வேலைவாய்ப்பும்

காலம் :- 09.02.2013 சனிக்கிழமை காலை 10.00 மணி

இடம் :- IIS City Campus [200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்]

காலம் பொன்னானது.....

விரைவாக சிந்தியுங்கள்....செயற்படுங்கள்......




இன்றே இந்த நிமிடமே உங்கள் வளமான எதிர்காலத்தை நோக்கி முதல் அடியினை எடுத்து வையுங்கள், கை கொடுக்க நாம் காத்திருக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி [வைத்தீஸ்வராச் சந்தி அருகில்], யாழ்ப்பாணம்
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் மிக விரைவில்... T.P.: 021 222 8093
# 61, Kachcheri Nallur Road, Jaffna.
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

ORIFLAME **ஒறிபிளேம் பொதுக்கூட்டம்**

அன்பார்ந்த ஒறிபிளேம் ஆலோசகர்களே!

ஒறிபிளேம் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இலவச அழகுக்கலைப் பயிற்சியில் கலந்து பயிற்சிபெற்ற அனைத்து மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் கீழ்வரும் திகதியில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் ஒறிபிளேம் நிறுவனத்தினால் பல திட்டங்களை அறிமுகப்படுத்த உள்ளோம். இந்தப் பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன் அடையுங்கள்.

திகதி: 09.02.2013(சனிக்கிழமை)
நேரம்: 10.00 மணி
இடம்: ஒறிபிளேம் நிறுவனம் (29187)(8.6)

(187/50, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
தொடர்புகளுக்கு: 021 5888000/01-0727712604
கிளை முகாமையாளர்.

**வெளிநாட்டுக் கல்வி தொடர்பாக எம்மவர்கள் ஏமாற்றப்படும் வழிகளும் அதனைத் தவிர்க்கும் வழி முறைகளும் திசைகாட்டியின் இலவச விசா விழிப்புணர்வுக் கருத்தரங்கு**

A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து பயன் பெறலாம்.

விடயதானங்கள்

* வெளிநாட்டுக் கல்விக்குத் தேவையானவை எவை?
* பிற நாட்டுக் கல்வி நிறுவனங்களின் தரம் ஸ்திரத்தன்மை
* கல்வி கற்றுக் கொண்டே உழைக்க வழி என்ன?
* நாடுகள் பற்றிய அலசல்
* அவசியமான வினாக்களிற்கு உரிய பதில்கள்

வளவாளர்:- வடமராட்சியின் மைந்தன் திரு.ஜே. றெட் B.SC (Hons) University of West England.

இடம்:- திசைகாட்டி குழுமத்தலைமைக்காரியாலய கேட்போர் கூடம்.

காலம்:- 10.02.2013 ஞாயிறு மு.ப 10 மணி

முற்பதிவு 0212219016 என்ற தொலைபேசி மூலம் முன்பதிவு செய்யவும்.



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(29184)(6.7.11)

**கணக்கீடு**

திரு.பாலகஜன் B.Com(Jaf), H.N.Dip-in-Acc

| A/L 2013 | முகாமைக் கணக்கீடு | DAY BATCH |
|---|---|---|

| NEC-ஆனைப்பந்தி | புதிய பொருளியல் கல்லூரி மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்நகர் |
|---|---|
| Sat Sun } 8-9 A.M | Sat Sun } 1-2 P.M |

ஆரம்பம்:
09.02.2013 சனிக்கிழமை

**தவறிவிட்டது**

பெரியமாவடி சாவகச்சேரியை சேர்ந்த இரத்தினராசா மயூரதன் என்பவருடைய தே.அ.அ (861234363 V), சாரதி அனுமதிப்பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி மற்றும் மயூரதன் லவாணி என்பவருடைய தே.அ.அ (867934120V) ஆகியன பெரிய மாவடிக்கும் வித்தகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0776454998

**A/L DAY CLASS**

கலை, வர்த்தகம்

ஆரம்பம்:07.02.2013(வியாழக்கிழமை) 6.30a.m

எமது தனித்துவமான ஆசிரியர் சேவை

யூனிவேர்சல்-கந்தர்மடம்

Group மற்றும் Personal Class
இரசாயனவியல்
சி. அனோஜன் (B.Sc)
தொடர்பு: 0770781451

**ஓராண்டு நினைவஞ்சலி**



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி அருட் செல்வி ஸ்ரீதரன் அவர்களின் அன்புக்கணவர்

அமரர்

**கந்தசாமி ஸ்ரீதரன்**

அவர்கள் இறைபதமடைந்த இந்நாளில் அவரது ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(28335)(6.14)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.